www.padippakam.com

விலை ரூ.7-

# சிந்தனையாளன்

திருவள்ளுவராண்டு 2032 பெரியாராண்டு 123 அக்டோபர் 2001



- தில்லியில் "பெரியார் தொண்டு நிறுவனம்" விழுதுகளும் வேர்களும்
- ஓ,ஓ அமெரிக்கா ! ஓ, ஓ இந்தியா !
- இராமாயணத்தைக் கொளுத்துங்கள் !
- சென்னைப் பல்கலைக் கழகத்தின் அதிவேகச் சாதனைகள்.

படிப்பகம்

www.padippakam.com

## உள்ளே...

### தலையங்கம்


* தில்லியில் "பெரியார் தொண்டு நிறுவனம்" விழுதுகளும் வேர்களும் - வே.ஆனைமுத்து 1


### கட்டுரைகள்


* ஓ, ஓ அமெரிக்கா! ஓ,ஓ இந்தியா!... - வே. ஆனைமுத்து 5
* டர்பன் மாநாடும் அதன் படிப்பினையும் - க.முகிலன் 15
* ஓம் பின்லேடனாய நமஹா! -ஓலைப்பட்டி கந்தையா 20
* இராமாயணத்தைக் கொளுத்துங்கள் -வே.ஆனைமுத்து 23
* சென்னைப் பல்கலைக் கழகத்தின் அதிவேகச் சாதனைகள் - வாலாசா வல்லவன் 26
* சோதிடம் ஒரு மோசடியே! 29
* புஷ்ஷா - லேடா புத்தி பேதலிச்சா மருந்துக்கு வாடா! - சங்கமித்ரா 31


### கவிதை


* கதை தேறாது -தமிழேந்தி



**சிந்தனையாளன்**

(தமிழ் மாத இதழ்)


| | |
|---|---|
| தனி இதழ் | ரூ.7 |
| ஓர் ஆண்டுக் கட்டணம் | ரூ.80 |
| வாழ்நாள் கட்டணம் | ரூ.1000 |

* வாழ்நாள் கட்டணமாகப் பகுதித் தொகை செலுத்தியவர்கள், மீதித் தொகையை உடனே அனுப்புங்கள்.

பணம், டி.டி. அனுப்பிட
'சிந்தனையாளன்'
SINTHANAIYALAN
19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம் சென்னை 5.
தொலைபேசி: 852 28 62.

இன்றே சந்தா செலுத்துங்கள்!
ஒவ்வொருவரும் உறுப்பினராகுங்கள்!


## தமிழகத்தின் புதிய முதல்வர்!



செயலலிதா முதலமைச்சராகப் பதவி ஏற்பது செல்லுமா, செல்லாதா என்று பட்டிமன்றமே நடைபெற்றுக் கொண்டிருந்த சூழ்நிலையில், அவர் தமிழ்நாட்டு முதலமைச்சராக இரண்டாம் முறையாகப் பதவி ஏற்றார். முன்பு முதலமைச்சராக இருந்தபோது, மாநில அரசு நிறுவனமான டான்சி நிலத்தை வாங்கிய வகையில் அவரைக் குற்றம் புரிந்தவர் எனக்கூறி அவருக்கு மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனையைத் தனி நீதிமன்றம் வழங்கி இருந்தது.

தற்போதுள்ள சட்டப்படி இரண்டு ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை பெற்றவர்கள் தேர்தலில் நிற்க முடியாததாகையால் உடனடியாகத் தேர்தலில் நின்று சட்டமன்ற உறுப்பினராக முடியாத அவரை முதலமைச்சராக ஆளுநர் அமர்த்தியது செல்லாது என்று எஸ்.பி. பரூச்சா தலைமையிலான 5 நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்ற 'பெஞ்ச்' தீர்ப்பளித்தது. இதன் காரணமாக, தீர்ப்பு வெளிவந்த 21.9.2001 அன்றே புதிய முதலமைச்சரை அ.இ.அ.தி.மு.க தேர்ந்தெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

கடந்த நான்கு மாத செயலலிதா ஆட்சியில் அதிரடி நடவடிக்கைகளுக்குப் பஞ்சமேயில்லை. தி.மு.க வினர் மீது அதிர்ச்சியூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அமைச்சர்களில் பெரும்பாலோர் எவ்வித முன்னனுபவமும் இல்லாதவர்கள் இத்துடன் முடிவெடுக்க அவர்கள் பெரிதும் தயங்கியதால் நிர்வாகம் தேங்கிக் கிடந்தது.

இப்போது போயஸ் தோட்டத்துக்குக் கையடக்கமான முதல்வராக ஓ. பன்னீர்செல்வம் பொறுப்பேற்றுள்ளார். இதனால் மட்டுமே எல்லாம் சரியாகி விடாது. செயலலிதா மேலும் பல தடைகளைக் கடந்தாக வேண்டும்.

ஆட்சி மாற்றம் செய்த மக்களின் எதிர்பார்ப்புகள் மிக அதிகமாகவே இருந்தது. ஆனால், தமிழ்நாடு முழுவதும் மக்கள் குடி தண்ணீருக்கே திண்டாடிக் கொண்டுள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டு மக்கள் நலனுக்காக அரசாங்க இயந்திரத்தைக் கடு விசையில் முடுக்கிவிட வேண்டும். இது மிகவும் முதன்மையானதாகும்.

துதி பாடுவதாலும், பழி வாங்குவதாலும் மட்டுமே மக்கள் நிறைவு பெற்று விட மாட்டார்கள்.

துதி பாடுவதும், பழி வாங்குவதும் மட்டுமே அரசின் கடமை என்ற எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கே முன்னுரிமை அளிக்க வேண்டும்.

— ஆசிரியர் குழு

www.padippakam.com

**சமதர்மக் காவலர்கள்**



மார்க்சு லெனின் சிங்காரவேலர் பெரியார்

**சமூகநீதிக் காவலர்கள்**



புலே பெரியார் அம்பேத்கர் லோகியா

இந்தியாவில் பொதுவுடைமை மலர மார்க்சிய - பெரியாரிய நெறியில் தேசிய இனவழிப்பட்ட சம உரிமை உடைய சமதர்மக் குடிஅரசுகள் ஒருங்கிணைந்த உண்மையான கூட்டாட்சி அமைய ஆவன செய்தல்

## கொள்கை முழக்கம்

உலகத் தொழிலாளர்களே
ஒன்று சேருங்கள்
- மார்க்ஸ்- எங்கெல்ஸ்

ஒடுக்கப்பட்ட தேசிய இன மக்களே
ஒன்று சேருங்கள்!
- லெனின்

ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே
ஒன்று சேருங்கள்!
- பெரியார்

ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**

ஆசிரியர் குழு
வே.ஆனைமுத்து
சங்கமித்ரா
க.முகிலன்
து.தில்லைவனம்
தமிழேந்தி
க.நாகராசன்
வாலாசா வல்லவன்
மங்கலம் அரசன்

இதழ் வடிவமைப்பு:
கோ. அருண்மொழி

சென்னை அக்டோபர் 2001
விலை ரூ.7/-

# சிந்தனையாளன்

சுவடி : 24 மாத இதழ் ஏடு:2

## தில்லியில் "பெரியார் தொண்டு நிறுவனம்" விழுதுகளும் வேர்களும்

'ஆல் போல் தழைத்து அருகு போல் வேரோடி நீடு வாழ்க!' என்று கூறி, அடுத்தவரின் நல்வாழ்வில் தனக்கு உள்ள அக்கறையை நல்ல மனிதர்கள் வெளிப்படுத்துவார்கள்.

இந்தியாவில் பார்ப்பனர் அல்லாதாரின் எழுச்சிக்கு இயக்கம் கண்ட மகாத்மா புலே, தமிழகத்தில் சூத்திர வகுப்பு மக்களின் அனைத்து அடிமைத் தனங்களையும் அடித்து நொறுக்கிடத் தொண்டாற்றிய பெரியார் ஈ.வெ.இரா; ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் சமூக அரசியல் விடுதலைக்கு வாழ்நாள் முழுதும் பணியாற்றிய மேதை அம்பேத்கர் ஆகிய இப் பெருமக்களின் கொள்கைக்கு உற்ற பிறங்கடைகளாக - வாரிசுகளாகத் தம்மை வரித்துக் கொண்ட தில்லி வாழ் தமிழ் இளைஞர்கள் ஆலின் விழுதுகளாகவும் அருகின் வேர்களாகவும் நின்று, தாங்கள் பிறந்த தமிழகத்தில் வாழ்ந்து மறைந்த தந்தை பெரியாருக்குத் தில்லியில் பிறந்தநாள் விழா எடுத்தனர் - 23.9.2001 இல். இந்தச் சீரிய பணியினை என்றும் தொடர்ந்திட இவர்கள் கண்ட ஓர் இயக்கமே 'பெரியார் தொண்டு நிறுவனம்' (PERIYAR SERVICE SOCIETY) ஆகும்.

தந்தை பெரியார், சூத்திரன் என்கிற இழிவு பிறவி அடிப்படையில் சுமத்தப்பட்டிருப்பதைக் கண்டு மனம் கொதித்தார். சூத்திரனுக்குச் சுயமரியாதையை - மான உணர்வை - மனிதத் தன்மையைப் பெற்றுத் தந்திடப் போராடினார்.

சூத்திரன் கல்வி மறுக்கப்பட்டவன்; சமூக சமத்துவ உரிமை மறுக்கப்பட்டவன்; அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டவன்; இவ்வளவு உரிமை மறுப்புகளும் அவனை மனிதத் தன்மை அற்றவனாக ஆக்கின.

எனவே தான், கல்வியில் பங்கு உரிமை - அரசு வேலையில் பங்கு உரிமை - கட்சிகளின் அமைப்புகளில் பங்கு உரிமை என்று கோரி, வெகு மக்களின் உரிமைகளை வென்றெடுக்க அவர் 55 ஆண்டுக் காலம் போராடினார். பல வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு, உரிமைப் போருக்கு வேண்டிய உணர்வற்றுக்கிடந்த மக்களுக்கு விகிதாசாரப் பங்கு உரிமை

படிப்பகம்

www.padippakam.com



ஒவ்வொரு துறையிலும் வரவேண்டும் என்று கோரிப் போராடினார்.

" நேற்று இருந்த ஆட்சி அமைப்பிலும், இன்று உள்ள அரசு அமைப்பிலும், நாளை மலரப் போகும் சமதர்மக் கூட்டாட்சி அமைப்பிலும் கூட, நெடுங் காலத்துக்குக் கல்வியிலும் - வேலையிலும் - மற்ற வாழ்க்கை அனுபவிப்புத் துறைகளிலும் வகுப்பு வாரியாக - விகிதாசார அளவுக்கு உரிமை வந்திடப் பாடுபட வேண்டும் என்பதில், விடாப்பிடியாக 55 ஆண்டுக் காலம் அவர் போராடினார்.

தாழ்த்தப்பட்ட ஆதிச் சூத்திர - ஆதித் திராவிட மக்களுக்கு விகிதாசார இட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தர வாழ்நாள் முழுதும் போராடினார், அம்பேத்கர். அந்த மேதையின் உழைப்பால் உயர்ந்தவர்களை படித்தவர்களை - அலுவலர்களை நேரில் அமர வைத்து அவர் உரையாற்றிய போது, ''என் உழைப்பால் பயன்பெற்ற நீங்கள், உங்களின் பங்குப் பணியை நீங்கள் பிறந்த சமூகத்துக்குத் திருப்பிச் செய்யத் தவறிவிட்டீர்களே! எனக்குத் துரோகம் செய்து விட்டீர்களே!'' எனக் கண்ணீர் மல்கக் கூறினார். இது ஒரு வரலாற்று உண்மை.

இந்த நிலைமை, அடிமைப்பட்ட வகுப்பு மக்களுக்கு இருப்பது ஓர் இயல்பு. இதனை நன்றாக உணர்ந்திருந்த தந்தை பெரியார், ''நான் செய்வது நன்றியை எதிர்பாராத தொண்டு - Thankless Job" எனத் தெளிவுபடக் கூறி, மனச் சோர்வின்றி இறுதி வரை உழைத்தார்.

அந்தத் தந்தைக்கு நன்றி கூறும் முகத்தால் - தில்லியில் பணியாற்றும் தமிழ் இளைஞர்கள் தில்லித் தமிழர்களையும், தமிழகத் தமிழர்களையும் மற்றுமுள்ள மாநிலங்களின் ஒடுக்கப்பட்ட வகுப்பினரையும் தலைநகர் தில்லியில் கூட்டி வைத்து, ''பெரியார் 123ஆம் பிறந்தநாள் விழா''வைச் சிறப்புற நடத்தினர்; விழாவின் சீரிய நோக்கங்களை ஆவணப்படுத்திட, அரிய ஆய்வுக் கட்டுரைகளையும், கவிதைகளையும் கொண்ட அழகிய மலரை வெளியிட்டனர்.

''நன்றியை எதிர்பாராத தொண்டு செய்த பெரியாருக்கு நன்றி கூறிட, இதோ நாங்கள் இருக்கிறோம்'' என நெஞ்சார - உளமார உலகுக்குக் கூறிட ஏற்ற ஒரு மலரைப் படைத்து அதனை வெளியிட்டனர். பெரியாரின் இப்பெருந் தொண்டின் ஒரு கூறான வகுப்பு வாரி உரிமையை வென்றெடுத்திடக் கடந்த 22 ஆண்டுகளாக ஓடி ஓடிப் பணியாற்றி, இந்திய ஒடுக்கப்பட்ட வகுப்பினரிடையே அவ்வுரிமை உணர்வை ஊட்டிய பெரியார் பெருந்தொண்டர்கள் பலரையும் கூட்டி வைத்து, வே. ஆனைமுத்து தலைமையில் தில்லியில் விழா எடுத்தனர்.

பல நூற்றாண்டுகளுக்கு ஆலமரம் அசையாமல் நிற்கிறது. பல ஏக்கர் பரப்பை அடைத்துக் கொண்டு, குதிரைகள் இழுக்கும் அணிதேர்ப்படையும், காலாட்படையும் தங்கும் அருநிழலை அது தருகிறது. அந்தப் பெரிய ஆலமரத்தைத் தாங்கி நிற்பவை விழுதுகளே! காய்ந்த கட்டாந்தரையிலும், குளிர்ந்த கறு மண்ணிலும் — களரிலும் நுழைந்து நுழைந்து வேர் விடுகிறது, அருகு. அந்த வேர்களின் வலிமையில் அருகு என்றும் உயிர் வாழ்கிறது.

அத்தகைய ஆலம் விழுதுகளாக - அருகின் வேர்களாக நிற்கும் தில்லித் தமிழ் இளைஞர்களின் ''பெரியார் தொண்டு நிறுவனம்'' நாளும் பொழுதும் வளர்ந்து நற்றொண்டு ஆற்றிட மனமார விழைகிறோம். அவரவர் உழைத்துப் பெறுகிற மாத ஊதியத்தில் ஒரு விழுக்காடு உரிமைப் பங்கால் பெற்ற கல்வி அறிவைக் கொண்டு தரும் தொடர்ந்த மூளை உழைப்பு - குடும்பக் கடமைகளை ஆற்றிட மாதம் 29 நாள் - பொதுக் கடமைகளைப் புரிய மாதம் ஒரு நாள் எனப் பங்களித்துத் தொடர்ந்து இவர்கள் பணியாற்றுவார்கள் - பணியாற்ற வேண்டும் என நாம் நம்புகிறோம்; வேண்டுகிறோம்.

**இன்று உள்ள அரசியல் சட்டத்தில் வேலைகளில் இட ஒதுக்கீடு என்பதைப் பெற்றுத் தந்தவர், மேதை அம்பேத்கர்.**

**இன்று உள்ள அரசியல் சட்டத்தில் கல்வியில் இட ஒதுக்கீடு என்பதைப் போராடிப் பெற்றுத் தந்தவர், தந்தை பெரியார்.**

**வேலைகளில் இட ஒதுக்கீடு தரும் உரிமையை அரசியல் சட்ட விதி 16(4)இல், 1950 இலேயே, துலாம் பரமாகத் தீட்டியவர், மேதை அம்பேத்கர்.**

**கல்வியில் தரப்படாமல் விடுபட்டுப் போன இட ஒதுக்கீடு வந்தே தீர வேண்டும் என, 1950 முழுவதிலும் போராடி, அரசியல் சட்ட விதி 15(4) என்பது புதிதாகச் சட்டத்தில் இணைக்கப்பட, 1951 இல் வழிகண்டவர், தந்தை பெரியார்.**

**பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் குலத்தினர், பட்டியல் பழங்குடியினர் ஆன 85% மக்களுக்குக் கல்வியிலும், வேலையிலும் இட ஒதுக்கீடு உரிமையைப் பெற்றுத் தந்தவர்கள் - இவ் இரு மேதைகளுமே ஆவர். இந்த வரலாற்று உண்மையை ஒவ்வொருவரும் மனதிற் கொள்ள வேண்டும்.**

''பிற்படுத்தப்பட்டோருக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் கல்வியிலும் வேலையிலும் விகிதாசார இட ஒதுக்கீடு வேண்டும்'' என, *1940* இல் அறிவித்தார், பெரியார்.

*1947* இல்தான், சென்னை மாகாண அரசு, முதன் முதலாகப் ''பிற்படுத்தப்பட்டோருக்குத் தனி இட ஒதுக்கீடு'' என்கிற கொள்கையை ஏற்று நடைமுறைப்படுத்தியது.

*1954* இலும், *1969* இலும் தமிழ்நாட்டுப் பிற்படுத்தப்பட்டோருக்கு முறையே 25%, 31% இட ஒதுக்கீடு வர வழிகண்டவரும், பெரியாரே.

படிப்பகம்

www.padippakam.com



*பெரியார் 24.12.1973 இல் மறைந்தார்.*

**தமிழகத்திலும் இந்தியாவிலும் கல்வியிலும், வேலையிலும் பிற்படுத்தப்பட்டோருக்கு விகிதாசார இட ஒதுக்கீடு பெற்றுத் தருகிற ஒரு பணியையாவது முழுமையாக நிறைவேற்றிட உறுதி பூண்டனர். வே. ஆனைமுத்து தலைமையில் செயல்படும் பெரியார் தொண்டர்கள்.**

இப்பணியை 28.4.1978 இல் தொடங்கி, 8.5.1978 இல் இந்திய அரசிடம் ஒரு கோரிக்கையாக வைத்து, 17.9.1978 முதல் 20.12.2000 வரை இந்தியா முழுவதிலும் ஓடி ஆடிப் பணியாற்றினர் இத் தொண்டர்கள். இவர்களின் பணிகளை 1981க்குப் பிறகு பல அமைப்பினரும் உணர்ந்து, அவரவரும் பங்குப் பணி ஆற்றினர். இவர்கள் அனைவரும் பாராட்டுக்கு உரியவர்கள்.

அந்தத் தொடர்பணியில் முதலாவது பயன் மண்டல் குழு அமைப்பு. 1979 இல் அமைந்த அக்குழு, 1980 இல் இந்திய அரசிடம் அளித்த அறிக்கையை, 1982 இல் அரசு வெளியிட்டே தீர வேண்டிய நெருக்கடியை உருவாக்கியவர்கள் அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவை - மற்றும் பெரியார் சம உரிமைக் கழகம் என்கிற மார்க்சியப்பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியினரே ஆவர்.

இவர்களின் முயற்சி பணைத்துத் தழைத்துப் பயன் கொடுக்கத் தொடங்கியது, 13.8.1990 இல். அதற்கு அடிப்படைக் காரணமாக விளங்கியவர் முன்னாள் தலைமை அமைச்சர் விஸ்வநாத் பிரதாப் சிங் ஆவார்.

அவருடைய முயற்சிக்கு உடனடியாக முட்டுக் கட்டை போட்டு, உயர் சாதியினரை உசுப்பி விட்டுப் போராடியவர்கள் 'கமண்டலக்' கட்சியினரான பாரதிய சனதாக் கட்சியினரே ஆவர். அவர்களை அடியொற்றி, இந்திய தேசிய காங்கிரசு அரசும் 1996 வரை முட்டுக்கட்டை போட்டது.

இருப்பினும் 16.11.92 இல் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் விளைவாக, 1994 இல் முதன் முதலாக, மய்ய அரசு வேலைகளில் - சில துறை வேலைகளில் மட்டும் 27% இட ஒதுக்கீடு நடப்புக்கு வந்தது. அதன் செயல்பாட்டின் ஓட்டத்தில் - வருத்தி உழைத்துப் பயன் விளைத்து மய்ய அரசுப் பணிகளில் - பல்வேறு துறைகளில் உயர் பணிகளில் அமர்த்தம் பெற்ற நல்ல தமிழ் இளைஞர் பெரும்படையினர், தாம் பெற்ற இந்த வாய்ப்பு ஊராருக்கெல்லாம் கிட்ட வேண்டும் என்று கருதி அதற்குத் தங்களைத் தாங்களே ஆளாக்கிக் கொண்டு விட்டதை உலகுக்கு அறிவித்திட்ட நாள் தான் - தில்லியில் 23.9.2001 இல் இவர்கள் நடத்திய பெரியார் பிறந்த நாள் விழா.

''பெரியார் தொண்டு நிறுவனம்'' என்றும் அமைப்பைத் தில்லி மாநகரில் நிறுவி, ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் உரிமைகளை வென்றெடுத்திட வரிந்து கட்டிக் கொண்டு செயல்படும் தமிழின இளந் தோழர்களையும், தோழியர்களையும், இவர்களுக் குத் துணைபுரிகிற ஒடுக்கப்பட்டோரின் நலம் நாடுவோரையும் நெஞ்சார மனங்குளிர வரவேற்றுப் பாராட்டுகிறோம்.

இந்த அரிய வாய்ப்புகளை உருவாக்கி, அதனைக் கண்டு களிக்கும் நிகழ்ச்சியாக ஒரு விழாவினை எடுத்து, இந்த உரிமைப்போருக்கு வித்திட்டவர் களையும், அவ்வித்து வளரவும் செழிக்கவும் காய்க்கவும் பழம் தரவும் வழிகண்ட தமிழகப் பெரியார் தொண்டர்களையும் தில்லிக்கு அழைத்து, நன்றிக் கடன் ஆற்றிய தில்லி வாழ் நற்றமிழ் இளைஞர்களுக்கு நன்றி கூறுவோம்! இவர்களின் முயற்சிகள் வெற்றி பெறத் தொடர்ந்து துணை புரிவோம்!

புதுதில்லி
*24.9.2001* **வே. ஆனைமுத்து**

## தில்லியில் பெரியார் பிறந்த நாள் விழா

## திருவள்ளுவர் கலை அரங்கம் நிரம்பியது பல பேரறிஞர்கள் விரிவுரையாற்றினர்

தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழா 23.3.1979 இல், 30 ஆயிரம் பேர் கொண்ட பேரணி - இந்தி மொழியில் பெரியாரின் எழுத்துக்கள் நூல் வெளியீடு - பல்வேறு கட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்கேற்பு - இந்தியத்துணைப் பிரதமர் பாபு. சகசீவன்ராம், அமைச்சர் ராஜ் நாராயணன் எழுச்சியுரைகளுடன், வே. ஆனைமுத்து தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

வரலாற்றுச் சிறப்புமிக்க அந்நிகழ்ச்சியை, முதன் முதலாக, இந்தியத் தலைநகரில் நடத்திய பெருமை அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவை, பீகார் மாநிலப் பிற்படுத்தப்பட்டோர் பேரவை, பெரியார் சம உரிமைக் கழகம் ஆகிய அமைப்புகளைச் சாரும்.

இரண்டாவதாக, 1991 அக்டோபர் 19,20,21 இல் புதுதில்லியில் மவ்லங்கர் அரங்கத்தில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழாவும், பன்மொழி மலர் வெளியீடும், முப்பெரும் மாநாடுகளும் இவ் அமைப்புகளால் சிறப்புற நடத்தப்பட்டன.

இவற்றின் பயன் தந்த விழுதாகவும் வேராகவும், 23.9.2001 ஞாயிறு அன்று பிற்பகல் 4.30 மணிக்கு, தில்லி மாநகரில் இராம கிருஷ்ணபுரத்தில் தில்லித் தமிழ்ச் சங்கத்தில், திருவள்ளுவர் கலை அரங்கத்தில், தந்தை பெரியாரின் 123 ஆம் பிறந்தநாள் விழாவும் - பெரியார் பிறந்த நாள் மலர் வெளியீடும் மாபெருஞ் சிறப்புடன் நடைபெற்றன.

தலைநகர் வாழ் தமிழர்கள், தமிழகப் பெரியார் தொண்டர்கள், பல்வேறு மாநிலங்களிலிருந்து வருகை தந்த ஒடுக்கப்பட்ட வகுப்புத் தலைவர்கள் ஆடவர், மகளிர், குழந்தைகள் திருவள்ளுவர் கலை அரங்கத்தை மாலை 4.30 மணிக்கு நிரப்பிவிட்டனர்.

படிப்பகம்

www.padippakam.com





பெரியார் பிறந்த நாள் விழா மலரை பஞ்சாப் மனித உரிமை அமைப்பின் தலைவர் நீதிபதி அஜித் சிங் பெயின்ஸ் (இடமிருந்து 2வது) வெளியிட, முதல் பிரதியைப் பெற்றுக் கொள்கிறார் உத்தரப் பிரதேச ஒடுக்கப்பட்டோர் பேரவையின் தலைவர் பியாரிலால் லோதி. உடன் அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவைத் தலைவர் வே.ஆனைமுத்து (இடது ஓரம்), தில்லி தமிழ்ச் சங்கச் செயலர் மணியன்.

எழுச்சியோடும் புத்துணர்ச்சியோடும் பெரியார் 123 ஆம் பிறந்தநாள் விழா வே. ஆனைமுத்து தலைமையில் தொடங்கியது. விழாவினை நடத்தியே தீர வேண்டும் என ஆறுமாத காலமாகத் திட்டமிட்ட தில்லிப் 'பெரியார் தொண்டு நிறுவனத்' தோழர்கள் அண்ணாத்துரை, சிங்காரவேலு, குமார், சத்தீஷ், சாலைமாறன் ஆகியோரும் தில்லித் தமிழ்ச் சங்கத்தினரும், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியினரும், அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவையினரும் பேரார்வத்துடன் விழா ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

விழாவுக்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றுத் தில்லித் தமிழ்ச்சங்கத் துணைத் தலைவர் எஸ். கிருட்டிண மூர்த்தியும், தில்லித் தமிழ்ச் சங்கத் தமிழ் -தமிழர் நலச் செயல்பாடுகளை விளக்கித் தமிழ்ச் சங்கச் செயலாளர் மணியனும் உரையாற்றினர்.

விழாத் தலைவர் வே. ஆனைமுத்து தமிழிலும் ஆங்கிலத்திலும் பெரியாரின் கொள்கைகளை விளக்கி எழுச்சி உரையாற்றினார்.

ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியும், பஞ்சாப் மாநில மனித உரிமைக் குழுவின் தலைவருமான அஜித் சிங் பெயின்ஸ் தமிழ் - ஆங்கிலக் கட்டுரைகள், கவிதைகள் அடங்கிய 'பெரியார் பிறந்தநாள் மலரை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார். மலரின் முதல் படியை உ.பி மாநில ஒடுக்கப்பட்டோர் பேரவைத் தலைவர் பியாரி லால் லோதி பெற்றுக் கொண்டார்.

தந்தை பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகள் - வகுப்புரிமைப் போராட்டம் - பெண் விடுதலைக் கொள்கை பகுத்தறிவு, நாத்திகக் கொள்கைகள், சுயமரியாதை - சமதர்மக் கோட்பாடுகளை விளக்கி, அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவைத் தலைவரும் நாடாளுமன்ற உறப்பினருமான இராம் அவதேஷ் சிங்; மேற்படிப் பேரவையின் பொதுச் செயலாளர்களுள் ஒருவரும், அலிகர் பல்கலைக்கழக ஓய்வு பெற்ற பேராசிரியருமான டாக்டர் ஹுக்கும் சிங் யாதவ்; தந்தை பெரியாரை நன்கு அறிந்தவரும் பெரியாரியல் பேரறிஞரும், சிறந்த எழுத்தாளரும், ஈரோடு சி.நா. கல்லூரியின் ஓய்வு பெற்ற முதல்வருமான மு.க. சுப்பிரமணியம்; அலிகர் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளரும், மார்க்சியப் பெரியாரியச் சிந்தனையாளருமான முனைவர் து.மூர்த்தி; மறைந்த தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் மருமகள் புனிதவதி இளங்கோவன்; டாக்டர் சாங்கிருத்தியாயன் ஆகியோர் விரைவுரைகள் ஆற்றினர்.

அலிகர் பேராசிரியர் அர்ஜுன் சிங் யாதவ் பெரியார் புகழ் பரவும் இனிய இந்திப் பாடலை இசைத்தார்.

விழாவின் சிறப்புகளை விளக்கியும் விழாவில் பங்கேற்று உரையாற்றியவர்களுக்கும் வருகை தந்த அனைவர்க்கும் நன்றி கூறியும் அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவையின் பொதுச் செயலாளரும் ஓய்வு பெற்ற தமிழாசிரியருமான தில்லி ச. தமிழரசு உரையாற்றினார்.

விழாவைப் பற்றி அறிந்து ஆர்வத்துடன் ஆதரவு அளித்த இந்திய அரசு நிதித்துறை இணை அமைச்சர் செஞ்சி ந. இராமச்சந்திரன், விழா மலரைச் சிறப்புற அச்சிட்டுத் தந்த தில்லி வெங்கடேசுவரா அச்சக உரிமையாளர் இராகவன், தலைநகர நாள் ஏடுகளின் நிருபர்கள், நிழற்படக் கலைஞர் ரேவதிராஜன், மலருக்கு விளம்பரங்கள் அளித்து உதவிய வணிகர்கள், தொழிலதிபர்கள், ஆதரவாளர்கள் மற்றும் ஒத்துழைத்த நண்பர்கள் அனைவர்க்கும் வே. ஆனைமுத்து, ச.தமிழரசு இருவரும் நன்றி நவில, இரவு 8 மணிக்கு விழா இனிது நிறைவேறியது.

விழாவுக்கு வந்திருந்த அனைவர்க்கும் விழாக் கூடத்திலேயே இனிய விருந்து அளிக்கப்பட்டு மனமகிழ்வுடன் அனைவரும் கலைந்து சென்றனர்.

பல்வேறு இடங்களைப் பார்வையிட்ட பின்னர், தமிழகத் தோழர்களும் தோழியர்களும் 26.9.2001 மாலை தில்லியிலிருந்து புறப்பட்டனர். வே. ஆனைமுத்து 30.9.2001 அன்று தில்லியிலிருந்து புறப்பட்டார்.

பெரியாரின் வகுப்புவாரி உரிமை - சுயமரியாதை - பெண் விடுதலைக் கொள்கைகளை நிலை நாட்டிடத் தொடர்ந்து பணியாற்றிட தில்லி 'பெரியார் தொண்டு நிறுவனத்' தோழர்களும் தோழியர்களும் உறுதி பூண்டுள்ளது மன நிறைவும் மகிழ்ச்சியும் தரும் செய்தியாகும்.

செய்தி: கலசம்

படிப்பகம்

www.padippakam.com



# ஓ, ஓ அமெரிக்கா! ஓ, ஓ இந்தியா!
# முதலாளித்துவச் சுரண்டலா?
# இன வெறியா? மதவெறியா?
## எதனால் பயங்கரவாதம்? எது பயங்கரவாதம்?

உலக வரலாற்றில் இரண்டு பெரிய போர்கள் நடந்தன. அவை உலகப்போர் I, *1914 - 1918;* உலகப் போர் II, *1939 - 1945* என வரலாற்றில் நாம் படிக்கிறோம்.

**முதலாவது உலகப் போரைப் பார்த்தவர்கள் - 100 வயதுக்கு மேற்பட்டவர்கள் எங்கோ சிலர் இன்றும் இருக்கிறார்கள்.**



வே.ஆனைமுத்து

**இரண்டாவது உலகப் போரில் பங்கேற்றவர்களும், அதைப் பார்த்தவர்களும் 70 - 80 வயதுக்கு மேற்பட்டவர்கள் கோடிக்கணக்கானவர்கள் உலகத்தில் இன்று இருக்கிறார்கள்; இந்தியாவிலும் தமிழகத்திலும் பலர் இருக்கிறார்கள்.**

**இரண்டாவது உலகப் போரில் தான், முதன்முதலாக, 6-8-1945 இல் அமெரிக்கர்களால் சப்பான் மீது அணுக்குண்டு வீசப்பட்டது. குண்டு வீசப்பட்ட சில மணித்துளிகள் நேரத்தில் கண்ணுக்கு எட்டிய தூரம் மரம் ,செடி, கொடி, மனித உயிர்கள் எல்லாம் மாண்டு ஒழிந்தன. உலகமே அதுகண்டு அதிர்ச்சி அடைந்தது. அடுத்த இரண்டு நாள்களில் மற்றுமொரு அணுக்குண்டை அமெரிக்கர்கள் சப்பான் மீது வீசினர். சொல்லவும் நினைக்கவும் முடியாத உயிர் அழிவுகள் நாகசாகியிலும், ஹிரோஷிமாவிலும் ஏற்பட்டன. அந்த அழிவுக்கு ஆளானவர்களை நினைத்தும், உலக அமைதி வேண்டியும் ஆண்டு தோறும் உலகமெங்கும் ஆகஸ்டு 6 அன்று துயரம் அனுசரிக்கப்படுகிறது; உலக அமைதியை வேண்டிக் குரல்கள் எழுப்பப்படுகின்றன.**



அந்தப் பேரழிவுகளை விளைவித்த அமெரிக்காவில் அதிகார ஆதிக்கம் - பொருளாதார ஆதிக்கம் - இராணுவ ஆதிக்கம் - உலக வணிக ஆதிக்கம் இவற்றின் சின்னங்களாக, நியூயார்க் நகரில் விளங்கியவை ''உலக வணிக மய்ய அடுக்குமாடிக் கட்டடங்கள்' (World Trade Center - W.T.C).

அமெரிக்கா பெற்றுள்ள இத்தனை ஆதிக்கங்களின் சின்னங்களாக விளங்கிய அந்த இரண்டு அடுக்குமாடிக் கட்டடங்களும் *11-9-2001* செவ்வாய் காலை *8-45* (இந்திய நேரம் மாலை *5.30*) மணிக்கும், *10-05* மணிக்கும் இடையில் அமெரிக்க போயிங் விமானங்களாலேயே மோதித் தாக்கப்பட்டு, *10.35* மணிக்குள் மட மடவென இடிந்து மண்ணோடு மண்ணாகச் சரிந்துவிட்டன.

அமெரிக்கர்கள் அதிர்ச்சிக்கு உள்ளாயினர். உலக நாடுகள் பலவும் மூக்கின் மேல் விரலை வைத்து வியப்பிலும் அதிர்ச்சியிலும் மூழ்கின.

அந்த வணிக மய்யத்தில் நிரந்தரமாகப் பணியாற்றுகிற *50,000* பேர்களில் — *6* ஆயிரம் பேர் மாண்டோ, காணாமலோ போய் விட்டனர். அப்படிக் காணாமல் போனவர்களில் இந்தியர் *250* பேர் இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.


எவரால் - எதற்காகத் தாக்கப்பட்டிருந்தாலும், பொருள்களை ஆக்கும் திறன் படைத்த ஒப்பற்ற மனித உயிர்கள் அன்று ஆயிரக்கணக்கில் அழிக்கப்பட்டது வருத்தத்துக்கும் துயரத்துக்கும் உரிய கொடிய நிகழ்ச்சியே ஆகும். நாம் ஒவ்வொருவரும் மனம் நெகிழ்ந்த இரங்கலை மறைந்தவர்களுக்கு உரித்தாக்குவது ஒரு மானிடக் கடமையாகும்.

இந்த அடிப்படை மனிதாபிமானக் கடமைக்கு அப்பால், இந்த வணிக மய்யம் பற்றிய வேறொரு பக்கமும், முகமும் இருப்பதையும், அதற்குப் பின்னால் உலகப் பொருளாதாரச் சுரண்டல் ஆதிக்கம் கொடி கட்டிப் பறந்ததையும், அதை அமெரிக்கர்கள்

படிப்பகம்

www.padippakam.com





மிக மிகப் பெரு மிதமாகக் கருதியதையும் நாம் மறந்து விட முடியாது.

அதே போல், உலகிலேயே மிகப் பெரிய இராணுவ ஆயுதக் கிடங்காக வாஷிங்டனில் விளங்கிய பெண்டகன் (Pentagon) பலமாடிக் கட்டடங்களும் அமெரிக்க போயிங் விமானத்தால் தாக்கப்பட்டு, அழிக்கப்பட்டு விட்டன.

இவற்றுடன்கூட, நான்காவது விமானம் வெள்ளை மாளிகையின் மீது தாக்குதல் தொடுக்கு முன், இடையிலேயே பிட்ஸ்பர்க்கில் விழுந்து நொறுங்கி விட்டது.

அந்த 3 மணி நேரம்

உலகைக் குலுக்கிய அந்த 3 மணி நேரத்தில் நொறுக்கப்பட்ட கட்டடங்கள் அமெரிக்க வளமையின் — பொருளாதார ஆதிக்கத்தின் ஏகாதிபத்தியத்தின் சின்னங்களாக விளங்கியவை. அந்தச் சின்னங்கள் அடித்து நொறுக்கப்பட்டதைக் கண்டு அமெரிக்க அதிபர் புஷ் அழுதார்; அரற்றினார். அமெரிக்க உயர் அதிகாரிகளும், கட்டடக் கலை வல்லுனர்களும், அரசியல் தலைவர்களும் கதி கலங்கி நிற்கின்றனர்.

பெண்டகன் கட்டடங்கள்

பெண்டகன் கட்டடங்கள் 1941 இல் தொடங்கப் பட்டு, 1945 சனவரியில் கட்டி முடிக்கப்பட்டவை.

இதுதான் அமெரிக்க இராணுவத்துக்கு உயிர் நாடி போன்ற தலைமை இடம். 5 அடுக்குகளாக உள்ள இதன் பரப்பு 65 இலட்சம் சதுர அடிகள் ஆகும். தரைக்குக் கீழேயும், தரைக்கு மேலேயும் உள்ள இந்தக் கட்டடங்களில் தான் அமெரிக்க இராணுவ இரகசிய ஆவணங்கள், முக்கியமான இராணுவ அரசு அலுவலகங்கள், வங்கிகள், பேருந்து நடை பாதை வசதிகள், சுரங்க இரயில் நிலையம் இவ்வளவும் உள்ளன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், உலகத்தை ஆட்டிப் படைக்கிற படை பலத்தைப் பெற்றிருந்த அமெரிக்கரின் அரசியல் ஆதிக்கச் சின்னமாக விளங்கியது பெண்டகன். அது விமானத்தால் மோதி நொறுக்கப்பட்டது அமெரிக்கரின் இராணுவ ஆதிக்கத்துக்கு விழுந்த பலத்த அடி; பெருத்த அவமானம்.

உலக வணிக மய்யம் (WTC) 1967 இல் தொடங்கப்பட்டு, 1973 இல் கட்டி முடிக்கப்பட்டு, 1975 இல் வணிக நிலையமாகத் தொடங்கப்பட்டது. இதன் அன்றைய அடக்கச் செலவு 75 கோடி டாலர் ஆகும்.

நியூயார்க்கில் கீழ் மன்ஹாட்டன் (Lower Manhattan) பகுதியில், 16 ஏக்கர் பரப்புள்ள மனையின் மேல் எழுப்பப்பட்ட 110 அடுக்குகள் அல்லது மாடிகள் கொண்ட கட்டடங்கள் இவை.

ஒரு அடுக்கின் (Tower) உயரம் 1362 அடி; இன்னொரு அடுக்கின் உயரம் 1368 அடி. 26 வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள், 269 நிறுவனத்தினர் இக்கட்டடங்களை வாடகைக்குப் பெற்று அங்கே தொழிலும் வணிகமும் செய்தனர்.

இவை நியூயார்க் துறைமுகக் குழுமம் (New York Port Authority), நியூ ஜெர்சி குழுமம் (New Jersey) இவற்றுக்குச் சொந்தமானவை.

2001 சூலையில், மன்ஹாட்டனைச் சார்ந்த ஒரு வழக்கறிஞரான லாரி சில்வர்ஸ்டீன் - மற்றும் ஆஸ்திரேலியக் கட்டட வணிகரான வெஸ்ட் பீல்டு என்கிற இருவரும் இவற்றை 99 ஆண்டுக் குத்தகைக்கு 320 கோடி டாலருக்குப் பேசி முடித்தனர்; இதற்காக 61.6 கோடி டாலர் முன்பணம் செலுத்தியுள்ளனர்.

இன்று, இந்தக் கட்டடங்கள் அழிக்கப்பட்டுவிட்ட நிலையில், இங்கு வாடகைக்கு இருந்த எல்லோருக்கும் மாற்று இடங்களைப் பிடித்துத் தருவதில் இவர்கள் முனைந்துள்ளனர்.

தாக்கி அழித்தவர்கள் யார்? எப்படி?

உலக வணிக மய்ய மாடிக் கட்டடங்களையும், பெண்டகன் இராணுவத் தலைமை இடத்தையும் குறிவைத்து, இரண்டு மணி நேரத்தில் அடியோடு தகர்த்தவர்கள் யார்? இவர்கள் எத்துணைப் பேர்? எங்கிருந்து வந்தவர்கள்? அமெரிக்க போயிங் விமானங்களில் இவர்கள் எப்படி ஏறினர்? எங்கே ஏறினர்? விமானங்களைத் தாம் விரும்பியபடி எப்படி இயக்கினர்?என்பவை எவருக்குமே புரியாத பெரிய புதிர்கள் ஆகும். ஏன்?

உலக வணிக மய்யத்தை நோக்கிச் செலுத்தப் பட்டு, மோதப்பட்டு வெடித்த விமானங்கள் போஸ்டன் அடுத்த. லோகன் விமான நிலையத் திலிருந்து லாஸ்ஏஞ்சல்ஸ் நோக்கிச் சென்ற அமெரிக்கன் ஏர்லைன்ஸ் போயிங் 757 W.T.C; 767 W.T.C என்பவை ஆகும். இந்த விமானங்கள் ஒவ்வொன்றும் 4 இலட்சம் பவுண்டு எடை உள்ளவை. ஒவ்வொரு விமானத்திலும் 60,000 பவுண்டு எடையுள்ள — 24,000 காலன் பெட்ரோல் நிரப்பப்பட்டிருந்தது. இவ்வளவு

படிப்பகம்

www.padippakam.com



கனமான விமானங்களால் மோதினால் தான் - இவ்வளவு அதிகமான எரிபொருள் இருந்தால் தான் - எஃகினாலும் காங்கிரீட்டினாலும் கட்டப்பட்ட 110 தளங்கள் உருகி, வெடித்துச் சரியும் என்கிற திட்டம் -இந்த விமானங்களைக் கடத்தியவர்களுக்கு எப்படித் தெரியும்? அந்த விமானங்களை மணிக்கு 300 மைல் வேகத்தில் ஓட்டி, வேகமாக மோதி வெடித்துச் சிதறச் செய்ததால் தான் அவற்றில் இருந்த எரிபொருள் 2000 டிகிரி வெப்பத்தை உண்டாக்கியது; அந்தக் கொடிய வெப்பத்தில் மெழுகு போல் உருகின எஃகுப் பின்னல்கள். 1500 டிகிரி வெப்பத்திலேயே, எஃகு, பாதி வலிமையை இழந்து உருகத் தொடங்கிவிடும். அப்படி உருகியவுடன், ஒவ்வொரு தளமும் 3000 டன் எடை உள்ளதாக இருந்ததால் ஒன்றன் மேல் ஒன்று பொத்துப் பொத்தென்று விழுந்து, ஒரு மணி நேரத்திலேயே எல்லாம் சாம்பலாகிவிட்டன.

கட்டட வல்லுநர்களுக்கும், இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் மட்டுமே தெரியக் கூடிய இந்த இரகசியங்கள், இந்த் விமானங்களைக் கடத்தி வந்து மோதச் செய்தவர்களுக்கு எப்படித் தெரியும்? எவர் மூலம் தெரிந்திருக்கும்? இது ஒரு புதிர்.

நொறுங்கிச் சாம்பலானவை அந்தக் கட்டடங்கள் அமைக்கப்பட்டிருந்த 16 ஏக்கர் பரப்பளவுள்ள மனையிலேயே குவிந்து கிடக்கின்றன;அக்கம் பக்கத்திலுள்ள கட்டடங்களுக்கு அதனால் எந்தப் பாதிப்பும் இல்லை.

பெண்டகன் இராணுவத் தலைமையிடத்தை மோதித் தாக்கி அழித்ததும் அமெரிக்க ஏர்லைன்ஸ் போயிங் 757WTC விமானமே. கனமான விமானம் பல்லாயிரக் கணக்கான காலன் பெட்ரோல் இவற்றைக் கொண்ட இந்த விமான்ம் தேர்ந்தெடுக்கப் படுவது எப்படி முடிந்தது?

அமெரிக்காவில் விமான ஓட்டிப் பயிற்சி (Pilot) தரும் தனியார் நிறுவனங்களில் சேர்ந்து, பல மாதங்கள் அல்லது சில ஆண்டுகள் இரகசியம் வெளிவராமல் பயிற்சி பெற்ற விமான ஓட்டிகளுக்கே அமெரிக்க விமானங்கள் பற்றிய இந்த இரகசியங்கள் தெரிய முடியும்.

அப்படிப் பயிற்சி பெற்றவர்கள் பல்வேறு அமைப்புகளையும் பல்வேறு நாடுகளையும் சேர்ந்தவர்களாக இருக்க இடம் உண்டு.

போஸ்டன், லோகன், நெவரார்க், நியூஜெர்சி தளங்களில் இவ்விமானங்களில் ஏறியவர்கள் - கடத்தல்காரர்கள், கனடாவிலிருந்தும், புளோரிடாவிலிருந்துமே இந்த இடங்களுக்கு வந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

**இரகசியம் என்ன?**

அப்படியானால் (1) அமெரிக்க உளவு நிறுவனங்களான F.B.I, C.I.A முதலானவை இது பற்றி உளவு அறிய முடியாமற் போனது ஏன்? எப்படி?

(2) அமெரிக்க வானூர்தித் துறை நிர்வாகம் (Federal Aviation Administration) இது பற்றி அறியத் தவறியது எப்படி?

(3) லோகன் வானூர்தி நிலைய அதிகாரிகள் இதுபற்றித் துப்பறியமுடியாமற் போனது எதனால்?

(4) அமெரிக்க இராணுவ - நிர்வாக உயர் அதிகாரிகளுக்கு இது பற்றி எதுவுமே தெரியாமல் போனது ஏன்?

1972க்குப் பிறகு பயங்காரவாதத்துக்கு எதிரான பல சட்டங்களை இயற்றியுள்ள அமெரிக்கா, இந்தப் பயங்கரவாதத்தை நடத்தியவர்கள் போஸ்டன், லோகன் வானூர்தி நிலையங்களிலிருந்து, தங்குத் தடையின்றி விமானங்களில் ஏற இடம் தந்தது எப்படி முடிந்தது?

இந்த வினாக்களுக்கு விடை சொல்லாமல் — பழைய பயங்கரவாதத் தாக்குதல்களை மட்டும் சாட்சியாக வைத்து, ஒசாமா பின்லேடன் மற்றும் பல்வேறு இஸ்லாமிய மதவெறி அமைப்புகளை மட்டும் அமெரிக்கா குறி வைப்பதால், உண்மை எப்படித் தெரியும்?

அமெரிக்கக் காங்கிரஸ் என்கிற அமெரிக்க நாடாளுமன்றத்தில் - இந்தியாவுக்குப் பரிந்து பேச வேண்டி கோடிக்கணக்கான ரூபாய் கூலியாகப் பெறுகிற நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் உள்ளனர்; அதே போல் பாக்கிஸ்தானுக்குப் பரிநிலை பேசக் கூலி பெறுகிறவர்களும் உள்ளனர்.

இப்படிப்பட்டவர்கள் அமெரிக்க உளவு நிறுவனங்களிலும், வானூர்தி நிலையங்களிலும், மற்றும் இராணுவத்திலும் இருக்க வாய்ப்புகள் நிறைய உண்டு.

இதை நாம் மறந்துவிடக் கூடாது.

இந்திய நாடாளுமன்றத்திலும் இந்தியத் தரகு முதலாளிகளுக்கும், பன்னாட்டு முதலாளிகளுக்கும், உலக வணிக நிறுவனத் திட்டங்களுக்கும் பரிந்து பேசுகிற கூலிகள் உள்ளனர் என்பதும் ஓர் உண்மை.

**இந்திய ஏடுகள் என்ன சொல்லுகின்றன?**

இவற்றைப் பற்றியெல்லாம் சிந்திக்காமல், 11-9-2001 மாலையில் (இந்திய நேரம்) தெரிந்த அமெரிக்காவில் நடந்த விமானத் தாக்குதல்களை முன் வைத்து, இந்தியாவில் வெளிவரும் பல ஏடுகளும் —. ''பயங்கரவாதத்துக்குக் கண்டனம்'' என்று கருதிப் பின்வருமாறு தலைப்புச் செய்திகளும், தலையங்கங்களும் தீட்டின.

(1) தலைப்புச் செய்தி:

'அமெரிக்கா தாக்கப்பட்டது' - America Attacked தலையங்கம்: 'ஏதும் புரியாத நிலையில் அமெரிக்கா' (Paradox of America) இவை 'டைம்ஸ் ஆப் இந்தியா' ஏடு 12, 13-9-2001 இல் எழுதிய செய்திகள்.

படிப்பகம்

www.padippakam.com



(2) 'அமெரிக்கா மீது பயங்கரவாதத் தாக்குதல்': Terror Strikes America இது, 'தி ஸ்டேட்ஸ்மென்' ஏட்டின் 13-9-2001 தலையங்கம்.

(3) 'பயங்கரம்' - TERROR: தலைப்புச் செய்தி. 'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 12-9-2001.

''புத்தி பேதலித்தவர்க்குப்பதில்'' (A Response to Insanity), ''கறுப்புச் செவ்வாயை அடுத்து'' "After Black Tuesday' இவை 13-9-2001 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' தலையங்கங்கள்

(4) 'போர்!' WAR இது 'பயனியர்' (Pioneer) தலைப்புச் செய்தி, 12-9-2001.

"Veil of Fear', "Coping with Terror', "Roots of Terror' - இவை 'பயனியர்' ஏட்டின் 13 ஆம் நாள் தலையங்கங்கள்.

(5) 'அமெரிக்கா தாக்குதலுக்கு இலக்காயிற்று!' America Under Attack இது, "The Hindu' ஏட்டின் 12-9-2001 தலைப்புச் செய்தி. 'நாகரிக உலகின் பேரில் தொடுக்கப்பட்ட தாக்குதல்' An Attack on the Civilised World' - "The Hindu' ஏடு, 13- அன்று எழுதிய நீண்ட தலையங்கம்.

(6) 'கடிகார முள்ளைத் திருப்பி வைக்க இயலாது' (The Clock Cannot he turned back)

'சீர்கேட்டிலிருந்து நம்பிக்கையை நோக்கி' (From Crisis to hope)

இவை, 'இந்துஸ்தான் டைம்ஸ்' ஏட்டின் 13 ஆம் நாளைய தலையங்கங்கள்.

இவற்றில் பெரும்பாலான ஏடுகள், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சின்னங்களாக விளங்கிய உலக வணிக மய்யம், பெண்டகன் இராணுவத் தலைமையிடம் இவை தாக்கப்பட்டுத் தகர்க்கப்பட்ட செயல் (1) பயங்கரவாதத்தின் கொடிய வடிவம் என்றும் (2) உலக மானிடத்தின் பேரிலும் நாகரிகத்தின் பேரிலும் தொடுக்கப்பட்ட போர் என்றும் (3) இந்தப் பயங்கரவாதத்துக்கு இஸ்லாமிய மதவெறிக் குழுக்களே காரணம் என்றும்; (4) இந்தக் குழுக்கள் ஒழிக்கப்பட சனநாயக நாடுகள் ஓர் அணியில் திரண்டு அமெரிக்காவின் பின்னே நின்று போரிட வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளன.

இவற்றை நாம் நடுநிலையிலிருந்து ஆய்வு செய்ய வேண்டும்.

அமெரிக்காவின் அடாவடி

இரண்டாம் உலகப் போர் 1945 செப்டம்பரில் முடிவுக்கு வந்தது.

அந்தப் போரின் விளைவாக (1) அய்க்கிய நாடுகள் அவையும் (U.N.O), அதற்கு உட்பட்ட பாதுகாப்புக் குழுவும் (Security Council) அமைக்கப்பட்டன.

இந்த இரண்டு அமைப்புகளிலும் மேலாதிக்கம் செலுத்திய அமெரிக்கா, தனது மேலாதிக்க அதிகாரத்தை, சமதர்ம நாடுகளை எதிர்த்து ஒழிப்பதற்கு மட்டுமே பயன்படுத்தியது. இதில் அய்ரோப்பியர்கள் அனைவரும் அமெரிக்காவுக்குத் துணை நின்றனர்.

குறிப்பாக பிரிட்டன், பிரான்சு, செர்மனி முதலானவை. எப்போதும் அமெரிக்காவுக்கு ஆதரவாகவே செயல்பட்டன.

அணு ஆயுதப் பெருக்க ஒப்பந்தத்தை மீறி, அளவுக்கு மீறி அணு ஆயுதங்களையும், மற்ற போர்க் கருவிகளையும் உற்பத்தி செய்து, உலகச் சந்தையில் ஆயுத விற்பனையில் முதல் இடத்தை அமெரிக்கா பிடித்துக் கொண்டது.

அமெரிக்காவுக்கு ஈடு கொடுக்க வேண்டி, சோவியத்து சோசலிச அரசும் அணு ஆயுதங்களையும் மற்ற ஆயுதங்களையும் உற்பத்தி செய்து, அமெரிக்க அரசுக்கு ஈடாக ஆயுத வலிமையைப் பெருக்கவும், சோசலிசக் கட்டுமானத்தைப் பின்னுக்குத் தள்ளவுமான இக்கட்டான நிலையை அமெரிக்கா தோற்றுவித்தது.

1948க்குப் பின்னரும், 1967க்குப் பின்னரும் பாலஸ்தீனத்தைப் பிடித்து ஆக்கிரமித்துக் கொண்ட இஸ்ரேலுக்கு ஆயுதம், படைப் பயிற்சி முதலான எல்லாம் தந்து, பாலஸ்தீன விடுதலைக்கு அய்.நா. தந்த ஏற்பு இன்றுவரை நடைமுறைக்கு வர முடியாமலே அமெரிக்கா செய்து விட்டது.

கொரியாவிலும், வியட்நாமிலும் நிலைபெற்றிருந்த சமதர்ம ஆட்சிகளை ஒழிக்க வேண்டி, அவற்றின் பேரில் அநியாயமாகப் போர் தொடுத்து, ஆயிரக்கணக்கான அமெரிக்கப் படையினரைச் சாகக் கொடுத்து, வியட்நாமில் நேரிட்ட உயிரிழப்புப் பற்றி அமெரிக்க மக்களே காரித்துப்பிய பிறகு, வியத்நாமிலிருந்து அமெரிக்கா 1975 இல் வெளியேறியது.

1979 இல் சோவியத்து ஆதரவுடன் ஆப்கனிஸ்தானத்தில் ஆட்சியிலிருந்த நஜிபுல்லாவுக்கு எதிராக, இஸ்லாமிய மதவெறி கொண்ட தலிபன் குழுவினரை ஆதரித்து, நஜிபுல்லாவைக் கொன்று, அவருடைய குடும்பத்தினரை ஆப்கானிஸ்தானத்திலிருந்தே அமெரிக்கா வெளியேற்றியது.

ஆப்கானிஸ்தானத்தில் இரஷ்யாவுக்கும் நஜிபுல்லாவுக்கும் எதிராகப் போரிட, அமெரிக்க சி.அய்.ஏ. வினால் படைப் பயிற்சியும் கொரில்லாப் போர்ப் பயிற்சியும் அளிக்கப்பட்டவர்களில் ஒருவர்தான் ஒசாமா பின்லேடன். ஒசாமா பின்லேடன் - ஆப்கானிய தலிபன் - பாக்கிஸ்தானிய அய்.எஸ்.அய் (I.S.I) முக்கூட்டு என்பது அப்போது உண்டானதுதான். இந்த முத்தரப்புக் கூட்டு, இன்று 2001 இலும் அப்படியே நீடிக்கிறது. இந்த நிலையில் இன்று ஒசாமா பின்லேடனை விருந்தாளியாக வைத்துப் பாதுகாப்பதாகக் குற்றஞ்சாட்டி, தலிபனை - ஆப்கன் நாட்டை எதிர்த்துப் போர் தொடுக்க - எல்லா சனநாயக நாடுகளையும் துணைக்கு அழைக்கிறது அடாவடி அமெரிக்கா.

படிப்பகம்

www.padippakam.com



(2) இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஏற்படுத்தப்பட்ட இன்னும் ஓர் அமைப்பு வட அட்லாண்டிக் நாடுகள் ஒப்பந்தக் கூட்டமைப்பு (NATO - நேட்டோ) ஆகும். 'நேட்டோ' அமைப்பில் 19 நாடுகள் உறுப்புப் பெற்றுள்ளன. இவை பெரிதும் அய்ரோப்பிய நாடுகள்.

இந்த அமைப்பைச் சார்ந்த ஒரு நாட்டின் மீது வெளியார் படையெடுத்தால், மற்ற நாடுகள் துணை போக வேண்டும் என்பதே நேட்டோ ஒப்பந்தம் ஆகும்.

இந்த முறையில் தான், அமெரிக்கா ஈராக் நாட்டைத் தாக்கிய போதும் மற்றும் பல சிறு சிறு நாடுகளைத் தாக்கிய போதும் பல அய்ரோப்பிய நாடுகள் அமெரிக்காவுக்குத் துணை நின்றன.

இப்போது, ஆப்கன் தலிபனுக்கு எதிராக அமெரிக்கா தொடுக்கப் போகிற போருக்குத் துணை நிற்பதாக கனடா, பிரிட்டன், பிரான்சு, செர்மனி முதலானவை உறுதி அளித்துள்ளன.

(3) இரண்டாம் உலகப் போரை அடுத்து உருவாக்கப்பட்ட இன்னொரு நிறுவனம்உலக வணிக அமைப்பு (W.T.O).

இந்த வணிக அமைப்பின் விதிகள், சட்ட திட்டங்கள் இன்று வரையில் மூன்று மொழிகளில் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளன.

வளரும் நாடுகள் எனப்படும் 77 ஏழை நாடுகள் வேளாண்மை - சிறு தொழில் - கல்வி - மருத்துவம் - தேசிய இன விடுதலை என்கிற எந்தத் துறையிலும் முன்னேறி விடாமல் தடுத்து நிறுத்தி, உலக வளங்களில் அய்ந்தில் ஒரு பங்கைச் சுரண்டி, இன்றுள்ள 27 கோடி அமெரிக்கர்களுக்கு வளமான- அதி உன்னதமான - மேலான வாழ்வை அளிப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு, அமெரிக்கர்களால் ஆதிக்கம் செலுத்தப்படுவதுதான் இன்றைய அமெரிக்காவின் உண்மை நிலை.

அமெரிக்காவைப் பின்பற்றி, அடுத்த நிலையில் உலக வளங்களைச் சுரண்டிக் கொழுப்பவர்கள் அய்ரோப்பிய நாட்டினர். இன்றுள்ள யூரோ (EURO) அமைப்பும், யூரோ நாடாளுமன்றமும் (EURO - Parliament) இதில் கண்ணும் கருத்துமாக உள்ளன.

**கிறித்துவ மதவெறி**

இந்த நிலைமைகளோடு கூட, அய்ரோப்பியரும் அமெரிக்கரும் பெரிதும் பின்பற்றுவது கிறித்துவ மதம்.

உலகக் கத்தோலிக்கர்களின் தலைவரான - வாடிகன் நகர அரசின் தலைவரான போப் இந்தியாவுக்கு, இந்தப் புத்தாயிரம் ஆண்டில் வருகை புரிந்தார்.

அவர் கூறிய சூளுரை - அறிவுரை என்ன?

'முதலாவது ஆயிரம் ஆண்டில் அய்ரோப்பாவில் கிறித்துவம் பரப்பப்பட்டது; இரண்டாவது ஆயிரம் ஆண்டில் ஆப்பிரிக்காவில் கிறித்துவம் பரப்பப் பட்டது; இந்த மூன்றாவது ஆயிரம் ஆண்டில் ஆசியாவில், கிறித்துவம் பரப்பப்பட வேண்டும்' என்று துணிந்து வெளிப்படையாகவே அவர் கூறினார்.

இது மானிடத்தை எங்கே கொண்டு போய் நிறுத்தும்?

அய்ரோப்பாவில் கிறித்துவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையே நடைபெற்ற சிலுவைப் போர் (கி.பி. 1096 முதல் 1273 வரை) மீண்டும் அய்ரோப்பா முழுவதிலும், அமெரிக்காவிலும் நடைபெறுவதில் தான் போய் முடியும்.

இது ஆசியாவிலும், குறிப்பாகத் தென் கிழக்கு ஆசியாவிலும் கிறித்துவர் - இஸ்லாமியர்; இஸ்லாமியர் - இந்துக்கள்; கிறித்துவர்கள் - இந்துக்கள் இடையிலான மதவெறிப் போர்களாகவும் வடிவெடிக்கும்.

இயேசுவின் பிரதிநிதியாக உள்ள போப், இந்தியாவில் தூவிவிட்ட கிறித்துவ மதவெறி நஞ்சு இது. இதன் செயல்பாடு இனி இப்படியெல்லாம் மலரும்.

**இஸ்லாமிய மதவெறி**

இதை விடக் கேடானதுதான் இஸ்லாமிய மதவெறிக்குத் தூண்டுகோலாக உள்ள ஒசாமா பின்லேடன், ஆப்கன் தலீபன், மற்றும் பாக்கிஸ்தானிய அய். எஸ். அய் அமைப்புகள் ஆகும்.



**பின்லேடன் யார்?**

ஒசாமா பின்லேடன் 1957 இல் சவுதி அரேபியாவில் ரியாதில் பிறந்தவர்; அங்கே உள்ள பல்கலையில் பயின்றவர்; ஏறக்குறைய 35 கோடி டாலர் மதிப்புள்ள சொத்தைத் தன் குடும்பச் சொத்தில் பங்காகப் பெற்றவர். 1979 இல் ஆப்கானிஸ்தானத்தில் இரஷ்யப் படைகளை எதிர்த்துப்

www.padippakam.com



போராடு வதற்காகச் சென்றவர்; அங்கிருந்து சவுதி அரேபியாவுக்குத் திரும்பிய அவர், வளைகுடாப் போரின் முடிவில் சவுதி அரேபியாவில் அமெரிக்கப் படை தங்கியதை எதிர்த்தார்; அதனால் சூடானுக்கு நாடு கடத்தப்பட்டார். சூடானில் இஸ்லாமிய மதத் தலைவரான ஹசன் துராபி (Hassan Turabi)யிடம் இஸ்லாம் பற்றி நிறையவே கற்றார். சூடான் அரசு, அமெரிக்க அழுத்தம் காரணமாக, 1996 இல் பின்லேடனை வெளியேற்றியது. அப்போது ஆப்கானிஸ்தானுக்குச் சென்ற அவர் அங்கேயே தங்கி, Al-Qae-da or Al-Qai-da = ""The Base" = ''அடித்தளம்'' என்னும் பெயரில் இஸ்லாமைக் காப்பதற்கான படைப் பயிற்சியைத் தொடங்கினார். பல்வேறு போர்களில் பயிற்சி பெற்ற 50,000 போர் வீரர்களிலிருந்து தனக்கு வேண்டிய படைப் பயிற்சியாளர்களைத் தேர்ந்தெடுத்து, ''அமெரிக்கரை அழிப்பது என் முதல் வேலை'' என்று அறிவித்துச் செயல்படுகிறார்.

ஒசாமா பின்லேடனின் மத வெறிப் படையினர் தான் - கென்யா, நைரோபியா, தார்கிஸ்சலாம், தான்சானியா நாடுகளில் அமெரிக்கத் தூதுவரகங்களில் 7-8-1998 இல் குண்டுகளை வீசி, 224 அமெரிக்கர்களைக் கொன்று விட்டனர். ஆயிரக்கணக்கானவர்களைக் காயப்படுத்தி விட்டனர் என்பது அமெரிக்கரின் குற்றச்சாட்டு.

அத்துடன் 12-10-2000 அன்று ஏமன் நாட்டில் யு.எஸ்.எஸ்.கோல் (USS Cole) கப்பல் படை மாலுமிகள் 17 பேர்களை லேடன் படையினர் கொன்று விட்டனர் என்பதும் ஒரு குற்றச்சாட்டு.

மற்றும் இஸ்லாமிய மதவெறி அமைப்பினர் *4-11-1979, 18-4-1983, 20-9-1984, 14-6-1985, 8-10-1985, 5-9-1986, 21-12-1988, 19-4-1995, 13-11-1995, 25-6-1996* முதலான நாள்களில், பல நாடுகளில் அமெரிக்க விமானங்களைத் தகர்த்துள்ளனர்; அமெரிக்கர்களைக் கொன்றுள்ளனர்.

11-9-2001 இல் தாக்கி நொறுக்கப்பட்ட அதே நியூயார்க் உலக வணிகக் கட்டடத்தின் மீது, 26-2-1993 இல் எட்டாண்டுகளுக்கு முன்னரே, குண்டுவீசி, 6 பேர்களைக் கொன்று விட்டனர் எனக் குற்றஞ் சாட்டப்பட்டு, இஸ்லாமியப் போராளிகள் ஆறு பேர் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

**அமெரிக்கா மீது குறி ஏன்?**

இவ்வளவும் அமெரிக்கர் பேரிலேயே குறி வைக்கப் பட என்ன காரணம்?

அமெரிக்க ஏகாதிபத்திய - முதலாளித்துவச் சுரண்டலுக்கு எதிராகவா? இல்லை.

உலக வணிக நிறுவனம், உலக வணிக ஒப்பந்தம் என்கிற பேரால் ஏழை முஸ்லிம் நாடுகளான ஆப்கனிஸ்தான், பாகிஸ்தான், எகிப்து, பாலஸ்தீனம் உள்ளிட்ட உலக நாடுகள் அமெரிக்கரால் சுரண்டப் படுவதை எதிர்த்தா? இல்லை.

இஸ்லாமிய நாட்டினர் எவருக்கும் - பிடல் காஸ்ட்ரோ' ஒருவரைத் தவிர, இப்படிப்பட்ட இலக்குகள் குறிக்கோள்களாக இல்லை.

இஸ்லாமிய மதவாத நாடான சவுதி அரேபியா, மற்றும் பாலஸ்தீனம், ஈராக் இவற்றுக்கு எதிராக அமெரிக்கர்கள் செயல்படுவது மட்டுமே, இஸ்லாம் மத வெறிக் குழுக்கள் அமெரிக்கரை மட்டும் குறிவைக்க ஒரே காரணம் ஆகும்.

இப்படிப்பட்டவர்களை இஸ்லாமியப் போராளிகள் என்று கொள்ளாமல், இஸ்லாமிய மத வெறியர்கள் என நாம் ஏன் கொள்கிறோம்?

*(1)* சவுதி அரேபியா, ஆப்கானிஸ்தான், பாக்கிஸ்தான் முதலான இஸ்லாமிய நாடுகளில் பெண்கள் வெறும் பண்டங்களைப் போலவே கருதப்பட்டு நடத்தப்படுகிறார்கள்.

பெண்கள் உச்சி முதல் உள்ளங்கால் வரையில் படுதா போட்டு மூடிக் கொள்ள வேண்டும் என்பது ஆப்கானிஸ்தானிலும், சவுதி அரேபியாவிலும், மற்ற பல இஸ்லாமிய நாடுகளிலும் கொடுமையாகவே இன்றும் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

காஷ்மீரில், 'இலஷ்கர் - இ - ஜப்பார்' என்கிற, ஊர் பேர் தெரியாத ஓர் அமைப்பு, ''காஷ்மீர் பெண்கள் 14-9-2001க்குள் படுதா போட்டு மூடிக் கொள்ள வில்லை என்றால், சுட்டுக் கொல்லப்படுவார்கள்'' என்று அறிவித்தனர். அது அப்படியே நடப்புக்கு வந்துவிட்டது. இதனைத் தடுத்திட இஸ்லாமிய மதகுருமார்களோ, அரசோ, பொதுமக்களோ முன்வரவில்லை.

இஸ்லாம் கிறித்துவத்துக்குப் பிற்பட்ட காலத்தில் தோன்றியது.

கிறித்துவர்களிடையே மத்தியக் கிழக்கு நாடுகளிலும், மெடிட்டரேனியன் பகுதியிலும் பெண்கள் மூடாக்குப் போடுவது வழக்கத்திலிருந்தது. அது அப்படியே இஸ்லாமியர்களால் பின்பற்றப் பட்டது. முகமது நபியின் மனைவிமார்களும், இஸ்லாமிய மேல் தட்டுப் பெண்மணிகளும் மூடாக்குப் போடுவதை ஒரு சமூகப் பெருமையாகக் கருதி மேற்கொண்டனர். முதலாவது கலிபாவின் (Calipha) காலந்தொட்டு இஸ்லாமியப் பெண்கள் வீட்டுக்குள்ளேயே அடைக்கப்பட்டிருக்கும் வழக்கம் தலைதூக்கியது.

உலகிலுள்ள 300 கோடிப் பெண்களும் - எந்த மதத்தவராயினும் இன்னமும் ஆண்களுக்கு ஒப்பான உரிமை பெறவில்லை. இவர்களில் மிகவும் அடக்குமுறைக்கு ஆளாகி, வஞ்சிக்கப்பட்டிருப் பவர்கள் 40 கோடி இஸ்லாமியப் பெண்களே ஆவர்.

இது மத வெறியின் வெளிப்பாடே ஆகும் அல்லவா?

**அதே போல் 'ஜிகாத்' (Jehad) என்பது குர் - ஆனில் கூறப்பட்டுள்ளபடி, இஸ்லாம் மதப் பரப்பலுக்காகப்**

படிப்பகம்

www.padippakam.com



பிறர் பேரில் புனிதப் போர் தொடுப்பது என்று இல்லை.

'ஜிகாத்' என்னும் அரபுச் சொல்லுக்கு உண்மையான பொருள் வருத்திக் கொள்ளுதல் அல்லது வருந்தி முயற்சித்தல் என்பது தான். ஆனால் சிலுவைப் போரின் போது ஐரோப்பியர்கள் 'ஜிகாத்' என்பதற்குப் புனிதப் போர் (Holy War) என்ற பொருளைத் தந்து விட்டனர்.

'ஜிகாத்' என்பதற்கு இன்னொரு பொருள் சமூகத்தின் மேம்பாட்டுக்கு உழைத்தல் அல்லது பாவச் செயல்களில் ஈடுபடாமல் இருத்தல் என்பதே ஆகும்.

'ஜிகாத்' என்றால் மற்றவர்களின் தாக்குதலிலிருந்து இஸ்லாத்தைக் காப்பாற்றிடச் சட்டப்படியும், பேச்சு வார்த்தை மூலமும் தீர்வு காண்பதே ஆகும். அப்படிச் செய்ய முடியாத் போது மட்டுமே, வன்முறையை மேற்கொள்ளலாம்.

உண்மை இப்படியிருக்க, இஸ்லாமியர் அல்லாதவர்கள் இஸ்லாமின் எதிரிகள்; அவர்கள் பேரில் வன்முறையை ஏவித் துன்புறுத்தி இஸ்லாத்தைப் பரப்புவது தான் 'புனிதக்கடமை; அல்லாவை அடையும் ஒரே வழி என்று கற்பித்து, இஸ்லாமியத் தலைவர்கள், பாமர மக்களைத் தூண்டி விடுவது அடாதது.

இப்படிப்பட்ட கேடு கெட்ட நிலையில் பண்டைய பெருமையைக் காத்தல் (Saving Heritage) என்கிற பேரால், 'இந்துத்துவ' வாழ்க்கையை வேத - இதிகாச - புராண கால இலக்கியங்களில் கண்டபடி அப்படியே நடை முறைப்படுத்துவதை - இன்றைய பாரதிய சனதா அரசு ஆரவாரத்துடனும், ஆணவத்துடனும் கல்வித்துறை மூலமும், நீதி மன்றத் தீர்ப்புகளின் மூலமும் , பல்கலைக் கழகங்களின் வழியாகவும் அப்படியே மேற்கொண்டுவிட்டது.

பண்பாட்டு அழிப்புப் பயங்கரவாதம்.

1. 'இந்தியா' என்று ஓர் ஆட்சிப் பகுதி எப்போதுமே இல்லாதது.

2. இன்று கட்டமைக்கப்பட்டுள்ள 'இந்தியா' என்ற நிலப்பகுதிக்கு ஒரு போதும் 'பாரதம்' என்ற பெயர் இருந்தது இல்லை.

3. ஆரியர்கள் இந்தியாவின் சிந்து வெளியின் பழங்குடிகள் என்று நிலநூல் - உயிர்நூல் - இனவரலாற்று நூல் - அகழ்வாராய்ச்சி வரலாறு என்கிற எதன் அடிப்படையிலும் உண்மையில் நிலை நாட்டப்பட் வில்லை.

விந்திய மலைக்குத் தெற்கே - வெப்ப மண்டலப் பகுதியில் சிவப்புத் தோல், மஞ்சள் தோல், பழுப்புத் தோல் உள்ள மனிதர்கள் இயற்கையிலேயே இருக்க முடியாது; இருக்கவில்லை.

விந்திய மலைக்கும் தெற்கே உள்ளவர்களுக்கு வடக்கே உள்ளவர்களுடன் குருதிக்கலப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு கி.பி.13ஆம் நூற்றாண்டு வரை நிகழவே இல்லை.

4. 'இராமாயணம்' வால்மீகியால் புனையப்பட்ட ஒரு கற்பனைப் பழங்கதையாகும்.

கி.பி.10ஆம் நூற்றாண்டுகளுக்குப் பின்னர் தான் கபீர் தாசர், கம்பர் போன்றவர்களால் 'இராமன்' என்கிற உருவகம் கடவுள் அவதாரம் எனப் புனைத்துரைக்கப்பட்டது.

அப்படிப்பட்ட இராமன் பிறந்த இடம் இன்றுள்ள அயோத்திதான் என்று ஒரு பொய்யைக் காட்டி விட்டு, அதை 1948 முதல் வளர்த்தெடுத்து, இன்று எந்தச் சிக்கலையும் விட முதன்மை வாய்ந்த ஒன்றாகக் கருதி பாபர் மசூதி இருந்த இடத்தில் இராமன் கோவில் கட்டப்படுவதற்கு ஆளும் கட்சியும், அதன் கிளை அமைப்புகளும், இந்திய ஆட்சியும் தொடையைத் தட்டிக் கொண்டு நிற்கின்றன.

இந்திய அரசில் அமைச்சர்களாக இருப்பவர்களே அயோத்தியா பற்றி இன்று வரை நிலை நாட்டப்பட்ட வரலாற்றுச் சான்றுகளுக்கோ, நீதி மன்றத் தீர்ப்புகளுக்கோ கட்டுப்பட முடியாது என்றும்; இது பற்றி இந்து தர்மச் சங்கத்தின் குருமார்கள் சொல்லுவதே அரசுக்குக் கட்டளை ஆகும் என்றும் துலாம்பரமாகக் கூறுகின்றனர்.

5. வேத கணிதம், வேத வேதியியல், வேத சோதிடம், கர்மகாண்டம், சமஸ்கிருதப்பாடம் இவை கல்வியாளர்கள் - ஆராய்ச்சி அறிஞர்கள் மாநில அரசுகள் இவற்றின் ஒப்புதலே இன்றிப் பல்கலைக் கல்வியில் பாடங்களாக நுழைக்கப்பட எல்லாம் செய்யப்பட்டு விட்டன.

1996இல் தெரிந்தெடுக்கப்பட்ட இந்திய நாடாளு மன்ற உறுப்பினர்கள் 1998இல் பதவி இழந்தார்கள்; 1998இல் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் 1999இல் பதவி இழந்தார்கள். 1999இல் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எதை இழந்தாலும் - நாடாளு மன்ற உறுப்பினர் பதவியை 2004 வரை இழக்க விரும்பவில்லை. இந்த 5 ஆண்டுகளுக்குள் தம் தம் சொந்த வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ள ஒவ்வொரு உறுப்பினரும் அவரவர் சார்ந்த கட்சியினரும் 'தவம்' கிடப்பது ஒன்றே இன்று உள்ள வாஜ்பேயி அரசுக்கு இருக்கும் அசைக்க முடியாத வலிமையாகும்.

இந்த அரசு மேலே கண்ட ஆரிய - வேதமத - பார்ப்பன மதப் பண்பாட்டை எல்லாத் தேசிய இன - மொழிப் பிரிவு மக்கள் பேரிலும் வலிந்து திணிப்பது - பண்பாட்டு அழிப்புப் பயங்கரவாதம் அல்லவா? இந்தத் தத்துவப் பண்பாட்டுத் திணிப்பு - **இந்துத்துவப் பண்பாட்டுப் பயங்கரவாதம் (Hinduthva Cultural Terrorism)** அல்லாமல் வேறு என்ன?

'ஆரியர்கள் உயர்ந்தவர்கள்' என்கிற கோட்பாடு செர்மானியர்களாலும், பிரிட்டானியராலும் 1860 களில் தூக்கிப் பிடிக்கப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



'ஆரிய இனமே உலகத்தை ஆள வேண்டும்' என்கிற முழக்கத்தை முன் வைத்துத் தான் 1920 - 1930களில் அடால்பு இட்லர் செர்மானியரை உசுப்பி விட்டு, 1939இல் உலகப் போரைத் தொடங்கினான்.

'செர்மானியன் என்கிற சொல்லுக்கு மிக உயர்ந்த ஆரிய இரத்தம் உடையவன்' என்று பொருள். ஆரியர்கள் தான் உலகை ஆள வேண்டும்' (the word "German' means the most superior Aryan blood. The Aryans should rule the whole world) என்று அறிவித்தான் இட்லர்.

1941 வரையில் தங்குத் தடையின்றிப் பல நாடுகளை இட்லர் கைப்பற்றினான். 1941 - 42இல் சோவியத்தின் மீது படையெடுத்து தாக்குகிற வரையில், செர்மானிய பாசிசத்தைக் கண்டனம் செய்ய பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியே முன்வரவில்லை. பிரிட்டானிய ஏகாதிபத்தியத்தை விட செர்மானியப் பாசிசம் மனிதக் கொலை வெறி கொண்டது என்பதைப் பெரியார் ஈ.வெ.ரா., எம்.என். ராய்., டாக்டர் அம்பேத்கர் மூவரும் நன்றாகவே உணர்ந்து, செர்மனுக்கு எதிராகப் பிரசாரம் செய்தனர். அன்று, மதுரையில் தோழர் மணி என்பவர் நடத்திய பாசிச எதிர்ப்பு மாநாட்டில் பங்கேற்றுப் பேசியவர் பெரியார் ஒருவர் மட்டுமே.

ஆனால், தமிழ் நாட்டுப் பார்ப்பனர்கள் செர்மானியன் இந்தியாவுக்கு வந்து விட்டால், அவனை முதலாவதாகக் கைப்பிடிக்க வேண்டும் என்று திட்டமிட்டு செர்மானிய மொழியைக் கற்கத் தொடங்கிவிட்டனர்.

அந்த செர்மானியனால் நடக்கவிட்டும் ஓட விட்டும் சுட்டுக் கொல்லப்பட்ட யூதர்கள் பல இலட்சம் பேர், தரைக்கும் கீழே சுரங்கங்களில் அடைத்து நச்சுக் காற்றைப் பாய்ச்சிப் பதைக்கப் பதைக்கக் கொன்று குவிக்கப்பட்ட யூதர்கள் 50 இலட்சம் பேருக்கு மேல்.

அத்தகைய இனவெறிக் கொலைக்குத் தத்துவமாகப் பயன்பட்டது தான் 'ஆரியன் உயர்ந்தவன்' என்கிற கொள்கை.

'ஆரியனுக்குத் திராவிடன் அடிமை' என்பதைக் கற்பிப்பது தான் இராமாயணம் - இராமன் கதை.

இந்த இனவெறிக் கொள்கையைக் கத்தியின்றி - துப்பாக்கி இன்றி - மக்களிடம் உள்ள இந்து மதப் பற்று, இந்து மத பக்தி என்கிற மூட நம்பிக்கையை ஆயுதமாகக் கொண்டே ஆரிய ஆதிக்கத்தை நிலைக்க வைக்கிற இன்றைய இந்திய அரசு பாசிச இனவெறி - மதவெறி அரசு அல்லவா?

இந்த இன வெறியர்கள், 'எல்லையைக் கடக்கும் பயங்கரவாதம்' (Cross border Terrorism), இஸ்லாமிய அடிப்படை வாதம் என்று பெயர் சூட்டி, பாக்கிஸ்தான் பேரில் குற்றஞ் சாட்டி விட்ட, காஷ்மீர் மக்களின் தேசிய இன விடுதலை எழுச்சியைப் படைபலம் கொண்டே ஒடுக்குவது - தேசிய இன ஒடுக்கலான பயங்கரவாதம் அல்லவா?

இந்தியாவுடன் 1947 இல் காஷ்மீர் இணைந்த போது, இஸ்லாமியர் படையெடுப்பிலிருந்து தப்புவது மட்டுமே நோக்கமாக 'டோக்அய்யம் இன அரசனுக்கு இருந்தது. பின்னர் காஷ்மீர் மக்களிடம் பொதுவாக்கெடுப்பு நடத்தி, அவர்களின் அரசு பற்றிய நிலையை அவர்களே தீர்மானிக்க ஒப்புக் கொள்ளப்பட்டது. அதற்கும் மேலாக, 1951 இல் காஷ்மீர் அரசமைப்பு அவை தேர்ந்தெடுக்கப்பட்டு, 1953 முதல் அவர்களால் உருவாக்கப்பட்ட 'ஜம்மு - காஷ்மீர் அரசியல் சட்டம்' 1955இல் நிறைவேற்றப் பட்டது. அதன்படி

1. காஷ்மீர் மக்கள் முதலாவது 'ஜம்மு - காஷ்மீர் குடிமக்கள்' ஆவர். இரண்டாவதாக 'இந்தியக் குடிமக்கள்' ஆவர். அதாவது ஜம்மு - காஷ்மீர் மக்கள் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள்.

''ஜம்மு - காஷ்மீர் குடிமக்களாகிய நாங்கள்.....'' என்று தான் காஷ்மீர் அரசியல் சட்டத்தின் முகவுரையே தொடங்குகிறது.

2. ஜம்மு -' காஷ்மீருக்கு என்று தனியான ஒரு தேசியக் கொடி அதே அரசியல் சட்டப்படி உண்டு.

3. ஜம்மு - காஷ்மீர் முதலமைச்சர் 'பிரதமர்' என்று தான் அழைக்கப்பட வேண்டும்; அதன் 'ஆளுநர்' 'குடி அரசுத் தலைவர்' என்று தான் அழைக்கப்பட வேண்டும்.

4. இந்திய அரசியல் சட்டத்துக்கு, ஜம்மு - காஷ்மீர் அரசியல் சட்டம் கட்டுப்பட்டது தான். ஆனால் இந்திய அரசியல் சட்டத்தின் பலவிதிகள் ஜம்மு - காஷ்மீர் மக்களைக் கட்டுப்படுத்த மாட்டா.

5. இந்திய அரசியல் சட்ட விதி 370 இன்படி, ஜம்மு - காஷ்மீர் தனி உரிமைகளைப் பெற்ற ஒரு தன்னுரிமை நாடாகும்.

இவ்வளவு தனி உரிமைகளையும் 1956முதல் திட்டமிட்டுப் பறித்துக் கொண்டு, ஷேக் அப்துல்லா, பரூக் அப்துல்லா குடும்பத்தின் கைப்பொம்மை ஆட்சியை அங்கே நிலைக்க வைத்த மாபெரும் உரிமைப் பறிப்பைச் செய்தவர்கள் பண்டித நேரு - இந்திரா காந்தி இராஜிவ் காந்தி - நரசிம்மராவ் என்கிற காங்கிரஸ் பார்ப்பனத் தலைவர்களே ஆவர்.

இன்று, அவர்களை விடவும் கேடாக ஜம்மு - காஷ்மீர் மக்களின் உரிமைகளையும் ; வட கிழக்கு மாநில மக்களின் தன்னுரிமை எழுச்சிகளையும் படை பலத்தைக் கொண்டு கொடுமையாக ஒடுக்குவது பாரதிய சனதா அரசு.

இது தன்னுரிமைப் போருக்கு எதிராக - 'இந்திய அரசு நடத்தும் பயங்கரவதாதம்' (Indians State Terrorism) அல்லவா?

இப்படிப்பட்ட மதவெறி, இனவெறி, பழமைப் பாதுகாப்பு வெறி பிடித்த இந்தியப் பார்ப்பன - மேல் சாதி ஆளும் வர்க்கத்தினர் - 'இஸ்லாமிய அடிப்படை மத வெறி பயங்கரவாதம்' (Islamic Fundamentalist Terrorism) என்று கூச்சல் எழுப்பி, இஸ்லாமியரை ஒடுக்க நினைப்பது எப்படிச் சரியாகும்? மதப் பரப்பல் வெறி பிடித்தவர்கள் என்று கூறி, கிறித்துவர்களை ஒடுக்குவது, இந்து மதம் சார்ந்த பயங்கரவாதம் அல்லவா?

படிப்பகம்

www.padippakam.com



இவற்றையெல்லாம் மறந்து விட்டு, பாக்கிஸ்தானை எதிர்க்க வேண்டும் என்கிற பேரால், பாக்கிஸ்தான் அரசு இஸ்லாமிய மத வெறியர்களை வளர்த்து, பயிற்சி அளித்து, காஷ்மீர் வழியாக இந்தியாவுக்குள் நுழையவிட்டு, இஸ்லாம் மதத்தை வளர்ப்பதாகக் கூறுவதும், இன்று இஸ்லாமிய பயங்கரவாதத்தை ஒடுக்க அமெரிக்காவுக்குத் துணை போக இந்தியா உறுதி கூறுவதும் பச்சையான இந்துத்துவ மதவெறிப் பயங்கரவாதம் அல்லவா?

இஸ்லாமிய மதவெறி, இந்துத்துவத்துவ மத வெறி என்பவை மனித குலத்துக்கு எந்த விடுதலையைத் தரும்?

1990க்குப் பின்னர் சமதர்ம ஆட்சிகள் மறைந்து விட்ட உலக அரங்கில், ஏகாதிபத்தியச் சுரண்டலும், பன்னாட்டுத் தொழில் - வணிக மூலதன ஆதிக்கமும் பெருக மட்டும் தானே இவை பயன்படும்?

இஸ்லாமிய மதத்தின் பேரால் நடத்தப்படும் 'புனிதப் போர்' - இஸ்லாமிய நாடுகளில் அல்லது வேறு நாடுகளில் உள்ள இஸ்லாமியர்களுக்கு, அரசியல் - பொருளாதார - அறிவு விடுதலையைத் தருமா? ஆப்கானிஸ்தான் இஸ்லாமியர்களுக்கோ, பாக்கிஸ்தானிய - பாலஸ்தீனிய இஸ்லாமியர்களுக்கோ இதனால் கல்வி, மருத்துவம், வேலை வாய்ப்புத் தருகிற நல்ல ஆட்சிகள் கிடைக்குமா?

இந்துத்துவ - இராமாயண மூட நம்பிக்கையை நிலைக்க வைப்பதால் - ஒரிசா, பீகார், தமிழ்நாடு, ஆந்திரா முதலான பல இந்திய மாநிலங்களில் ஏழ்மையோ, கல்வி இன்மையோ ஒழியுமோ?

உலக வணிக ஒப்பந்தம் மூலம் உலகப் பெரும் பணக்காரனாக பில் கேட்ஸ் உருவாக முடிந்தது. இந்தியப் பெரும் பணக்காரனாக ஓர் பிரேம்ஜி ஆக முடிந்தது. செயற்கைக்கோள், செய்தித்தொடர்புச் சாதனங்கள் வளர்ச்சிப் பெருக்கம் - உணவை, மருந்தை, வேலைவாய்ப்பை வெகு மக்களுக்குத் தர உதவியதா? வெகு சிலருக்கு வயிற்றுப் பாட்டுக்கு வேலை தர மட்டுமே இவை உதவுகின்றன.

இந்த வளர்ச்சியின் சின்னம் தான் உலக வணிக மையம்.

உலக வணிக மையத்தின் பெருமை, உலக வணிக ஒப்பந்தத்தின் சிறப்புகள், பன்னாட்டு நிதியத்தின் உதவிகள் என்பதை வளரும் மூன்றாம் உலக நாடுகளின் அரசியல் - பொருளாதார வளர்ச்சிகளைத் தடுத்து வறுமையிலும் அறியாமையிலும் நோயிலும் அந்நாடுகளிலுள்ள பல நூறு கோடி மக்களைத் தள்ளுவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டவை.

1945முதல் திட்டமிட்டு 1990 இல் இவற்றை உலக நாடுகளின் தலையில் சுமத்தி உலகத்தின் ஒரே அடியாளாக - பேரதிகார மய்யமாக (super power) விளங்குவது தான் அமெரிக்கா.

இவர்களின் கப்பல் படை, வானூர்திப்படை, காலாட்படைத் தாக்குதலால் ஆப்கனிய முரட்டு இஸ்லாமியர்களை அழித்து விட முடியாது. இவர்களின் அரவணைப்பில் உள்ள ஓசாமா பின் லேடனைப் பிடித்து விடவும் முடியாது.

உலக மானிடத்தின் எல்லா இன்னல்களையும் போக்கிட இன்றுள்ள எந்த உலக அமைப்பும் பயன்பட வில்லை. ஏனெனில் எல்லா அமைப்பு களையும் அமெரிக்காவே ஆட்டிப் படைக்கிறது. இது மானிடத் தின் நலனுக்கு எதிரானது.

இந்த இழிநிலையை மாற்ற எல்லாம் செய்வதே மானிட நலனில் அக்கறை கொண்ட ஒவ்வொருவரின் கடமையாகும்.

*30.9.2001*
புதுதில்லி

**வே. ஆனைமுத்து**

## சுவாசத்தை என் செய்வீர்?

— கவிஞர். உலகநாதன்

கதிரொளிதான் பூமிதனைத்
தீண்டிடவே மறுத்துவிடின்
இருளினிலே இவ்வுலகம்
இருந்தன்றோ இன்னலுறும்?
நிலவொளியும் வையத்தைத்
தீண்டுவதே இல்லையெனின்
வளர்பிறையும் முழுமதியும்
வானத்தில் நமக்கேது?

ஒருதாயின் வயிற்றினிலே
உதித்துவந்த நாமெல்லாம்
உடன்பிறந்தோர் ஒருசிலரை
ஒதுக்கிடுதல் தவறன்றோ!
கைகளினால் தீண்டுவதைக்
கூடாது என்கின்றீர்
காற்றினிலே கலந்துவிட்ட
சுவாசத்தை என்செய்வீர்?

பேதங்கள் நம்மிடையே
செய்ததந்த வேதங்கள்
பிறப்பினிலே கீழ்மேலாய்க்
காட்டியது மனுதர்மம்
ஊர்ப்பிளவில் உல்லாசம்
கொண்டாடும் கொடுஞ்சூதுப்
பார்ப்பனரின் சூழ்ச்சிக்குப்
பலியானோம் நாமெல்லாம்!

வேண்டாத உணவாயின்
உடலுக்கு நோயாகும்
வேண்டாத குணமாயின்
மனதுக்கு நோயாகும்
தீண்டுவதால் தீட்டென்று
மனிதர்களை ஒதுக்குகிற
தீண்டாமை தேசத்தின்
தீராத நோயாகும்!

படிப்பகம்

www.padippakam.com



## சென்னையில் பாவாணர் விழா

தமிழ்ச் சான்றோர் பேரவையும், தமிழர் தேசிய இயக்கமும் இணைந்து சென்னை பாவாணர் நூலகக் கட்டடத்தில் 22.9.2001 அன்று மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாக நடத்தின. ஆவடி செ.ப. முத்தமிழ் மணி வரவேற்புரையாற்ற அ. வியனரசு தலைமையில் முனைவர் அருகோ, புலவர் இறைக்குருவனார், சொல்லாய்வறிஞர் ப. அருளி உள்ளிட்டோர் விழாவில் பங்கேற்றனர். தமிழ்ச் சான்றோர் பேரவை நிறுவனர் நா. அருணாசலம் பாவாணர் படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார். பழ. நெடுமாறன் நிறைவுப் பேருரையும் விழா எழுச்சியுடன் முடிந்தது.

## நல்லாசிரியருக்கு வாழ்த்து

காஞ்சிபுரம் மாவட்டம் காயரம்பேடு அரசினர் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் தோழர் க. வெள்ளைச்சாமிக்குத் தமிழ்நாடு அரசு இந்த ஆண்டு நல்லாசிரியர் விருது வழங்கியுள்ளது. அரியலூர் மாவட்டம் மீன்சுருட்டியில் பிறந்த இவர் திருச்சி, விழுப்புரம் மாவட்டங்களில் பட்டதாரி, முதுநிலைப் பட்டதாரி ஆசிரியராகப் பணியாற்றியவர். நான்கு ஆண்டுகள் மாம்பாக்கம் அரசு உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். அது போழ்து 10ஆம் வகுப்புத் தேர்ச்சி விகிதம் 97%க்கு மேல் உயரக் காரணமாய் இருந்தார். மாணவர் எண்ணிக்கை, தளவாட வசதி, கட்டட வசதி, நூலக வசதி ஆகிய அனைத்தையும் திட்டமிட்டு வளரச் செய்தார்.

அப்பள்ளி மேல்நிலைப் பள்ளியாக உயருவதற்குப் பெரிதும் உழைத்தார்.

பள்ளியில் எங்கு நோக்கினும் தென்னையும், வாழையும், தேக்கும், பூச்செடிகளும் நிறைந்து காணப்படுவதால் கற்பதற்கேற்றச் 'சுற்றுச்சூழல்' நிலவுகின்றது. இந்தக் கோணத்தில் இதனை ஒரு முன் மாதிரிப் பள்ளியாக்கியுள்ளார். சாரணர் இயக்கம், அறிவியல் கண்காட்சி ஆகியவற்றில் இப்பள்ளி மாணவர்கள் சாதனை புரியக் காரணமாய் இருந்தார். ஆசிரியர் இயக்க நடவடிக்கைகள், போராட்டங்கள் போன்றவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர், மாவட்ட அளவில் தலைமைப் பொறுப்புகளில் இருந்தவர். ஆசிரியர் - மாணவர்களிடம் தரமான கல்விக்கான சூழலை உருவாக்கித் தந்து வெற்றிகளைக் குவித்துள்ள இவருக்குத் தமிழ்நாடு அரசு நல்லாசிரியர் விருது வழங்கியிருப்பது சாலப் பொருத்தமானதாகும். அவருடைய கல்வித் தொண்டும், சமுதாயத் தொண்டும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

- ஆசிரியர் குழு

## சிதம்பரத்தில் ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு



தடை உடைத்து மீண்டும் - ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடும், தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் 10ஆம் ஆண்டு விழாவும் சிதம்பரம் கீழ வீதி வி.கே.ஆர். திருமண மண்டபத்தில் விருத்தாசலம் இராசு நினைவரங்கத்தில் 16.9.2001 ஞாயிறு காலை எழுச்சியோடு தொடங்கின.

தொடக்க அரங்கம் காலை 10 மணிக்கு அ.கோ. கஸ்தூரி அரங்கன் தலைமையில் நடைபெற்றது. வே.மணிவாசகம் முன்னிலை வகித்தார். கு. சிவப்பிரகாசம் வரவேற்புரையாற்றினார். நா. அருணாசலம் தொடக்கவுரையாற்றினார். ஈழப் போரின் உலகத்தாக்கம் குறித்த கருத்தரங்கம் க. பரந்தாமன் தலைமையில் முற்பகல் 11 மணிக்கு தொடங்கியது. இரா. வெங்கடேசன் முன்னிலை வகித்தார். புதுக்கோட்டை பாவாணன், மு. பாலகுருசாமி, கவிஞர் அறிவுமதி, புலவர் கலியபெருமாள், ச.யோகநாதன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். பிற்பகல் கோவி. கணேசன் மற்றும் மாங்குடி சௌந்தர் தமிழ் இன எழுச்சிப் பாடல்களைப் பாடினர். தவிக்கும் தமிழகம் பற்றிய சிறப்பரங்கம் புலவர் கி.த. பச்சையப்பன் தலைமையில் பிற்பகல் 3 மணிக்குத் தொடங்கியது. பா.மோகன் முன்னிலை வகித்தார். தியாகு, இறைக்குருவனார், அரங்க. குணசேகரன், பேராசிரியர் த. செயராமன், சா.சந்திரேசன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். பின்னர் மு. அந்தாலார் தலைமையில் தீர்மான அரங்கம் நடைபெற்றது. நா.பா. இராமசாமி, புதுவை அழகிரி , தமிழ் வேங்கை, துரை. தமிழரசன், கா.பேகன் ஆகியோர் தீர்மானங்களை வலியுறுத்தி உரையாற்றினர். மாலை 6 மணிக்கு கி. வெங்கட்ராமன் தலைமையில் நிறைவரங்கம் நடைபெற்றது. அற்புதம் குயில்தாசன் முன்னிலை வகித்தார். தோழர்கள் பழ.நெடுமாறன், பண்ருட்டி ச. இராமச்சந்திரன், பெ.மணியரசன், கொளத்தூர் தா.செ.மணி, பேராசிரியர் சுப.வீரபாண்டியன், ச. மெல்கியோர், வாலாசா வல்லவன் ஆகியோர் எழுச்சி உரையாற்றியப் பின் தோழர் பழமலை நன்றியுடன் இரவு 9 மணிக்கு மாநாடு முடிவடைந்தது.

- கோ.அருண்மொழி

படிப்பகம்

www.padippakam.com



# டர்பன் மாநாடும் அதன் படிப்பினையும்

க.முகிலன்

இனவெறி, இன வேறுபாடு, அயலார் வெறுப்பு முதலான கொள்கைகளுக்கு எதிரான உலக மாநாடு (World Conference against Racism, Racial Discrimination, Xenophobia and Related intolerance) தென் ஆப்பிரிக்காவில் டர்பன் நகரில் 2001, ஆகஸ்டு 31 முதல் செப்டம்பர் 8 வரை நடைபெற்றது. செப்டம்பர் 7-ஆம் தேதியுடன் முடிவடைவதாக இருந்த இம்மாநாடு, மாநாட்டின் கொள்கை அறிக்கை, செயல்திட்ட அறிக்கை ஆகியவற்றை இறுதி செய்வதில் பங்கு பெற்ற நாடுகளுக்கிடையே ஏற்பட்ட கடும் முரண்பாடுகள் - விவாதங்கள் - சமரச முயற்சிகள் காரணமாக மேலும் கூடுதலாக ஒரு நாள் நடந்தது.

டர்பன் ஒரு துறைமுக நகரம். தென் ஆப்பிரிக்காவின் வெள்ளை நிறவெறிக் கொடுங்கோலாட்சியை நெல்சன் மண்டேலா தலைமையில் கறுப்பின மக்கள் 1994-ஆம் ஆண்டு தூக்கியெறிந்து மக்களாட்சியை நிறுவினார்கள். அதனால் இனவெறிக்கு எதிரான மாநாடு டர்பன் நகரில் நடத்த முடிவு செய்யப்பட்டமை மிகவும் பொருத்தமானதாகும். இந்தியர்களைப் பொறுத்த மட்டில் டர்பன் நகருக்கு இன்னொரு சிறப்பும் உண்டு. 1893 மே மாதம் காந்தியார் வழக்கறிஞர் தொழில் நடத்துவதற்காக டர்பன் துறைமுகத்தில் இறங்கினார். டர்பனில் கால் வைத்த ஒருவாரத்திற்குள் அங்குத் தொடர் வண்டியில் முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து நள்ளிரவில் ஒரு வெள்ளையனால் பெட்டிப் படுக்கையுடன் தூக்கி எறியப்பட்டார். இனவெறிக்கு எதிராகப் போராடுவது என்று காந்தியார் அப்போதுதான் முடிவு செய்தார். 1914 சூலையில் இந்தியாவிற்கு நிலையாகத் திரும்புகின்ற வரையில் தென் ஆப்பிரிக்காவில் நிறவெறிக்கு எதிரான போராட்டங்களைக் காந்தியார் நடத்தினார்.

அய்க்கிய நாடுகள் அவை இன வெறிக்கு எதிரான உலக அளவிலான மாநாடுகளை 1978, 1983 ஆகிய ஆண்டுகளில் நடத்தியது. இந்த இரு மாநாடுகளிலும் தென் ஆப்பிரிக்காவில் அப்போதிருந்த இனவெறி ஆட்சியை ஒழிக்க வேண்டும் என்பதே முதன்மையானதாக இருந்தது. இனவெறி ஆட்சிக்கு ஆதரவாக இருந்த அமெரிக்காவும் இசுரேலும் இவ்விரு மாநாடுகளிலும் கலந்து கொள்ளவில்லை என்பது கவனத்திற்கொள்ள வேண்டியதாகும். இரண்டாவது மாநாட்டிற்குப் பிறகு உலகில் கடைசி காலனி நாடாகவிருந்த நமீபியா 1990 மார்ச் மாதம் 21-ஆம் நாள் விடுதலை பெற்றது. 1994 ஏப்பிரல் 27-ஆம் நாள் தென் ஆப்பிரிக்காவில் வெள்ளை இன நிறவெறி ஆட்சி வீழ்ந்தது.



நிறுவன வடிவத்திலோ, ஆட்சி அதிகாரத்திலோ இனவெறியும் இனவேறுபாடு காட்டுவதும் இல்லாத போதிலும் இனம், தேசம், மொழி, குலம், மதம், கலாச்சாரம், அகதி முதலானவற்றின் அடிப்படையில் ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரை வெறுப்பதும், ஒடுக்குவதும்,

கொடுமைப்படுத்துவதும் உலகின் பல பகுதிகளிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இனவெறிக்கு எதிரான மாநாடு என்று பொதுவான பெயரால் அழைக்கப்பட்ட போதிலும் அனைத்து வகைப்பட்ட மானுட ஒடுக்குமுறைகள் குறித்தும் இம்மாநாட்டில் விவாதிக்கப்பட வேண்டும் என்பது இம்மாநாட்டின் நோக்கமாகக் கூறப்பட்டது. மேலும் பாதிக்கப்பட்ட பிரிவினர் தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்

www.padippakam.com



பதற்கான மாநாடாகவும் இது இருக்க வேண்டும் என்று இம்மாநாட்டின் அமைப்பாளரும், அய்க்கிய நாடுகள் அவையின் மனித உரிமைக் காப்புக்குழுவின் (UNHRC) தலைவருமான மேரி ராபின்சன் திட்ட வட்டமாக அறிவித்திருந்தார்.

இதன் பின்னணியில், டர்பன் மாநாட்டில் சாதி, சாதிக் கொடுமை, தீண்டாமை குறித்து எதுவும் பேசக்கூடாது என்ற கேடான நிலைபாட்டை இந்திய அரசு குரங்குப்பிடியாகக் கடைசிவரையில் கொண் டிருந்தது ஏன் என்பதை அடிமை வகுப்பினராக ஆக்கப்பட்டிருக்கிற சூத்திரர்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டி யுள்ளது.

அய்க்கிய நாடுகள் அவை பெண்ணுரிமை, சுற்றுப்புறச்சூழல், குழந்தைத் தொழிலாளர், வறுமை முதலான பொருள் குறித்துப் பல மாநாடுகளை நடத்தியுள்ளது. இம்மாநாடுகள் குறித்து இந்தியாவில் கருத்து முரண்பாடுகளும், வாதங்களும் எழுந்த தில்லை. வெறும் செய்திகளாக மட்டுமே பத்திரிகை களில் வெளிவந்தன. இன்னும் சொல்லப்போனால் 1978, 1983 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற இனவெறிக்கு எதிரான மாநாடுகளின் போதுகூட இந்தியாவில் கருத்து மோதல்கள் நிகழவில்லை. ஆனால் டர்பன் மாநாடு இந்தியாவில் பெரும் புயலையே கிளப்பியது. டர்பன் மாநாட்டில் சாதி, தீண்டாமை குறித்து விவாதிக்க வேண்டும் என்றும், கூடாது என்றும் கடந்த ஆறு மாதங்களாக நாள் தோறும் இந்தியா முழுவதும் கடுமையான விவாதம் நடைபெற்றது.

சாதியக் கொடுமை, தீண்டாமை குறித்து உலக அரங்கில் விவாதிக்க வேண்டும் என்பது யாருடைய குரல்? இவற்றின் பெயரால் காலங்காலமாக ஒடுக்கப்பட்டு கிடக்கும் மக்களின் போர் முழக்கம் இது! இவர்களின் நோக்கம் என்ன? சுதந்திர இந்தியா வில் 54 ஆண்டுகளுக்குப் பிறகும் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது நாள்தோறும் நடத்தப்பட்டு வரும் கொடுமைகள்ள உலகின் பல நாட்டவரும் அறியச் செய்வதன் மூலம் தங்களுக்கான விடுதலையை வேகப்படுத்த முடியும் என்பதே! இவற்றை டர்பன் மாநாட்டில் விவாதிக்கக் கூடாது என்பவர்கள் யார்? 3000 ஆண்டுகளாகச் சாதி அமைப்பை ஒடுக்குமுறைக் கருவியாகப் பயன்படுத்தி ஆதிக்கம் செலுத்திவரும் சக்திகள்! இத்தகைய மோதல் நடப்பது இதுதான் முதல் முறையா? இல்லை! 1930களின் தொடக்கத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக அண்ணல் அம்பேத்கரும், பார்ப்பன - பனியா ஆதிக்கச் சக்திகள் தொடர்ந்து ஆளும் வகுப்பாகவே இருக்க வேண்டும் என்பதற்காகக் காந்தியும் இலண்டனில் வட்ட மேசை மாநாட்டிலும், இந்தியாவிலும் மோதிக் கொண்டனர். காந்தி - அம்பேத்கர் மோதலின் தொடர்ச்சிதான் டர்பன் மாநாட்டில் சாதிக்கொடுமை பற்றிப் பேசக் கூடாது என்பதை ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தியாவில் உள்ள தலித் அமைப்புகளை ஒருங்கிணைத்துத் தலித் மக்களுக்கான மனித உரிமை அமைப்பு (NDHRC) இரண்டு ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பின் முயற்சியால், சாதியக் கொடுமைகளையும் தீண்டாமையின் கொடுமைகளையும் உடனடியாகத் தடுத்து நிறுத்து மாறு கோரி 25 இலட்சம் மக்கள் கையெழுத்திட்ட விண்ணப்பம் பிரதமர் வாஜ்பாயிடம் தரப்பட்டது. அய்க்கிய நாடுகளின் மனித உரிமைக் காப்புக் குழுவிடம் (UNHRC) இந்த விண்ணப்பத்தின் நகல் தரப்பட்டது.

இந்திய அரசு சாதிச்சிக்கல் குறித்து இந்தியாவிற்கு அப்பால் பேசப்பட்டதே இல்லை என்பது போல் பாசாங்கு செய்கிறது. அய்க்கிய நாடுகள் அவையின் உறுப்பினராக உள்ள இந்தியா மனித உரிமைகள் குறித்த பல ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. 1969-இல் நடைபெற்ற அனைத்து வகைப்பட்ட இனவெறி ஒடுக்கு முறைகளையும் ஒழிப்பதற்கான மாநாட்டின் ஒப்பந்தத்திலும் இந்தியா கையொப்பம் இட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின்படி அனைத்து நாடுகளிலும் அரசு எடுக்கும் நடவடிக்கைகளை ஆராய்வதற்கு ஒரு குழு உருவாக்கப்பட்டது. இக்குழு 1996-இல் இந்தியாவின் நிலை பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில், ''தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பு மக்கள் மீது நடத்தப்படும் கொடுமைகளைத் தடுத்து நிறுத்த அரசு தனியான தீவிரமான முயற்சி களை எடுக்கவேண்டும். இத்தகைய கொடுமைகள் நடந்தால் அவை பற்றி முழுமையாக ஆராய்ந்து இதற்குக் காரணமானவர்களைத் தண்டிக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படுவதுடன் இழப்பீட்டுத் தொகையும் அளிக்கவேண்டும். இந்திய மக்களின் உள்ளங்களில் ஊறி இறுகிப்போயுள்ள, சாதிகாரணமாக உயர்வு - தாழ்வு காட்டுகின்ற மனப்போக்கை மாற்றுவதற்கு தீவிர பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும்'' என்று இந்திய அரசுக்கு அறிவுறுத்தியுள்ளது. (UN Committee on the Elimination of All Forms of Racial Discrimination - (ERD/C/304/Add 13, September 17, 1996)

குடிமை மற்றும் அரசியல் உரிமை குறித்த அய்க்கிய நாடுகளின் குழு 1997-இல் வெளியிட்ட அறிக்கையில், ''அரசு சில பாதுகாப்பு நடவடிக் கைகள் எடுத்திருந்த போதிலும், தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பு மக்களும், பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களும், சிறுபான்மையினரும் கடுமையான ஒடுக்குமுறை களுக்கும், கொடுமைகளுக்கும் ஆளாகி விடுகின்றனர். மனித உரிமை மீறல்கள், சாதி மோதல்கள், பிணைத்தொழிலாளர்கள் மற்றும் பிறவகையான கொடுமைகள் காரணமாக இவர்கள் பலவகையான துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். எல்லா வகையான ஒடுக்கு முறைகளுக்கும் எதிரான பிரச்சாரத்தை மாநில அரசுகளும் மத்திய அரசும் மேற்கொள்ள வேண்டும் என்று இக்குழு பரிந்துரைக்கிறது'' என்று கூறப்பட்டுள்ளது. (UN Committee on Civil and Political Rights, Consideration of the Government of India Report to the Human Rights Committee - CCPR/c/79 Add 81, August, 1997)

இதேபோன்று பெண்கள் மீதான ஒடுக்குமுறை ஒழிப்புக் குழு 2000-ஆம் ஆண்டில் வெளியிட்ட

படிப்பகம்

www.padippakam.com



அறிக்கையில், ''தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பு மக்கள் மீதான வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் 1989-இல் இயற்றப்பட்டுள்ள போதிலும் இவ்வகுப்புகளைச் சேர்ந்த பெண்கள் மீது குறிப்பாக தலித் பெண்கள் மீது தொடர்ந்து பாலியல் கொடுமைகள் ஏவப்பட்டு வருகின்றன. சாதிய அமைப்பு முறை, ஆண் குழந்தைக்கு முதன்மை, ஆண் - பெண் சமத்துவமின்மை, குறைந்துவரும் பெண்களின் எண்ணிக்கை, பெண்களை உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் துன்புறுத்தல், வறுமை போன்ற காரணங்கள் இக்குழுவின் கோட்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தடைகளாக இருக்கின்றன என்று இக்குழு கருதுகிறது'' என்று குறிக்கப்பட்டுள்ளது. (UN Committee on the Elimination of Discrimination against Woman - (EDAWC/2000/1/CRP 3/ADD date 31.4.2000)

அடிமை வகுப்பினரான தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்பட்ட வகுப்பு மக்கள், தலித் பெண்கள் ஆகியோர் மீது நடத்தப்படும் மானுட உரிமைப் பறிப்புகளுக்கும், கொடுமைகளுக்கும் சாதி அமைப்பே முதன்மையான காரணமாக இருக்கிறது என்பதை மேலே குறிப்பிட்டுள்ள அய்க்கிய நாடுகளின் பல்வேறு குழுக்களின் அறிக்கைகள் உணர்த்துகின்றன. ஆனால் சமூகவியல் அறிஞர் என்று கருதப்படுகின்ற ஆண்ட்ரி பெட்டைல், சிறந்த வழக்கறிஞர் என்று போற்றப்படுகின்ற சோலி சோராப்ஜி போன்றவர்கள் இனவெறியும் சாதியும் ஒன்றல்ல; சாதி இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்சினை; இதில் அய்க்கிய நாடுகள் அவை தலையிடக்கூடாது என்று அரசுக்குச் சார்பாகப் பிரச்சாரம் செய்தனர். ஆனால் டர்பன் மாநாட்டில் விவாதிப்பதற்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதற்காக ஜெனிவாவில் ஆகஸ்டு மாதம் நடந்த கூட்டத்தில் 109-ஆவது பத்தியில் 'பிறப்பு மற்றும் செய்தொழில்' (decent and occupation) தொடர்பான ஒடுக்குமுறைகளையும் விவாதிக்க அனுமதிக்கப் பட்டது. இனவெறியும் சாதியக் கொடுமையும் ஒன்றே என்று நேரடியாகக் கூறா விட்டாலும், சாதியக் கொடுமை பற்றி விவாதிக்க பத்தி 109 ஆதாரமாக உள்ளது. மலம் அள்ளுதல், மலக்கூடை சுமத்தல், பாடை கட்டுதல், பறையடித்தல், பிணத்தை எரித்தல், புதைத்தல், தெருக் கூட்டுதல், செத்த மாடுகளைத் தூக்கி அப்புறப் படுத்தல் போன்ற அருவருப்பான இழிந்த வேலைகளை இந்தியா முழுவதும் இன்றைக்கும் தீண்டப் படாத மக்கள் தானே செய்கின்றனர். சாதி இந்துயாரேனும் தூய்மையற்ற இவ்வேலைகளைச் செய்கின்றாரா? இக்கொடுமையைப் பற்றி டர்பன் மாநாட்டில் பேசக்கூடாது என்று இந்திய அரசும், ஆளும் வகுப்பினரின் நலன் காக்கும் அறிவாளிகளும் கூறுகின்றனர்.

இந்திய அரசும் ஆளும் வகுப்பினரின் அடிவருடிகளும் எவ்வளவு முயன்று தடுத்த போதிலும் டர்பன் மாநாட்டிற்கு உலகின் பல நாடுகளிலிருந்தும் வந்திருந்த பிரதிநிதிகளுக்கு இந்தியாவில் நிலவும் தீண்டாமை, சாதியக் கொடுமைகள் பற்றி அவர்கள் உள்ளங்களில் பதியுமாறு உணர்த்தப்பட்டு விட்டது. தலித் அமைப்புகளுக்கும், மனித உரிமை அமைப்புகளுக்கும் கிடைத்த வெற்றியாகும் இது.

கடந்த பத்து பதினைந்து ஆண்டுகளாக அய்க்கிய நாடுகள் அவை மாந்தநேயத்திற்கும் மானுட உரிமைகளுக்கும் எதிராக உள்ள சிக்கல்கள் பற்றி மாநாடுகள் நடத்தும் போதெல்லாம், அரசு சார அமைப்புகளின் மாநாடுகளும் கூடவே நடத்தப்படுகின்றன. அதிகார பூர்வமான மாநாட்டில் ஒவ்வொரு நாடும் உண்மை நிலையைத் திரித்தும் மறைத்தும் கூறுகின்றன. மேலும் அவை அந்நாடுகளின் ஆளும் வகுப்பினரின் நலன்களைக் காப்பதற்கான கருத்துக்களாகவே இருக்கின்றன. அதனால் அரசு சாரா அமைப்புகளின் மாநாடுகளில் பாதிக்கப்பட்டவர்களின் துன்பங்களையும் கருத்துக்களையும் உலகறியச் செய்வதற்கு வாய்ப்பும் உரிமையும் தரப்படுகின்றன.

இத்தன்மையில் டர்பன் நகரில் இனவெறிக்கு எதிராக ஆகஸ்டு 26, 27 ஆகிய நாள்களில் இளைஞர் மாநாடும், ஆகஸ்டு 29 முதல் செப்டம்பர் 1 வரை அரசு சாரா அமைப்புகளின் மாநாடும் நடைபெற்றன. இந்தியாவிலிருந்து தாழ்த்தப்பட்ட பழங்குடி வகுப்புகளையும் மனித உரிமை அமைப்புகளையும் சேர்ந்த 190 அமைப்புகள் இதில் கலந்து கொண்டன. உலகின் பல நாடுகளிலிருந்தும் 1300 அரசு சாரா அமைப்புகள் பங்கேற்றன. இந்தியாவிலிருந்து சென்ற 190 அமைப்புகளில் 54 அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகஸ்டு 31 முதல் செப்டம்பர் 8 வரை நடைபெற்ற அதிகார பூர்வ மாநாட்டிலும் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர்.

தலித் அமைப்புகள் சிறந்த முறையில் திட்டமிட்டு அதற்கான தயாரிப்புகளுடன் டர்பன் மாநாட்டிற்குச் சென்றன. அரசு சாரா அமைப்புகளின் (NGOs) மாநாட்டில் தலித் அமைப்புகள் வெளியிட்ட பலவகையான அறிக்கைகள், தீண்டாமையின் கொடுமையை விளக்கும் நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் மூலம் இந்தியாவில் சாதிக் கொடுமைக்கும் தீண்டாமைக்கும் எதிரான சட்டங்களும், அரசின் திட்டங்களும் இருந்த போதிலும், தாழ்த்தப்பட்ட மக்களின் கொடிய வாழ் நிலையில் மாற்றம் ஏற்படவில்லை என்பதை அனைவரும் அறியச் செய்தனர். டர்பன் நகரின் வீதிகளில் ஊர்வலங்கள் நடத்தினார்கள். 'காந்தி பிறந்த மண்ணில் இன்று ஒரு மண்டேலா வேண்டும்', 'சாதி வெறி ஒழிக' என்ற முழக்கங்கள் எழுப்பப்பட்டன. டர்பன் நகரின் தெருக்களிலும் 'தப்பாட்டமும்' கலை நிகழ்ச்சிகளும் நடத்தினார்கள்.

அய்க்கிய நாடுகள் அவையின் தலைவர் கோஃபி அனான் சாதியக் கொடுமையை மாநாட்டில் விவாதப் பொருளாகச் சேர்க்க முடியாது என்று தலித் பிரதிநிதிகளிடம் மறுத்த போதிலும், தலித்மக்களின் மனித உரிமைக்கான தேசியப் பிரச்சார அமைப்பின் (NDHRC) கடுமையான முயற்சியின் விளைவாக இதன் பிரதிநிதியான பால்தினகரை டர்பன் மாநாட்டில் பேச அனுமதி வழங்கினார். இனவெறிக்கு எதிரான டர்பன் மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியில் பால்தினகர் கேட்டார் நெஞ்சுருகும் தன்மையில் இந்தியாவில் 16 கோடி மக்களாக இருக்கின்ற தீண்டப்படாத மக்கள் மீது நடத்தப்பட்டு வரும் கொடுமைகளை

www.padippakam.com



விளக்கினார். கியூபா நாட்டின் தலைவர் காஸ்ட்ரோ தன்க்கே உரிய தன்மையில் அய்க்கிய நாடுகள் அவையின் மரபுகளையும் புறந்தள்ளிவிட்டு, இந்தியாவில் சாதியக் கொடுமைக்குள்ளாகியுள்ள மக்களையும், பாலஸ்தீனத்தில் தாக்குதலுக்குள்ளாகி வரும் மக்களையும், அகதிகளாக வாழும் தொழிலாளர்களையும் காப்பதற்கு உலக நாடுகளின் தலைவர்கள் முன் வரவேண்டுமென்று முழங்கினார். உலக மாநாடுகள் அனைத்திலும் தவறாமல் கலந்து கொள்வதில் விடாப்பிடியாக இருப்பவர் காஸ்ட்ரோ. இவர் எப்போது உரையாற்றினாலும் ஊசி விழுந்தாலும் ஓசை கேட்கக்கூடிய அமைதியுடனும் ஆர்வமுடனும் உலகத் தலைவர்கள் அவர் உரையைக் கேட்பது வழக்கம்!

டர்பன் மாநாட்டில் இந்திய அரசுக்கு எதிர்பாராத ஒரு திசையிலிருந்து பின்னடைவு ஏற்பட்டது. தேசிய மனித உரிமை ஆணையம் மத்திய அரசின் நிலைபாட்டை ஏற்க மறுத்தது. அரசின் பிரதிநிதிக் குழுவில் இடம்பெற அதன் தலைவர் ஜெ.எஸ்.வர்மா மறுத்துவிட்டார். தேசிய மனித உரிமை ஆணையம் ஆகஸ்டு 3 அன்று பெங்களூரிலும் 11 அன்று தில்லியிலும் டர்பன் மாநாட்டில் சாதி குறித்து விவாதிப்பது பற்றி மக்களின் கருத்தைக் கேட்டு அறிந்தது. ''இனவெறியும் சாதி வெறியும் ஒன்றா? இல்லையெனில் அவற்றிற்கு இடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகள் என்ன? என்ற விவாதங்களில் ஆணையம் நுழைய விரும்பவில்லை. ஆனால் சாதியின் அடிப்படையிலான ஒடுக்குமுறை ஒழிக்க வேண்டும் என்பதிலும் அதைப்பற்றி எந்த இடத்திலும் விவாதிப்பதற்கு எவருக்கும் உரிமை உண்டு என்பதிலும் ஆணையம் உறுதியுடன் இருக்கிறது'' என்றார். தேசிய மனித உரிமை ஆணையத்தின் பேராளராக டர்பன் மாநாட்டிற்குச் சென்ற நீதிபதி இராமசாமி ஆணையத்தின் இக்கருத்தையே வெளிப்படுத்தினார்.

அய்க்கிய நாடுகளின் மனித உரிமைக்காப்புக் குழுவின் தலைவரும் டர்பன் மாநாட்டின் அமைப்பாளருமாகிய மேரி ராபின்சன், ''இந்திய நாட்டின் தேசிய மனித உரிமை ஆணையம் மேற்கொண்ட உயர்ந்த கொள்கை வழிப்பட்ட நிலைபாட்டை நான் பாராட்டுகின்றேன். தலித் மக்களுக்கு இது பெருந்துணை புரிவதாக விளங்கும். இதேபோல் இந்தியாவின் அரசு சாராத் தொண்டு நிறுவனங்கள் (NGOs) இந்தியாவில் தலித் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்டு வரும் கொடுமைகள் குறித்த பிரச்சினையை எழுப்பின. இப்பிரச்சினை உலகில் உள்ள அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது'' என்று கூறியுள்ளார். இது ஒன்றுபோதும் - வென்றிருப்பது யார் என்பதற்கு!

டர்பன் மாநாட்டில் சாதியச் சிக்கல் குறித்து பேசக்கூடாது என்பதற்கு இந்திய அரசும், இந்துத்துவ சக்திகளும், அதன் அறிவாளிகளும் மிகவும் இழிவான, நகைப்புக்குரிய வாதங்களை முன்வைத்தனர். 27.8.2001, 28.8.2001 ஆகிய இரண்டு நாட்களும் இந்து நாளேட்டில் டர்பன் மாநாட்டில் சாதி குறித்து பேசக்கூடாது என்று சென்னையைச் சேர்ந்த பி.இராதா கிருஷ்ணன் என்பவர் கட்டுரை எழுதியிருந்தார். ''இந்து சமூகத்தின் கறையாக இருக்கின்ற சாதிய அமைப்பு இந்தியர்கள் சம்மந்தப்பட்ட விஷயமாகும். இதை இந்தியாவில் சமூக சீர்திருத்தங்கள் செய்வதன் மூலமும், சட்டப்பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதன் மூலமும் இந்திய மண்ணில் இருந்து கொண்டு போராடி அகற்ற முடியும் என்று அம்பேத்கர் நம்பியதால்தான் அரசியல் சட்டத்தில் தீண்டாமையை ஒழிப்பதற்கும், தலித்துகளுக்கான பாதுகாப்புக்கும் ஏற்பாடு செய்தார். குடியரசாகிவிட்ட இந்தியா பங்கு பெறும் உலக மாநாட்டில் சாதியத்தை ஒரு பிரச்சினையாக காட்சிப் பொருளாக (Tableaux) முன் வைப்பதை அம்பேத்கர் நகைப்பிடமானது என்று கருதி வெறுத்திருப்பார்'' என்று எழுதியிருக்கிறார். பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அரசியல் தலைவர்கள், அறிவாளிகள் ஆகியோரிடமும் மட்டுமின்றி உலகின் பல நாடுகளின் தலைவர்களிடமும் பத்திரிகைகள் மூலமும் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினையை உலக மக்களுக்கு விளக்குவதற்காக 1930-களில் 1940-களில் அம்பேத்கர் அரும்பாடுபட்டதைப் படித்தபிறகும், அம்பேத்கரை இவ்வாறு கொச்சைப் படுத்துவோரை அம்பேத்கரின் அடைமொழியால் 'அறிவு விபச்சாரிகள்' என்று தான் சொல்ல வேண்டும்.

டர்பன் மாநாட்டில் சாதிக் கொடுமை பற்றி விவாதிக்க வேண்டும் என்ற கோரிக்கை குறித்து காங்கிரசு கட்சி, பாரதிய சனதா கட்சி போன்ற அனைத்திந்திய அரசியல் கட்சிகள் அதிகார பூர்வமான முறையில் தம் கருத்தைத் தெரிவிக்காமல் மவுனம் சாதித்தன. பா.ச.க.வை சேர்ந்தவர்கள் அரசின் நிலைபாடு என்ற முறையில் மட்டும் எதிர்ப்புத் தெரிவித்தன. சங்பரிவாரங்கள் மட்டும் வெளிப்படையாக எதிர்த்தன. சி.பி.எம். சி.பி.அய். கட்சிகள் டர்பன் மாநாட்டில் சாதி பற்றி விவாதிக்க வேண்டும் என்று பட்டும் படாமல் கூறின. திராவிட இயக்கத்தின் அரசியல் வாரிசுகளான தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் டர்பன் மாநாடு பற்றி வாய்திறக்கவே இல்லை. தலித் அரசியல்கட்சி என்ற நிலையில் அதிக எண்ணிக்கையில் நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் பகுஜன் சமாஜ் கட்சியின் மாயாவதி நாடாளுமன்றத்திலோ வெளியிலோ வாய்திறக்கவில்லை. ராம் விலாஸ் பசுவான் கதையும் இதுவே! எனவே வாக்குவேட்டை கட்சிகள் எந்த 'இசத்தை'ப் பேசினாலும் ஆளும் வகுப்பிற்கு அரணாக இருக்கின்ற சாதியமைப் பையோ தீண்டாமையையோ ஒழிக்க முன்வர மாட்டார்கள் என்பதை ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். பார்ப்பனியத்தை வேரறுப்பதன் மூலமே சாதி களையும் தீண்டாமையையும் ஒழிக்க முடியும்; பார்ப்பனர் - பனியா கூட்டணி ஆளும் வர்க்கமாக இருக்கின்றவரை அடிமை வகுப்பினர்க்கு விடுதலை கிடைக்காது என்று அம்பேத்கர் கூறியிருக்கிறார்.

''அடிமை வகுப்புகளின் சார்பில் சொல்வதானால் இறையாண்மையுள்ள சுதந்திர இந்தியாவில் நிகழ

படிப்பகம்

www.padippakam.com



வேண்டுமென அவர்கள் எதிர்பார்ப்பது வாழ்க்கைத் தத்துவம் என்ற முறையிலும், சமூக அமைப்பு என்ற முறையிலும் பார்ப்பனர்கள் பூண்டோடு அழிக்கப் படுவதைத்தான் என்பதில் எனக்கு அய்யமில்லை'' (காங்கிரசும் காந்தியும் தீண்டாத மக்களுக்குச் செய்த தென்ன? நூல் பக். 257)

டர்பன் மாநாட்டிற்குப் பிற்பட்ட வகுப்புச் சங்கம் எதுவும் செல்லவில்லை. வழக்கமாக தாழ்த்தப்பட்ட, பழங்குடி அமைப்புகளுடன் கடந்த இருபது ஆண்டுகளாக பல சமயங்களில் இணைந்து செயல்பட்டு வந்த பிற்பட்ட வகுப்பு அமைப்பு எதுவும் டர்பன் மாநாட்டில் சாதிப் பிரச்சினையை விவாதிக்க வேண்டும் என்று குரல் கொடுக்க வில்லை. சூத்திரன் தீண்டத்தக்கவன் என்ற அளவில் தீண்டப்படாதவனை விடச் செங்குத்தான சாதி அடுக்கு அமைப்பில் மேலே இருக்கிறான். இந்துக்கள் என்று கூறப்படுகின்ற 84 கோடி மக்களில் தாழ்த்தப்பட்டவர்கள் 17 கோடி, பழங்குடியினர் 8 கோடி போக மீதியுள்ள 59 கோடிப் பேர் சாதி இந்துக்கள் எனப்படுகின்றனர். இவர்களில் பார்ப்பனர் மற்றும் பிற மேல் சாதியினர் 12 கோடி. மீதியுள்ள 47 கோடி மக்கள் சூத்திரர்கள். சூத்திரர்களில் பெரும் எண்ணிக்கையினர் உழைக்கும் வர்க்கமாகவே இருக்கின்றனர். சமூக வாழ்நிலை, கல்வி சொத்துடைமை அதிகாரத்தில் பங்கு போன்றவற்றில் இவர்கள் தாழ்த்தப்பட்டவர் களைவிட பெரிய அளவில் முன்னேறியிருக்க வில்லை. சாதியப் பாகுபாடு உருவாக்கியிருக்கும் மனப்போக்கு காரணமாக சூத்திரர்கள் தாழ்த்தப் பட்டவர்களை விட தம்மை உயர்ந்தவர்கள் என்று கருதிக் கொள்கிறார்கள். ஆனால் இவர்களில் ஒருவர் கூட கோயிலின் கருவறைக்குள் சென்று பார்ப்பானுக்குப் பதிலாக கடவுளுக்குப் பூசை செய்ய முடியாது. ஏனெனில் சூத்திரர்கள் சாத்திரப்படியும் சட்டப்படியும் தீண்டாதவர்களே! எனவேதான் பெரியார் 'பறையன் பட்டம் போகாமல் உங்களுடைய சூத்திரப்பட்டம் போய்விடும் என்று கருதுவீர்களேயானால் நீங்கள் வடிகட்டிய முட்டாள்களே யாவீர்கள்' (குடி அரசு 11.10.1931) என்று கூறினார். அடிமை வகுப்பினரராக உள்ள சூத்திரர்களும் தீண்டாதாரும் இணைந்து போராடு வதன் மூலமே தங்கள் விடுதலையைப் பெற முடியும் என்று அம்பேத்கர் வலியுறுத்தினார்.

எனவே முதலில் ஒழிய வேண்டியது 'பறையன்' என்ற பட்டம், இரண்டாவதாக ஒழிய வேண்டியது 'சூத்திரன்' பட்டம்.. ஆனால் ஆளும் வகுப்பாக இருக்கின்ற பார்ப்பன - பனியா - சத்திரிய ஆதிக்கக் கூட்டணியை எதிர்த்து வீழ்த்தாத வரையில் 'பறையன்' பட்டமும் போகாது; சூத்திரன் பட்டமும் நீங்காது.

இந்திய அரசியல் அமைப்புச்சட்டம் நிறைவேற்றப் படுவதற்கு முதல்நாள் 25.11.1949 அன்று டாக்டர் அம்பேத்கர் அரசியல் சட்ட அவையில் உரையாற்றியபோது, ''1950 சனவரி 26-ஆம் நாள் முரண்பாடுகளுடைய ஒரு வாழ்வியல் சூழலில் அடியெடுத்து வைத்திட உள்ளோம். அப்போது அரசியலில் நாம் சமத்துவத்தைப் பெற்றிருப்போம். ஆனால் சமூக மற்றும் பொருளாதார வாழ்விலோ சமத்துவமற்ற நிலையைப் பெற்றிருப்போம். வெகுவிரைவில் இந்த முரண்பாட்டை நாம் களைந்திட வேண்டும். அப்படிக் களைந்திடத் தவறுவோமானால் இந்த அரசியல் சட்ட அவை அரும்பாடுபட்டு உருவாக்கியுள்ள அரசியல் சனநாயகக் கட்டமைப்பையே சமத்துவமின்மையால் பாதிப்புக்கு ஆளாகிறவர்கள் அடியோடு தகர்த்து விடுவார்கள்'' என்று எச்சரித்தார்.

சுதந்திரம் பெற்று 54 ஆண்டுகளாகியும் தீண்டாமையும் சாதிக் கொடுமையும், சாதி ஆதிக்கமும் ஒழியவில்லை; பொருளாதார சமத்துவமும் ஏற்படவில்லை. சமூக சமத்துவத் தையும் பொருளாதார சமத்துவத்தையும் அடைவ தற்கு அடிமை வகுப்பினராக உள்ள சூத்திரரும் தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களும் இணைந்து போராட வேண்டியது ஒன்றே வழியாகும் என்பதே டர்பன் மாநாடு தரும் படிப்பினையாகும். புலே, பெரியார், அண்ணல் அம்பேத்கர் ஆகிய மூவரும் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் விடுதலைக்காகக் கூறிய தீர்வும் இதுவேயாகும். ●


**வாழ்க்கைத் துணை தேவை**

| | | |
|---|---|---|
| பெயர் | : | பொன். கணேசன் |
| வயது | : | 28 |
| பிரிவு | : | வன்னியர் |
| கல்வி | : | பி.காம், பி.எல். |
| தொழில் | : | வழக்கறிஞர், கட்டுமானத் தொழில். |
| பெண்ணிற்குத் தகுதி: | | பட்டப்படிப்பு, இடைநிலை ஆசிரியர் பயிற்சி. |

தொடர்பு முகவரி: 'வெள்ளை மாளிகை', நாவலூர் கிராமம், செரப்பனாஞ்சேரி போஸ்ட், படப்பை - 601 301


## பொது அறிவு 10,000 கேள்வி - பதில்

**வெளியீடு : சக்தி பப்ளிஷிங் ஹவுஸ் 1 சி, ஜீர் தெரு, வண்ணாரப்பேட்டை சென்னை 600 021. விலை ரூ.180**
**தொகுப்பாசிரியர் : ச.சா. குமார்**

இந்தியச் சுதந்தரப் போராட்டம் உள்ளிட்ட இந்திய வரலாறு, இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல், கணிதம், கணிதப் பதிவியல், வணிகவியல், புவியியல், அரசியல், பொருளியல், பொது அறிவு போன்ற தலைப்புகளில் கொள்குறி வகை வினாக்கள் 10,000 அடங்கிய இந்த நூல் எல்லா நிலைப் போட்டித் தேர்வாளர்களுக்கும் ஒரு தங்கச் சுரங்கம் ஆகும். ஒவ்வொன்றுக்கும் 200 வினாக்கள் அடங்கிய 24 பயிற்சி வினாத் தாள்களும் இந்நூலில் தனியே தரப்பட்டுள்ளன. 634 பக்கங்கள் உள்ள இந்நூல் நன்கு திட்டமிட்ட உருவாக்கப்பட்டுள்ளது. பொது அறிவுத் திறனை வளர்த்துக் கொள்ள விரும்புவோரும், போட்டித் தேர்வு எழுதுவோரும் கட்டாயம் வாங்கிப் படித்துப் பாதுகாக்க வேண்டியது இந்நூல். இந்நூல் வே. ஆனைமுத்தின் இட ஒதுக்கீட்டுப் பணியைப் பாராட்டி அவருக்குக் காணிக்கையாக்கப் பட்டுள்ளது பாராட்டுக்குரியதாகும். **- து. தில்லைவனம்**

படிப்பகம்

www.padippakam.com



மன்னார்சாமியின் மரத்தடி மன்றத்தில் இந்த மாத அரசியல் 7

# ஓம் பின்லேடனாய நமஹா!

- ஓலைப்பட்டி கந்தையா

(மன்னார் சாமி - மலர் ஆஸ்பத்திரி எதிரில் மரத்தடியில் செருப்புத் தைக்கிறவர். மலைக்குடி மருதமுத்து - மலர் ஆஸ்பத்திரிக்கு இதய அறுவைச் சிகிச்சைக்கு என்று 5 ஏக்கர் நிலத்தை விற்று விட்டு வந்தவர். இன்று மகள் வீடும் மரத்தடியும் என்று ஆகிவிட்டவர். ஏ.ஜி. ஆபீஸ் வெங்கடேசய்யர் - பதவி ஓய்வு பெற்ற அக்கவுண்டன்ட்)

**வெங்கடேசய்யர் :** மருத முத்து - மன்னார்சாமி - பிடியுங்கள் - டண்டடெய்ன் - மறுபடியும் ஸ்வீட் - காரணமும் சொல்றேன் - இது அமெரிக்க உலக வணிக மையமும் ராணுவ அய்ம் முக தளமும் தகர்க்கப்பட்டதுக்கும் இன்னொரு காரணத்துக்கும் தான்.

மருத முத்தும், மன்னார் சாமியும் அதிர்ச்சியில் எழுந்து நிற்கிறார்கள்.

**மருத முத்து:** (பிரமிப்பில் வாயடைத்து திக்கித் திக்கி சொல்றார்) அடப்பாவிகளா! காந்தி செத்ததுக்கும் இனிப்பு கொடுத்தீங்க. பாபர் மசூதி இடித்ததுக்கும் ஸ்வீட் கொடுத்தீங்க. இப்ப அமெரிக்கா அழியறதுக்கும் ஸ்வீட் கொடுக்கிறீங்களே! பிராமணனைப் போல கல்நெஞ்சக்காரன் உலகத்திலேயே இருக்க மாட்டான் போலிருக்கே.

**மன்னார்சாமி:** என்ன காரணத்துக்கானா என்ன சாமி? தினம் அள்ளிகிட்டு வாங்க. கொஞ்சம் நிறைய கொண்டாங்க - குழந்தை குட்டிகளுக்கும் கொடுக்கலாமே.

**வெங்கடேசய்யர்:** மகா புண்ணியவான் மருத முத்துவே - புலம்பித் தீர்த்தீரா? சொல்றேன் கேட்டுக்கும் : 1993 - மார்ச் 12 மும்பை தொடர் குண்டு வெடிப்பு 300 பேர் சாவு : 1500 பேர் காயம் - குற்றவாளி - தாவுத் இப்ராகிம். அமெரிக்கா வாய் திறந்திச்சா?

**மருதமுத்து:** இல்லை.

**வெங்கடேசய்யர்:** 1995 - மே11 - ஆப்கன் கமாண்டர் மஸ்த்குல் - தலைமையில் தீவிர வாதிகள் - இந்திய ராணுவத்துடன் துப்பாக்கிச் சண்டை. சார் - ஏ- சரீஃப் மசூதி இடிப்பு - அமெரிக்கா ஏதாச்சும் சொன்னானா?

**மருத முத்து:** சொல்லல.

**வெங்கடேசய்யர்:** 1999 நவம்பர் 3 லஷ்கரின் தற்கொலைப் படை ஸ்ரீநகரிலுள்ள படாமிபக் கண்டோன்மெண்ட் ராணுவத் தலைமையகத்தில் புகுந்து தாக்குகிறார்கள். மேஜர் புருஷோத்தமன் உட்பட ராணுவத்தினர் 6 பேர் பலி. அமெரிக்கா கண்டு கொள்ளவில்லை.

**மன்னார்சாமி:** மேஜர் புருஷோத்தமன் கூட அய்யரா சாமி?

**வெங்கடேசய்யர்:** சூ - கவனத்தைத் திருப்பாதே. 1999 - டிசம்பர் இந்திய விமானம் காட்மண்டுவிலிருந்து கந்தகருக்கு கடத்தல் - அமெரிக்கா வேடிக்கை பார்த்தது- ஆமானா?

**மருத முத்து:** வாயில் கையைப் பொத்தி பிரமிப்பில் ஆமாம் என்று தலையை அசைக்கிறார்.

**வெங்கடேசய்யர்:** 2000 - மார்ச் 20-ல் பில் கிளிண்டன் இந்தியா வரும் சமயம் சிட்டி - சிங்பூராவில் லஷ்கர் தீவிரவாதிகள் 35 சீக்கியர்களைச் சுட்டுக் கொல்லுகிறார்கள்.

**மன்னார்சாமி:** என்னா சாமி - 110 மாடிக் கட்டிடம் ரண்டு உடைஞ்சி தூளாகி 10,000 பேர் சாவுங்கறாங்க - நீங்க ஓண்ணான், சுண்டெலி, கரப்பான் பூச்சி செத்ததைக் கணக்குச் சொல்றீங்க.

**மருதமுத்து:** நான் கூட அமெரிக்காவை கண்டிக்கிறவன் தான் - பிட்சா ரொட்டிக்கு ரூ.300, பசுமதி அரிசிக்கு காப்பிரைட், அம்வே வணிகம், வங்கியில் 36% வட்டி, வியட்னாம் கொலை, கியூபா மிரட்டல், ஆப்கானிஸ்தான் ஏவுகணை முதலிய முட்டாள்தனமான - உலக சட்டாம் பிள்ளைத் தனத்துக்கு. ஆனா இதையெல்லாம் பேசித்தீர்க்காம - பாம் போட்டா சரி பண்ண முடியும்?

**வெங்கடேசய்யர்:** குறுக்கே பேசாதீரும். 2000 டிசம்பர் - 22 - டில்லி செங்கோட்டை ராணுவ முகாமில் லஷ்கர் - இ - தொய்பா தாக்கு - இரண்டு ஜவான் உட்பட மூன்று பேர் பலி.

**வந்தவர்:** ஏங்க அமெரிக்காவில் 56 தேசத்தை சேர்ந்த 10,000 பேர் செத்திருக்கலாம்னு கணக்கு சொல்றாங்க. நீங்க - இதைப் பெரிசா சொல்றீங்களே.

**வெங்கடேசய்யர்:** சுவாமி! வந்தமா - செருப்பை தச்சி வாங்கினமான்னு போய்ச் சேரும் - தரித்திரம்

படிப்பகம்

www.padippakam.com



தலை முழுகப் போனா - ஏகாதசி எதுக்கே வந்துதுன்னு - வராதீங்க. இல்லையா - இப்படி உட்கார்ந்து முழுகதையும் கேளும் (அவரும் மரத்தடியில் உட்காருகிறார்) அத்தோடு கதை முடிந்துதா? 50 வருட சுதந்திரத்தில் இன்னிக்கு கணக்குப்படி - காஷ்மீர் தீவிரவாதிகளால் - 70,000 பேர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 5 லட்சம் காஷ்மீர் பண்டிதர்கள் போன இடம் தெரியலை.

**மருத முத்து** (எழுந்து நின்று): என்ன சொன்னீர் - காஷ்மீர் பண்டிதர் - ஹ-ஹ- காஷ்மீர் பண்டிதர் - காஷ்மீர் பண்டிதர். 'மெத்தப் பாய் போட்டு மெதக்க நெய் ஊத்தினாலும் பெத்தப்பன் ஆவானா சித்தப்பன் - னானாம், ஏன்யா வெட்கம் கெட்ட பண்டிதரே - 50 லட்சம் இலங்கைத் தமிழர்களில் ஒரு லட்சம் பேர் செத்து, 16 லட்சம் பேர் உலகம் முழுக்க அகதிகளா - சாலை கூட்டவும், கக்கூஸ் கழுவவும் இலங்கைத் தமிழர்கள் கிடக்கும் போது - மகா பெரிய காஷ்மீர் பண்டிதரா?

**மன்னார்சாமி** (எழுந்து நின்று கைக்கு இரண்டு செருப்பை கதாகாலட்சேப பண்டிதரின் அப்ளா கட்டைபாணியில் அடித்துக் கொண்டு): ''அதிசயம் பொறக்குதடி அக்கா - இங்கே ஆட்டை முழுங்குதடி காக்கா ஜிங்சா - ஜிங்சா (குதித்துக் கை தட்டி அமர்கிறார்)

**உட்கார்ந்திருப்பவர்:** அட, அடா! ஏதோ இங்க செருப்பு தைக்கிற வேலை மட்டும் தான் நடக்குதுன்னுலே இருந்தேன். அட அடா - அய்யர் வாளுக்கு என்ன ஞானம் - என்ன புள்ளி விவரம் - பிரமாதம்.

**மருதமுத்து:** மன்னார்சாமி! அய்யாவை மன்றத்திலே சேர்த்துக்க. வாங்கோ, தினம் காலை 9-12, மாலை 4 - 7 மணி. எவ்வளவோ உலக விஷயங்களைத் தெரிஞ்சுக்கலாம்.

**வெங்கடேசய்யர்:** இரும் அய்யா! ஜியார்ஜ் புஷ் - மருக்கொழுந்துபட்டு செனைக் கலங்கிப் போச்சுங்கறார். அந்தக் கதையை சொன்னா நீர்மன்றப் பெருமை பேசறீர். இப்படியெல்லாம் இந்தியாவில் பயங்கரவாதிகள் கலகம் பண்ணினப்போ அமெரிக்கா என்ன செஞ்சான்?

**மன்னார்சாமி:** என்ன செஞ்சான்?

**வெங்கடேசய்யர்:** பண்டிட் விஷயம் மட்டும் இல்லைய்யா. உலகம் முழுதும் பயங்கரவாதி தாக்குதல் இருந்திருக்கு. 1972ல் - பாலஸ்தீன தீவிரவாதிகள் முனிச் ஒலிம்பிக்கில் நுழைந்து - இஸ்ரேலிய விளையாட்டு வீரர் 9 பேரைப் பிடித்தனர். பிடித்தவர் - பிடிபட்டவர் - 14 பேர் செத்தனர்.

1975 - டிசம்பரில் - கார்லோஸ் என்ற பயங்கரவாதி - ஓபெக் அமைச்சர்கள் 11 பேரையும் - சிவிலியன்கள் 59 பேரையும் பிடித்தான், - பலகோடி பணம் கொடுத்துத் தப்பித்தனர். . 1984ஆகஸ்டில் - இங்கிலாந்து பிரைட்டனில் - அய்ரிஷ்ரிப்ப்ப்ளிக் ஆர்மியைச் சேர்ந்தவர்கள் குண்டு வைத்தனர். பிரதமர் தாட்சர் தப்பினார். டோரிக் கட்சியினர் 5 பேர் செத்தனர். 1988 - டிசம்பர் - லிபியா தீவிரவாதிகள் பிராங்க் பர்டிலிருந்து - நியூயார்க் சென்ற பான் அமெரிக்க விமானத்தைத் தகர்த்து 270 பேர் செத்தனர். இதில் எல்லாம் அமெரிக்கா என்ன கிழித்தது? காஷ்மீர் தீவிர வாதிகளை பாகிஸ்தான்தான் வளர்த்து விடுகிறது என்று தலை தலையா அடிச்சிகிட்டமே - அமெரிக்கா மசிஞ்சானா ? கார்கில் போருக்கு - பாகிஸ்தானும் தலீபானும் தான் காரணம்னோமே - கேட்டானா?

**மருதமுத்து:** இல்லையா?

**வெங்கடேசய்யர்:** புஷ்வந்த பிறகு - எல்லாம் அவரவர் தேசப் பிரச்சினையை அவரவர் பாத்துக் குங்க - என்கிற மாதிரி போயிட்டார். காஷ்மீர் பயங்கரவாதம் - ஆனால் பாகிஸ்தானைப் பகைச் சுக்கக் கூடாது. இப்படி. இப்ப தானே - வரலாற்றில் இல்லாத உதை வாங்கின பிறகு - நேட்டோ ஒப்பந்தம் புதுப்பிக்கப்படுது; அமெரிக்காவின் மீது தாக்குதல் ஒரு போர்ச் செயல் என்கிறார். தாக்கினவர்களையும் ஆதரிப்பவர்களையும் அடைக்கலம் கொடுத்தவர் களையும் - தாக்குவோம்கிறார் புஷ். அதாவது எத்தனை யானை ஏறி மிதிச்சாலும் எழுந்திரிக்காத கும்பகர்ணனை - ஒரு பேனா கத்தியும், பத்து தீவிர வாதிகளும் இந்த ஆட்டம் ஆட வெச்சுட்டாளே ! தனக்கு வந்தா தெரியுதே - தலைவலியும் காய்ச்சலும்!

**மருதமுத்து:** உமக்கு ஓயாம - பாகிஸ்தானும், காஷ்மீரும் தான். அக்கான்னாலும் சக்களத்தி; அண்ணன்னாலும் பங்காளி. உம்ம - பார்ப்பன ராஜ்யம் - காஷ்மீர்காரனுக்கு குடுத்த வாக்குறுதி களையும் இருந்த தனித்தன்மைகளையும் காப்பாத்துச் சாய்யா?

**உட்கார்ந்திருப்பவர்:** சரியான கிடுக்கிப்பிடி சார்.

**வெங்கடேசய்யர்:** எந்த நாடு தான் காப்பாத்த முடியும்? நெருக்கடி தீர்வு வேற; ஆளுமை வேற. அன்னிக்கு காஷ்மீர் இந்தியாவோட சேரணும்கிறது நெருக்கடி. அதில் எந்த வாக்குறுதி வேணாலும் தரலாமே.

**மன்னார்சாமி:** ஆமாங்க. ஆமாங்க. பொண் டாட்டிக்கிட்டே ராத்திரியிலே உம், உம் என்கிறோம். காலையிலே பே, பே-ங்கலியா? அப்படித்தான். (எல்லாரும் சிரிக்கிறார்கள்)

**வெங்கடேசய்யர்:** இந்தியக் குண்டி கூழுக்கு அழுத போதெல்லாம் அமெரிக்க கொண்டை பூவுக்கு அழுதது என்று இருந்த - மட்டி - மடைய - மமதை பிடித்த அராஜக அமெரிக்காவை ஒரு வழிக்கு கொண்டு வந்தது - செப்டம்பர் 11 - தாக்குதல் தான்.

**மருதமுத்து:** அமெரிக்கா விஷயம் எப்பவும் - அதிகாரத்திலே விட்ட குசு; தாவாரம் எல்லாம்

படிப்பகம்

www.padippakam.com



தடதடங்கும். அதுக்கோசரம் இப்படியா துவம்சம் பண்றது? என்ன தான் ஆண்ட முறமும் அடிச்ச கள்முமா இருந்தாலும் உமக்கு என்ன லாபம் அய்யரே?

**மன்னார் சாமி:** அதானே! நம்ம கதை ஆண்டி பெத்தது அஞ்சும் குரங்கு - பைத்தியம் பெத்தது பத்தும் பேயி -ன்னு இருக்கு. இதிலே உதை வாங்கின அமெரிக்காவையோ - உதை கொடுத்ததாச் சொல்ற பின்லேடனையோ புகழ்ந்து நம்ம நாட்டு அம்பது கோடி அன்னாடங்காய்ச்சிக்கு என்னாவப்போவுது?

**வெங்கடேசய்யர்:** சொல்றேன்யா 'தன்னைப் பெத்த ஆத்தா - தவுட்டுக்கு அழுவறச்சே - கும்மோணத்திலே மகன் கோதானம் கொடுத்தானாம்' ன்னு இருந்த அமெரிக்காவுக்குப் புத்தி வர வழைச்சான் பாரு - பின்லேடன் - அதுக்குத் தான் ஸ்வீட்.

**மருதமுத்து:** அய்யோ - அய்யோ - பின் லேடன் ஹிட்லிஸ்டில் இந்தியாவும் இஸ்ரேலும் கூட இருக்குது. விவரம் தெரியாம லேடன் பாட்டு பாடாதீர்.

**வெங்கடேசய்யர்:** இருக்கட்டுமேய்யா! வாஜ் பேயியும் ஜஸ்வந்த்சிங்கும் தீவிரவாதி கொடுமை களை விளக்கி எத்தனை பயணம் எத்தனை பேச்சு அமெரிக்காவுடன் பேசினார்கள். இந்திய டிப்ளமசி - சாதிக்க முடியாத இந்திய - அமெரிக்க நட்பை - ஒரே நொடியில் பின்லேடன் நமக்கு செஞ்சி கொடுத்துட் டாரேய்யா? ஓம்! பின் லேடனாய நமஹா! பின்லேடன் ஜிந்தாபாத் !

**உட்கார்ந்திருந்தவர்:** (எழுந்து ஓடிக் கொண்டே) தூ, தூ! பிராமணனா இருந்துண்டு - பின்லேடனை பாராட்டறீரே! கருமம். பிராமணனுக்கு பயித்தியம் புடிச்சா பின்லேடனையும் புகழுவாண்டா ஈஸ்வரா?

**மருதமுத்து:** அவர் போகட்டும், அய்யரே! நம் மரத்தடி மன்றத்தின் மகிமை அவருக்குத் தெரியாது. சரி. ஸ்வீட் கொடுக்கிறச்சே இன்னொரு காரியத் துக்கும் சேர்த்துன்னு சொன்னீரே - அது என்ன இன்னொரு காரியம்?

**வெங்கடேசய்யர்:** செயலலிதா முதலமைச்சர் பதவியிலிருந்து உருட்டி விடப்பட்டது தான். பிராமணனுக்கு பயன்படாத பிராமண முதல்வர் இருப்பதை விட போவதே மேல்! சுப்ரீம் கோர்ட்டுக்கும் ஜிந்தாபாத்!

**மன்னார்சாமி:** (செருப்பைத் தரையில் அடித்து) சபாஷ் சாமி! பல்லில் விஷம் - கொடுக்கில் விஷம்னு கேள்விப்பட்டிருக்கேன். உடம்பெல்லாம் விஷம் இருக்க முடியும்கிறதை உங்களைப் பார்த்து தெரிஞ்சிகிட்டேன்.

(இக்கட்டுரையில் பயன்படுத்தப்பட்ட பழமொழி களுக்கு நன்றி: பேராசிரியர் ஆ. இளங்கோவன் - நடவு சிற்றிதழ் - ஜூலை - செப் - 2001.)

## பார்ப்பனச் சாதித் திமிரைக் கண்டித்து முற்றுகைப் போராட்டம்

காஞ்சி சங்கரா நிகர்நிலைப் பல்கலைக் கழகத்தில் 'சேரன் மாதேவி'யை நினைவூட்டும் வண்ணம் பார்ப்பன மாணவர்களுக்குத் தனியே உணவு விடுதியும், தங்கும் விடுதியும், பார்ப்பனரல்லாத மாணவர்களுக்குத் தனியே உணவு விடுதியும், தங்கும் விடுதியும் என்று நடைமுறைப்படுத்தி வருகின்றது. இந்த ஆணவ - பிற்போக்குத் தனத்தைக் கண்டித்து 12.9.2001 காலை 11 மணிக்குத் தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் காஞ்சிபுரத்தில் முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் தா.செ. மணி தலைமையேற்றார். தோழர்கள் அரங்க சானகிராமன் (தி.க), சி. நடராசன்(மா.பெ.பொ.க) ச. யோகநாதன் (த.தே.பொ.க) தந்தை பெரியார் திராவிடர் கழகச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர். முற்றுகைப் போராட்டத் தினர் 300 பேர் நகராட்சி அலுவலகம் அருகிலேயே கைது செய்யப்பட்டு மாலையில் விடுவிக்கப் பட்டனர்.

## சாலய் - சாலினி தொடர் ஆய்வரங்கம்

தமிழினப் போராளிகள் சாலய் - சாலினி தொடர் ஆய்வரங்கின் 6வது நிகழ்வு 22.9.2001 அன்று மாலை சென்னை தேவநேயப் பாவாணர் நூலக அரங்கில் நடைபெற்றது. பேராசிரியர் சே.கு.சாந்தமூர்த்தி தலைமையில் 'சாலயார் எழுத்துக்களில் தமிழ்த் தேசிய மீட்பு நுட்பங்கள்' என்பது பற்றி முனைவர் பட்ட ஆய்வாளர் மு. முருகேசன் உரை நிகழ்த்தினார். சாலயாரின் 'கேள்விகள் ஆயிரம்' நூலை அழகிய நம்பி அறிமுகப்படுத்திப் பேசினார்.

## மா.பெ.பொ.க. தீர்மானங்கள்

9.9.2001 அன்று சென்னையில் வே. ஆனைமுத்து தலைமையில் மா.பெ.பொ.க. மாநிலப் பொதுக் குழுக் கூட்டம் நடைபெற்றது. மொத்தம் 46 தோழர்கள் கலந்து கொண்டனர். பெரியாரின் 123ஆவது பிறந்த நாள் விழாவையொட்டி, பொதுமக்களிடையே வழங்குவதற்கான கட்சித் துண்டறிக்கைகள் அனைவருக்கும் வழங்கப் பட்டன.

சிந்தனையாளன் இதழுக்குத் திங்கள் தோறும், ஆண்டு, வாழ்நாள் உறுப்பினர் கட்டணம் சேர்த்துத் தர ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. சிந்தனையாளன் வளர்ச்சி நிதி வாய்ப்புள்ளவர்கள் திங்கள்தோறும் ரூ.100 தர முன்வர வேண்டும் என்த் தீர்மானிக்கப்பட்டது. முப்பெரும் விழாவைக் கடலூர் மாவட்டத்தில் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com






# இராமாயணத்தைக் கொளுத்துங்கள்!

- வே.ஆனைமுத்து

1922 இல் பெரியார் ஈ.வெ.இரா. தமிழ் மாகாண காங்கிரசுக் கட்சியின் செயலாளராக இருந்தார்.

'திருப்பூரில், 1922 இல் தமிழ் மாகாண காங்கிரசு மாநாடும் செயற் குழுவும் நடந்து முடிந்து, மாலையில் பொதுக் கூட்டமும் நடந்தது. பொதுக் கூட்டம் முடிந்து ஒன்றாகப் பயணம் செய்தபோது, ஆச்சாரியார் சொன்னார்: ''நாயக்கரே, இன்றைக்கு டோசு ரொம்ப ஸ்ட்ராங்க்'' என்று.

பெரியார் சொன்னார்: ''இந்த மடப்பசங்களுக்கு ஸ்ட்ராங் என்ன? ரொம்ப ஸ்ட்ராங் என்ன?'' என்று.

எது பற்றிய உரையாடல் இது?

''இராமாயணத்தையும், மனு நீதியையும் கொளுத்த வேண்டும்'' என்று அங்கேதான் பெரியார் பேசினார்.

ஏன்?

'நாடார்களைக் கோவிலுக்குள் நுழைய விடுவதற்குக் காங்கிரசுக் கட்சி போராட வேண்டும்' என்ற தீர்மானத்தை அங்கேதான் பெரியார் முன்மொழிந்தார். காங்கிரசுப் பார்ப்பனர் எல்லோரும் கட்டுப்பாடாக அதை எதிர்த்தனர்; சமூக விஷயத்தை - இராஜீய விஷயம் பற்றிய நாம் ஆலோசிக்க வேண்டியதில்லை என்று முடிவு செய்தனர்.

தமிழனைச் சூத்திரன் - அரக்கன் - குரங்கு என்பது இராமாயணம்; பார்ப்பனர் தவிர்த்த எல்லோரும் சூத்திரர் என்பது மனுநீதி.

எனவேதான் இரண்டையும் கொளுத்த வேண்டும் என்று கடுமையாகவே சாடினார், பெரியார்.

தேசியவாதிகளும், பொதுவுடைமைவாதிகளும் கருத்தியல் வழிப்பட்ட ஓர் எண்ணத்தை எதிர்த்து இப்படிப் பேசுவதும் எழுதுவதும் கிளர்ச்சி செய்வதும் பாமர மக்களை அன்னியப்படுத்துவது - புரட்சிக்கும் மாற்றத்துக்கும் எதிரானது என்று திரும்பத் திரும்பக் கூறினர்; எழுதினர்.

அந்தக் கருத்தியல் என்பது தான் 100க்கு 85 பேரான கீழ்ச்சாதி உழைப்பாளி மக்களை இராமனைக் கும்பிட வைத்தது; சீதையைக் கொண்டாட வைத்தது; அனுமனை வணங்க வைத்தது. அடிமைத்தன்மையும், ஏழ்மையும் கல்வியின்மையும், நம் வருணத்துக்கு உரிய தருமம் என ஏற்றுக் கொண்டு அவர்களை அடங்கிக் கிடக்க வைத்தது. இது இவ்வளவு வலிமை வாய்ந்த அறிவு அடக்கு முறைக் கருவி என்பதை நன்றாக உணர்ந்தவர்கள், பார்ப்பனர்கள்.

எனவேதான் வானூர்திப் பயணம், விண்வெளிப் பயணம், தொலைதூரத் தொடர்பு, அணு ஆராய்ச்சி, மரபு அணு ஆராய்ச்சி, கணினிப் பயன்பாடு இவற்றையும்; காப்பி, ஒயின், மாட்டுக்கறி, எருமை நாக்கு, பன்றிக் கறி உணவு என உணவு உள்பட்ட எத்தனையோ மாற்றங்களைச் சொந்த வாழ்க்கையில் ஏற்றுக் கொண்டாலும் - தனி வாழ்க்கையில் பூணூல், பஞ்சகச்சம், உச்சிக்குடுமி, சந்தியாவந்தனம், கீதை பாராயணம், வேத பாராயணம், கோயில் சேவிப்பு என்கிற எதையும் - 2001 இலும் பார்ப்பனர்கள் கைவிடவில்லை.

அமெரிக்கா, கனடா, செர்மனி, பிரான்சு, இத்தாலி, ஆஸ்திரேலியா, அரபு நாடு என்று எங்கே குடியேறினாலும் - தொழில் செய்தாலும், மேலே கண்ட வேத மத நடப்புகளில் ஒன்றைக் கூடப் பார்ப்பனர் குறைத்துக் கொள்ளுவதில்லை.

பார்ப்பனியமும், பகவத் கீதை பாராயணமும் உலகில் பார்ப்பனர் எங்கிருந்தாலும் அப்படியே அவர்களால் பின்பற்றப்படுகின்றன. போதிய கல்வி அறிவும் மான உணர்ச்சியும் பெறாத வெகு மக்களிடம் இதேபண்பாட்டைப் படிய வைத்திட ஏற்ற வலிமையான கருவிதான் இராமாயணம்.

இன்று, எல்லாவற்றுக்கும் மேலாக, இராமர் கோவில் கட்டப்படுவதில் வாஜ்பேயி - அத்வானி முதல் அடிமட்டத் தொண்டர் வரையில், பார்ப்பன வழக்கறிஞர் முதல் நீதிபதிகள் வரையில், எழுத்தர் முதல் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்

படிப்பகம்

www.padippakam.com



வரையில், 'பாபர் மசூதியை இடித்த இடத்தில் இராமர் கோயிலைக் கட்டியே தீரவேண்டும்' என்று குரங்குப் பிடிவாதமாக இருப்பதற்கும் கூறுவதற்கும் இதுவே அடிப்படைக் காரணம்.

மானிட உரிமை, சமூக சமத்துவ உரிமை, அரசியல் உரிமை, பொருளாதார விடுதலை இவற்றை நோக்கி உழைக்கும் வெகு மக்களை ஒன்று திரட்ட முடியாமல் இருப்பதற்கு அவர்களின் சிந்தனையைக் கவ்வியிருக்கிற 'இராமர் பக்தி', 'இந்துத்துவ பக்தி' மிகப் பெரிய காரணம்.

'அல்லாவை அன்றி வேறு ஆண்டவன் இல்லை' என்பதை எண்பிக்க விரும்பிய முகமது நபி, அரபு நாட்டுக் காட்டாண்டி மக்களால் வணங்கப்பட்ட எண்ணற்ற உருவங்களை 1450 ஆண்டுகளுக்கு முன் அடித்து உடைத்தார்.

'உருவமாக - பொம்மையாக் - சிலையாகக் கடவுள் இருக்க மாட்டான், இருக்க முடியாது' என்பதை நிலைநாட்டவே அவர் அப்படிச் செய்தார்.

அதே சமகாலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த சித்தர்கள்:

''கல்லிலும் செம்பிலுமோ இருப்பான் எங்கள் கண்ணுதலே'' என்று பாடி, கற்சிலையையும், செப்புச் சிலையையும் வணங்கிய மக்களைக் கண்டு மனம் இரங்கினர்.

பெரியாருக்கு முன் இம்மண்ணில் வாழ்ந்த அத்திப்பாக்கம் வேங்கடாசலம், வடலூர் வள்ளலார், அயோத்தி தாசர் முதலானோர் - வேதம், சாஸ்திரம், இதிகாசம், புராணம், சிலை வணக்கம், புரோகிதச் சடங்குகள், இராமாயணம், பாரதம் இவற்றை வெளிப்படையாகவே கண்டித்தனர்.

இந்தப் பேரறிவாளர்களின் தத்துவ - சித்தாந்தக் கண்டனங்களுக்குச் செயல் வடிவம் தருகிற தன்மையில் தான், பெரியார், 1953 இல் விநாயகர் பொம்மையைத் தெருவில் போட்டு உடைத்தார்.

கோவில் என்று கட்டி அதில் வைக்கப்பட்ட, பக்தர்களால் வணங்கப்படுகிற விநாயகர் பொம்மையை உடைப்பது வரம்பு மீறிய செயல் என்பதை அவரே நன்கு உணர்ந்திருந்தார்; அவருடைய தொண்டர்களும் நன்றாகப் புரிந்திருந்தனர்.

எனவேதான், கடையில் விற்கிற விளையாட்டுப் பொம்மையை, அவரவரே செய்து கொண்ட விநாயகர் பொம்மையைப் பெரியாரும் அவருடைய தொண்டர்களும், பட்டப் பகலில் தெருவில் போட்டு உடைத்தனர்.

'பொம்மையில் - எல்லாம் வல்ல கடவுள் இல்லை' என்பதை எல்லோருக்கும் புரிய வைக்கவே அதைச் செய்தனர். அந்தக் கிளர்ச்சியின் போது பார்ப்பனர்களுக்குப் பதிலியாகப் பார்ப்பனர்களின் அடிவருடிகளாக இருந்த சூத்திரர்கள் வலிவான எதிர்ப்புக் காட்டினர்; பெரியாருக்கு எதிராக வழக்கும் தொடுத்தனர்.

இத்துடன் நின்றாரா, ஈ.வெ.இரா? இல்லை.

இன்னும் ஒருபடி மேலே சென்று, 1956இலும்; பின்னர் சேலத்தில், 1971 இலும் மாபெரும் மூட நம்பிக்கை ஒழிப்பு மாநாட்டைக் கூட்டினார்.

வால்மீகி இராமாயணத்தில் படம் பிடிக்கப்பட்டுள்ளபடி - கள் குடிக்கிற இராமன், கறியைக் கழித்துத் தின்கிற இராமன், பிள்ளைத்தாச்சியான சீதை மற்றும் கந்தப்புராணக் காட்சிகளைப் பெரிய பெரிய தட்டிகளில் பல வண்ணங்களில் தீட்டச் செய்து, மாட்டு வண்டிகளில் ஏற்றி, சேலம் நகரத் தெருக்களில் ஊர்வலமாக எடுத்துச் சென்று, அவற்றைக் காணும் ஊராரெல்லாம் சிரிக்கும்படிச் செய்தார், பெரியார்.

அன்றைய ஊர்வலப் பாதையில், கறுப்புக் கொடி காட்டிக் காலித்தனம் செய்து, பெரியாரை நோக்கிச் செருப்பை வீசி எறிந்தனர் ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள். அடுத்த நொடியில், விளக்கு மாற்றை வலக்கையிலும், இராமன் படத்தை இடக் கையிலும்; செருப்பை வலக் கையிலும் இராமன் படத்தை இடக்கையிலும் பிடித்துக் கொண்டு வழி நெடுக அப்படத்தை அடித்துக் கொண்டே சென்றனர் பெரியார் பெரும் படையினர்.

ஊர்வலம் முடிந்ததும், மாநாட்டுப் பந்தலை ஒட்டி இருந்த தீமிதிக் குழியில் நூற்றுக்கணக்கில் இராமன் படங்களைப் போட்டு, எரித்தனர்; தீயில் இறங்கி மிதித்தனர்.

அதே இராமன் படத்தை வீட்டில் தோரணத்தில் கட்டித் தொங்கப் போட்டுச் செருப்பால் அடிக்கிற கிளர்ச்சியை, 1971 ஏப்பிரலில் நாடெங்கும் நடைபெறச் செய்தார், பெரியார்.

இவற்றுக்கிடையில், இராமாயணப் பொத்தகத்தையோ, ''இராமாயணம்'' என்று எழுதிய அட்டையையோ, தாளையோ தெருவிலும், அவரவர் வீட்டுத் திண்ணையிலும் எரிக்கச் செய்தார், பெரியார்.

படிப்பகம்

www.padippakam.com



பார்ப்பனிய - இந்துத்துவ எண்ணத்தை எல்லா மக்களின் சிந்தையிலும் பதிய வைத்திருப்பது இராமாயணம் - இராமன் பக்தி. இதுவே இந்துத்துவச் சிந்தனை ஆதிக்கத்துடன் விளங்கிட மிகப் பெரிய அடித்தளம் ஆகும்.

அவ்வளவு கெட்டியான அடித்தளத்தில் ஓர் அதிர்ச்சியை - விரிசலை - ஆட்டத்தை உண்டாக்கவே இத்தனை முயற்சிகளையும் செய்தார், பெரியார்.

இந்த முயற்சிகளில் மிகவும் முதன்மையானது அவர் மேற்கொண்ட தொடர் பரப்புரைப் பயணம்; துண்டு அறிக்கைகள் பரப்பல்; சிறு நூல்கள் வெளியிட்டு விற்பனை செய்தல் எனப் பல மாதங்கள் - நாடு முழுவதிலும் தெளிவுரை வழங்கி, அதன் பின்னரே மேலே கண்டவாறு கிளர்ச்சிகளை மேற்கொண்டார் என்பதுதான்.

வெந்நீரைக் காலில் கொட்டிக் கொண்டவன் அலறித் துடிப்பது போல, எந்த ஒரு கிளர்ச்சியையும் அவர் திடுமென அறிவிப்பதில்லை; திடீரென மேற்கொள்ளுவதில்லை. இன்றுள்ள பெரியார் கொள்கையாளர்கள் இதில் பெரியாரை அப்படியே பின்பற்ற வேண்டும். வெகு மக்களுக்கு விளக்கம் கூறிய பிறகே இவ்வகைப்பட்ட கிளர்ச்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும். கிளர்ச்சியின் நோக்கம், கிளர்ச்சியின் தன்மை, கிளர்ச்சியின் விளைவு இவற்றைத் திட்டமிட்டு முன்னரே அறிவித்து விட்டு, கிளர்ச்சி ஏன் -எதற்காக - எப்போது என்பதை விளக்கித் தமிழகம் தழுவிய அளவில் பல மாதங்கள் பரப்புரை செய்தல் வேண்டும்.

அப்படிப் பரப்புரை செய்திட - இராமாயணம் பற்றி அறிந்திட, விவாதித்திட, வினாத் தொடுக்க, விடை சொல்ல நம்மை நாம் நன்கு தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

வால்மீகி இராமாயணமே உண்மையான புனைந்துரைக் கதை. அதை நாம் நன்றாக அறிய வேண்டும். அப்படி அறிந்திடப் போதிய செய்திகளைத் தந்தை பெரியார் தக்க சான்றுகளுடன் சுருக்கமாகவும் - அதே நேரத்தில் விளக்கமாகவும் எழுதியும் பேசியும் உள்ளார்.

இவற்றை, 2001 நவம்பர் இதழில் தொடங்கி, 15 இதழ்களில் 'சிந்தனையாளன்' ஏட்டில் தொடர்ந்து வெளியிடுவோம். ஒவ்வொரு கட்டுரையும் இரண்டு, மூன்று பக்க அளவிலேயே இருக்கும். இக் கட்டுரைகளைத் தொடர்ந்து படியுங்கள்; மனங்கொண்டு படியுங்கள்; படித்த பின்னர் விவாதியுங்கள்; விவாதத்தின் பயனாக ஊரார்க்கெல்லாம் இராமாயணம் விளைத்த கேடு பற்றிய விவரங்களைச் சொல்லுங்கள்.

உங்கள் ஊரில் பொது இடத்தில் அல்லது உங்கள் உங்கள் தெருவில் அல்லது உங்கள் உங்கள் வீட்டுத் திண்ணையில் இராமாயணத்தைக் கொளுத்த முன் வாருங்கள்.

தமிழர்களே, தமிழர்களே! இராமாயணத்தைக் கொளுத்துங்கள்! ●

## இரங்கற் செய்திகள்



### காஞ்சி ஜெ. காந்திமதி

மா.பெ.பொ.க. காஞ்சி நகரச் செயலாளர் மு. ஜெயப்பிரகாசு துணைவியார் ஜெ.காந்திமதி 1.9.2001 சனிக் கிழமை போரூர் இராமச்சந்திரா மருத்துவ மனையில் மறைவுற்றார். அன்று மாலை 4.30 மணியளவில் அன்னாரின் இறுதி ஊர்வலத்தில் வே.ஆனைமுத்து, வாலாசா வல்லவன் உள்ளிட்ட இயக்க தோழர்கள் மற்றும் அனைத்து கட்சி தோழர்களும், உறவினர்களும் கலந்து கொண்டனர். இடுகாட்டில் தோழர் ஆ.சோதி தலைமையில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. அன்னாரின் நினைவேந்தல் படத் திறப்பு நிகழ்வு 13.9.2001 வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் காஞ்சியில் வாலாசா வல்லவன் தலைமையில் சி.வி.எம்.அ. சேகர் முன்னிலையில் நடந்தது. சி.நடராசன் வரவேற்புரை ஆற்றினார். அரங்க. ஜானகிராமன், ஜெ. காந்திமதி அவர்களின் படத்தைத் திறந்து வைத்து நினைவுரை ஆற்றினார். மற்றும் தோழியர் வழக்குரைஞர் கோவி இராமலிங்கம், க. கோதண்டன், நாத்திகம் நாகராசன், ந.பாரி, எம். செல்வராஜ், ச.யோகநாதன், தமிழ்முகிலன், ஆ.சோதி, லோக. பண்பாளன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மு. ஜெயப்பிரகாஷ் நன்றி உரையுடன் நிகழ்ச்சி முடிவடைந்தது.

### பாரியூர் சி. இரங்கன்



திருவண்ணாமலை மாவட்டம், பரமனந்தலை அடுத்த பாரியூரில் மா.பெ.பொ.க.வின் நெடுநாளைய ஆதரவாளர் சி. இரங்கன் 7.09.2001 அன்று மறைவுற்றார். அன்னாரை இழந்து வாடும் அவர் துணைவியார் மற்றும் இர. சுந்தரமூர்த்தி உள்ளிட்ட மக்கள் அனைவர்க்கும் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com



# சென்னைப் பல்கலைக் கழகத்தின் அதிவேகச் சாதனைகள்

-வாலாசா வல்லவன்

★ தேசிய மதிப்பீட்டுக் குழு (NAAC) அய்ந்து நட்சத்திர மதிப்பு நிலையை (அந்தஸ்து) வழங்கியது

★ பல்கலைக்கழக நிதி நல்கைக்குழு (UGC) உயர் சிறப்புத் திறன் சேர் பல்கலைக் கழகம் என்ற சிறப்பு நிலையை வழங்கியது. இதனால் ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூ.5 கோடி அளவில் நிதி, ஆறு ஆண்டுகளுக்குத் தொடர்ந்து கிடைக்கும்.

★ 15 ஆண்டுகளுக்குப் பிறகு 65 விரிவுரையாளர்களை நியமனம் செய்து பல்கலைக் கழகத்தை வலுப்படுத்தியது.

★ அரசு ஆணையையும் நீதிமன்றத் தீர்ப்பையும் பின்பற்றி சென்னைப் பல்கலைக் கழகத்தில் சமூக நீதியை முழுமையாகக் கணக்கில் கொண்டு வகுப்புவாரி உரிமை ஒதுக்கீட்டு முறையில், தொடர் சுழற்சி (Roster System) அடிப்படையில் பணியமர்த்தம் செய்து, அதற்கான பதிவேடுகளையும் முதல் முறையாக உருவாக்கியது.

★ பல்கலைக் கழகத்தில் தாழ்த்தப்பட்டோருக்கும் பெண்களுக்கும் தாராளமாக உரிய அளவுக்கு வாய்ப்பளித்திருப்பது.

★ ஆசிரியர்களுக்கு இருந்த பணிநிலை, ஊதிய நிலைக் குறைபாடுகளை நீக்கி உயர்வு வழங்கியது.

★ அலுவலர்களுக்கு இருந்த பணிநிலை, ஊதிய நிலை குறைபாடுகளை நீக்கியது.

★ பல்கலைக் கழக நிதி நல்கைக் குழு ஊதிய விகிதத்தை முதன் முதலாக அமுல்படுத்தியது.

★ பல்கலைக் கழக நிதி நல்கைக் குழு ஊதிய விதிப்படி சம்பள நிலுவைகளை முதலில் வழங்கியது.

★ ஆய்வு மாணவர்களுக்கு உதவித் தொகையை உயர்த்தி மிகுதியான மாணவர்களுக்குப் பயன் கிடைக்கச் செய்தது. ஆய்வுப் பயணத் தொகை வழங்க ஏற்பாடு செய்தது.

★ ஆய்வுக்கு உதவி பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியது.

★ மாணவர்கள் விடுதிகளில் சமயலறை வசதிகளை நவீனப்படுத்தியது.

★ பல்கலைக் கழகத்தில் தமிழ் மேம்பாட்டுப் பகுதி ஒன்றை ஆட்சி மன்ற ஒப்புதலோடு உருவாக்கி நிதிவளத்தைப் பெருக்கி மேம்பாட்டுப் பணிகளுக்குத் திட்டம் தீட்டியது.

★ பல்கலைக் கழகத்தில் மொழி, இலக்கியம், பண்பாடு சார்ந்த பணிகளுக்காகத் தக்கார் உதவியோடு தொல்காப்பியர் அறக்கட்டளை நிறுவியது.

★ தாகூர் பேராசிரியர் பதவி தமிழ் இலக்கியத் துறைக்குக் கிடைக்க வழிவகை செய்தது.

★ பல ஆண்டுகளாக வெளிவராமல் இருந்த பல்கலைக் கழக ஆய்வு இதழ்களை மறுபடியும் வெளிவரச் செய்தது.

★ கடந்த இரண்டு ஆண்டுகளில் இருபதுக்கும் மேற்பட்ட நூல்களைப் பல்கலைக் கழகத்தில் வெளியிட்டிருப்பது.

★ தமிழுக்கு உயர் தனிச் செம்மொழி என்ற தகுதி (அந்தஸ்து) கிடைக்க ஆவன செய்திட ஆட்சி மன்றக் குழுவில் ஏற்புப் பெற்றது.

★ மொழித் துறைகளுக்காகக் கணினி வழி மொழி ஆய்வு மய்யத்தை உருவாக்கி இருப்பது.

★ இரஷ்யன், இத்தாலியன், ஜெர்மன், ஜப்பானியம் முதலான மொழிகளைக் கற்கப் பல்கலைக் கழகத்தில் வாய்ப்பை உருவாக்கி இருப்பது.

★ கீழா நெல்லியின் மருத்துவ குணம் பற்றிய ஆய்வு முடிவுக்குக் காப்புரிமை பெற்றது. அதன் மூலம் பல்கலைக் கழகத்துக்கு வருவாயைப் பெருக்கியது.

★ பல்கலைக் கழக வளாகங்கள் நான்கும் பயன்படுத்தத் தக்க வகையில் இணையத்தள (Internet) வசதியை உருவாக்கியது.

★ நூலகப் பயன்பாட்டு வசதியைப் பெருக்குவதற்காக "Inflibnet' என்ற வசதியை மய்ய அரசின் உதவியோடு உருவாக்கியது.

★ "Ultrafast Process Centre' என்ற தேசிய அளவிலான ஆய்வு மய்யத்தை 5 கோடி ரூபாய் மதிப்பில் தரமணி வளாகத்தில் உருவாக்கியது.

★ தரமணி வளாகத்தில் மாணவர்களுக்குப் புதிய விடுதி ஒன்றை உருவாக்கியது.

★ மெரினா வளாகத்தில் உணவக வசதிக்காகவும் 'சார்ஜன்ட்' தங்குவதற்காகவும் மாணவர்கள் கருத்தரங்கப் பயன்பாட்டுக்காகவும் இரண்டு கட்டடங்களுக்கு ஏற்பாடு செய்திருப்பது (ஒரு கட்டடம் பணி நிறைவு பெற்றுள்ளது)

★ வேலூரில் உள்ள சென்னைப் பல்கலைக் கழக விரிவாக்க மையத்தில் மூன்று துறைகளை (விலங்கியல், பொருளியல், வேதியியல்) இயங்க வைத்திருப்பது.

★ விருத்தாசலத்தில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் இன்னொரு விரிவாக்க மையத்திற்கு ஏற்பாடு செய்திருப்பது.

★ 'பையோடெக்னாலஜி' மையத்தை ஒரு துறையாக உயர்த்தி இருப்பது.

★ சேப்பாக்கம், மெரினா, கிண்டி, தரமணி, சேத்துப்பட்டு, மதுரவாயல் முதலான இடங்களில் உள்ள சென்னைப் பல்கலைக் கழக வளாகங்களைச் சீரமைப்பு செய்திருப்பது. வேலைவாய்ப்புக்கு உதவும் வகையில் பல புதிய படிப்புகளை அறிமுகப்படுத்தியது.

படிப்பகம்

www.padippakam.com



பல்கலைக் கழகத்தை வெளியில் உள்ள நிறுவனங்களோடும் சமுதாய அமைப்புகளோடும், மற்ற பல்கலைக்கழகங்களோடும் தொடர்புபடுத்தி புதுப் பொலிவோடு இயங்க வைத்திருப்பது.

பல்கலைக் கழகத்தில் இருந்த பல்வேறு இடர்ப்பாடுகளுக்கிடையேயும், இவ்வளவு சீரிய பணிகள் கடந்த இரண்டாண்டுகளில் நடைபெற்றிருக்கின்றன.

ஓர் உயர்ந்த பல்கலைக் கழகம் பண்பாட்டுக்கு இருப்பிடமாக விளங்க வேண்டும். பொய்ப் பிரச்சாரங்களும், அவதூறுகளும், அடிப்படையே இல்லாத குற்றச்சாட்டுகளும், கீழ்த்தரமான தூற்றுதல்களும், பல்கலைக்கழகப் பண்பாட்டுக்கு உகந்தவையல்ல. அரசும் தமிழ்ச் சமுதாயமும், எல்லாவற்றையும் விழிப்போடு கவனித்துக் கொண்டுதான் இருக்கின்றன. எதற்கும் ஓர் எல்லை உண்டு. அனாமதேயக் கடிதச் சிங்கங்களிடமும், பொய் முகங்களிடமும் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று சொல்லி முடித்துக் கொள்கிறோம்.

ஒரு பெரியார் பற்றாளரும், ஒரு தமிழ் பற்றாளருமான துணைவேந்தர் பொற்கோ அவர்கள் துணைவேந்தராக உள்ளபோது, தவறு நடந்திருந்தால் உரிய சான்றுகளோடு தாராளமாகத் துணைவேந்தரை நேரில் சந்திக்கலாம்; தவறு நடந்திருந்தால் உரிய நடவடிக்கை எடுக்கத் துணைவேந்தர் ஆயத்தமாக உள்ளார். தினமணி, இந்து போன்ற ஏடுகள் பல்கலைக்கழகப் பணிகளைப் பாராட்டுகின்றன. துக்ளக், குமுதம் போன்றவை அனாமதேயப் பேர்வழிகளின் தூண்டுதலின்பேரில் தவறான கருத்துகளை வெளியிட்டன. அந்த வரிசையில் தலித் முரசும், சென்னைப் பல்கலைக்கழகம் குறித்து ஆதாரமே இல்லாத தவறான செய்தியை வெளியிட்டிருப்பது எந்த வகையிலும் நியாயமன்று.

சென்னைப் பல்கலைக் கழகக் கடந்த கால வரலாற்றிலேயே இல்லாத வகையில் இப்போதுதான் தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களுக்குத் தாராளமாக வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. 65 விரிவுரையாளர்கள் நியமனம் செய்ததில் கூட தாழ்த்தப்பட்ட மக்களுக்குத்தான் உரிய பங்கோடு அதிக இடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தாழ்த்தப்பட்டவர்கள் 20 பேர் பிற்பட்டவர்கள் 17 பேர், மிகவும் பிற்பட்டவர்கள் 9 பேர், இதர வகுப்பினர் 16 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். 65 இல் இருவர் பணியை விட்டுச் சென்று விட்டனர். ஓர் இடம் உரிய தகுதியோடு யாரும் விண்ணப்பம் அனுப்பாததால் காலியாக உள்ளது.

இந்த 65 விரிவுரையாளர்கள் நியமனத்தில் பெண்கள் 13 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். பல்கலைக் கழக வரலாற்றிலேயே முன்பு எப்போதும் சமூக நீதி அடிப்படையில் இடஒதுக்கீடு இத்தன்மையில் நடைபெற்றதில்லை என்பதை அனைவரும் அறிய வேண்டும். அட்டவணைச் சாதியினர் மற்றும் பழங்குடியினருக்கான தேசிய ஆணையத்தைச் சார்ந்த குழுவினர் சென்னைப் பல்கலையின் பணியமர்த்தத்தினைப் பாராட்டிச் சென்றுள்ளனர்.

இப்படிப்பட்ட நல்ல பணிகள் நடக்கும் போது சமுதாய பொறுப்புள்ள நாணயமான மனிதர்கள் தாமே முன் வந்து மகிழ்ச்சியோடு சென்னை பல்கலைக் கழகத்தை பாராட்டி மேலும் மேலும் அதற்கு வலிமை சேர்க்க வேண்டும். ●

## ஆசிரியருக்கு மடல்...

பெரும் மதிப்பிற்குரிய அய்யா,

செப்டம்பர் 2001 சிந்தனையாளன் இதழை வாசித்து மகிழ்ந்தேன். தந்தை பெரியார் பிறந்த நாள் என்றக் கட்டுரையில் தங்களின் இளமை கால பணியின் வேகத்தை அறிந்து வியப்புற்றேன்.

அப்போது பெரியாருக்கு சிலை வைக்க விரும்பி தாங்கள் எடுத்துக் கொண்ட முயற்சியும், அதனால் சிலை வைக்கப்பட்டதும் அதன் பின் அச்சிலைக்கு மாலை போட முந்திக் கொண்டதும் தங்கள் கட்டுரை வாயிலாக அறிந்தேன்.

ஆயினும் இப்போது சிலைக்கு மாலையிடுவது சரியல்ல என்றும், சிலை அமைத்தலே இடற ஏதுவாகும் என்றும் புரிந்துக் கொண்ட உங்கள் நிலையை அழகாய் படம் பிடித்துள்ளீர்கள்.

ஆயினும் எமக்கு ஏற்பட்ட ஐயம் யாதெனில், பெரியார் என்ற ஒரு உருவம் எமது உள்ளத்தில் இருப்பதுதான் - பெரியார் கொள்கைகள் உயிரடைய காரணமாய் உள்ளது. பொதுவாக நமது உள்ளத்தை கவர்ந்த பெரியவர்களின் கொள்கைகள் நமது உள்ளில் வேர் கொள்ள அவர்களின் தோற்றம் நம் உள்ளில் நிலை பெற வேண்டும். உதாரணமாக, இயேசு, புத்தர், காந்தி, மார்க்ஸ் லெனின், வள்ளுவர், நேரு, பாரதி, பாரதிதாசன் இப்படிப்பட்டவர்கள் சொன்ன ஒரு வாக்கியத்தை நினைக்கும் போதே வாக்கியம் நினைவில் வரும் முன்னேயே அவர்களின் தோற்றம் நினைவுக்கு வருகிறது.

ஆகவே அது இயற்கை. இப்படி முகமறியாதவர்கள் வாக்கியங்கள் நம்மில் அதிகம் நிற்பதில்லை. ஆகவே பெரியாரின் படத்தையோ, அவரின் சிலை உருவவையோ ஒழிப்பதன் மூலம் அவர் கொள்கைகளின் வேகம் குறையும் என்பதே எனது அபிப்பிராயம். படமும், சிலையும் ஒன்றுதான். படம் இரு பரிமாணம், சிலை முப்பரிமாணம். இதுதான் வித்தியாசம். அவர் சிலையின் கீழ் உள்ள கடவுள் இல்லை என்ற வாக்கியமே அவரை கடவுளாக்காமல் பார்த்துக் கொள்ளும்.

ஜெ.அய்.ஏ.காந்தி, எரும்பி

## க.நெடுமாறன் - க.அமுதவல்லி வாழ்க்கை ஒப்பந்த விழா

வேலூர் மாவட்டம் பாலாபுரம் சி. கணேசன் - வீ. இராணி ஆகியோரின் மகன் நெடுமாறனுக்கும் அ.கண்ணபிரான் - வள்ளியம்மாள் ஆகியோரின் மகள் அமுதவல்லிக்கும் 30.8.2001 வியாழன் காலை 7 மணிக்கு சோளிங்கபுரம் வெங்கடேசுவரா திருமண அரங்கில் வே.ஆனைமுத்து தலைமையில் திருமணம் நடைபெற்றது. சி.பெ.ஆறுமுகம் தமிழ் வாழ்த்துப் பாட, க.நெய்தலி திருக்குறள் ஓதினார். சி.கணேசன் வரவேற்புரை யாற்றினார். க.முகிலன், இரா. சந்திரசேகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

படிப்பகம்

www.padippakam.com



நூல் அறிமுகம்

## கலாச்சாரத்தின் வன்முறை - அ.மார்க்ஸ்

தமிழ் மக்களுக்கு நன்கு அறிமுகமான பேராசிரியர் அ.மார்க்ஸ் அவர்களின் கட்டுரைத் தொகுப்பு நூல் இது. வித்தியாசங்களின் அரசியல், விமர்சனங்கள், திராவிட இயக்கங்கள், நேர்காணல் கள் என நான்கு பிரிவுகளில் மொத்தம் பதினான்கு கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. பின் நவீனத்துவம், தலித் பெண்ணியம், ஓமியோபதி மருத்துவ முறை மீதான கருத்துக்கள், நவீன காலத் தமிழ் இலக்கியம் மற்றும் ஆப்ரோ - அமெரிக்க இலக்கியங்கள் பற்றிய ஆழமான அலசல்களுடன் புதிய தேடல்களோடு கனமான செய்திகள் கட்டுரைகளில் இடம் பெற்றுள்ளன. திராவிட இயக்கங்கள் மீதான பார்வையும், பெரியாரைப் பற்றிய ஆசிரியரின் மதிப்பீடும் இன்றைய நிலைக்கு மிகவும் தேவையானவையாகும். 'மாற்றுப் பால் நிலைகளைத் தேடி' என்னும் கட்டுரை தொடர்ந்த விவாதங்களை உருவாக்கலாம். சமூக அக்கறை கொண்டவர்களுக்கும் அறிவு தேடல் விரும்பி களுக்குமான நல்ல நூல். விலை. ரூ.85. வெளியீடு : அடையாளம், கருப்பூர் சாலை, புத்தா நத்தம் - 621 310.

## கண்ணதாசன் கவிதைகளில் பாரதி - பாரதிதாசனின் தாக்கம்

முனைவர் கி. செம்பியன்

பேராசிரியர். கி.செம்பியன் அவர்களுக்குச் சென்னைப் பல்கலைக் கழகம் வழங்கிய முனைவர் பட்டத்திற்கான ஆய்வேடு இன்று நூலாக்கம் பெற்றுள்ளது. முனைவர். செம்பியன் 1990இல் இதே பல்கலைக்கழகத்தில் பட்டுக் கோட்டைக் கல்யாண சுந்தரம் பற்றி மூன்று நாட்கள் நிகழ்த்திய அறக்கட்டளைச் சொற்பொழிவு 'மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் தனித் தன்மைகள்' என்னும் பெயரில் நூலாக வந்துள் ளது. கண்ணதாசன் கவிதைகளில் உள்ள பாரதி, பாரதிதாசன் தாக்கங்கள் பற்றி நூலாசிரியர் அரிதின் முயன்று ஏராளமான சன்றுகளை மிகச் சிறப்பாகத் தந்திருக்கின்றார். இந்த ஒரு நூலே பாரதி, பாரதி தாசன், கண்ணதாசன் ஆகிய மூன்று கவிஞர்களைப் பற்றியும் விரிவாக அறியத் துணை செய்கிறது. விலை. ரூ.200/- வெளியீடு: திங்கள் பதிப்பகம், 1/165 செந்தமிழ் இல்லம், செம்பொனார் கோவில், நாகை மாவட்டம் 609 309.

## மைலாஞ்சி (கவிதைகள்)

எச.ஜி.ரசூல்

இசுலாமியர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், அவர்களின் வாழ்வில் மேற்கொள்ளப்படும்சடங்கு சம்பிரதாயங்கள், வழிபாட்டு முறைகள் ஆகியவற்றின் மீது புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சி வெளி வந்துள்ள தனித்துவம் மிக்க நூல் இது. இதன் காரணமாகவே இந்நூலாசிரியர் கவிஞர். ரசூல் இசுலாமிய அடிப்படை வாதிகளின் தீவிர எதிர்ப்புக்குள்ளாகி இருக்கிறார். இருக்காதா பின்னே? இரண்டு சான்றுகள்: வையத்தை வாழ்விக்க 24,000 நபிகள் இங்கே வந்தார்களாம். இது பற்றித் தந்தையிடம் மகள் ஐயத்தோடு கேட்கிறாள்:

''இத்தனை இத்தனை
ஆண் நபிகளுக்கு மத்தியில்
ஏன் வாப்பா இல்லை
ஒரு பெண் நபி''

புதிய வரவாய்க் குழந்தைகள் பிறக்கும் போது, குதூகலிப்பது - ஆடு வெட்டி விருந்து வைப்பது குடும் பங்களின் இயல்பே. இதிலும் பெண்ணுக்குக் காட்டப் படும் பேதம் பற்றிப் பேசுகிறது ஒரு கவிதை:

பெண் என்றால் ஒரு ஆடு
ஆண் என்றால் ரெண்டு ஆடு
'அகிகா' கொடுப்பதற்குக்
குழந்தை வாழ்வையும்
விட்டு வைக்கவில்லை
உன் பாரபட்சம்.

எல்லா மதத் தீவிர வாதத்தையும் இத்தகைய கேள்விகள் கட்டாயம் தகர்க்கும். நூலின் விலை. ரூ.50. வெளியீடு: சரம், 21/77 ஞானியார் வீதி, தக்கலை, குமரி மாவட்டம் 629 175.

## அண்ணல் அம்பேத்கரின் அரும்பணி - ஓர் ஆய்வு

பேராசிரியர் பெ. தங்கராசு

அண்ணன் அம்பேத்கரின், ஒப்பற்ற வாழ்வையும் தொண்டையும் தமிழ் மக்களிடையே அறிமுகப்படுத்தும் பெரும்பணியைத் தம் வாழ்நாட் பணியாக ஏற்றுச் செயல்பட்டு வருபவர் பேராசிரியர். பெ. தங்கராசு ஆவார். அம்பேத்கரிய சிந்தனைகள் பற்றிப் பல ஆய்வு நூல்கள் எழுதி வெளியிட்டுள்ள அறிஞர் இவர். இந்நூல் 1987இல் முதல் பதிப்பாக வெளிவந்துள்ளது. 13 ஆண்டுகள் கழித்து சூன் 2001இல் இரண்டாம் பதிப்பாக வெளி வந்துள்ள இந்நூலில் அண்ணல் அம்பேத்கரின் அரசியல் சிந்தனைகள், சமூகச் சிந்தனைகள், பொருளியல் சிந்தனைகள் மற்றும் சமூகச் சீர்திருத்தப் பணிகள் பற்றி விரிவாகவும் புதிய கோணத்திலும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. விலை. ரூ.60. வெளியீடு: புரட்சிக் கனல் நூல் வெளியீட்டகம், 32-2/15 முகப்பேர் கிழக்கு, சென்னை - 50.

- தமிழேந்தி

படிப்பகம்

www.padippakam.com



# சோதிடம் ஒரு மோசடியே!

சோதிடக் கலையைப் (?) பள்ளிப்பாடத் திட்டத்தில் சேர்த்திடும் முயற்சியில் மத்தியில் உள்ள பி.ஜே.பி. அரசு ஈடுபட்டு வருகிறது. அரசின் இந்தத் திட்டத்திற்கு எதிராக நாடெங்கும் விமரிசனங்கள் எழுந்த போது, சோதிடமும் ஒரு விஞ்ஞானம் தான், கிரகங்களின் அடிப்படையில் தான் சோதிடக் கணிப்புகள் சொல்லப்படுகின்றன என்று அரசாலும், அரசின் திட்டத்தை ஆதரிப்பவர் களாலும் இதற்குப் பதில் அளிக்கப்பட்டது. இது ஒருபுறம் இருக்க, சோதிடக் கணிப்புகள் எவ்வளவு தூரம் நம்பகமானவை என்பதை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

2001 ஆம் ஆண்டு இந்திய, உலக நாடுகளில் நிகழப் போகும் சம்பவங்கள் குறித்து பெங்களூரில் இருந்து வெளியிடப்படும் "The Astrological Magazine" என்ற மாத இதழ் சில கணிப்புகளை வெளியிட்டுள்ளது. இந்தியாவின் புகழ்பெற்ற சோதிட நிபுணராக விளங்கி, சில ஆண்டுகளுக்கு முன்பு காலமான டாக்டர் பி.வி. இராமனின் பிரதம சீடரான டாக்டர் காயத்திரி தேவி வாசுதேவ் தான் தற்போது அந்த இதழின் ஆசிரியர். இவர் தான் கிரகங்கள் - கட்சித் தலைவர்களின் ஜாதகங்கள் எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்து சில கணிப்புகளை அந்த இதழில் வெளியிட்டிருக்கிறார். அதில் தமிழக அரசியல் நிலவரம் பற்றி அவர் கீழ்க்கண்டவாறு கணித்திருந்தார்.

''தமிழகத்தில் தி.மு.க மீண்டும் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன. செல்வி ஜெயலலிதா அரசியலில் தொடர்ந்து தனிமைப்படுத்தப்படுவார் எனினும், அவர் தற்போது அனுபவிக்கும் தொல்லைகளிலிருந்து சற்று விடுபடுவார்.''

மேற்கு வங்காளம் பற்றி அவரது கணிப்பு பின்வருமாறு: ''மேற்கு வங்காள சட்டசபைத் தேர்தலில் இடது சாரிக்கட்சிகளுக்குப் பின்னடைவு ஏற்படும். அங்குக் குடியரசு தலைவர் ஆட்சி ஏற்படுத்தப்படலாம்.''

மேற்சொன்ன இரண்டு கணிப்புகளுமே பொய்த்துப் போய், தமிழகத்தில் அ.தி.மு.க.வும், மேற்கு வங்காளத்தில் இடதுசாரிக் கட்சிகளும் பெரும் வெற்றி பெற்றுள்ளன. மிகப் பெரும் சோதிட நிபுணரின் கணிப்புகளுக்கே இந்தக் கதி என்றால் மற்றக் 'கற்றுக்குட்டி' சோதிடர்களின் கணிப்புகள் என்னாகும்?

1997 - ஆம் ஆண்டு ஏப்ரலில் காங்கிரஸ் கட்சி தனது ஆதரவை வாபஸ் பெற்றதன் காரணமாக, அப்போதைய தேவே கௌடா அரசைப் பாராளுமன்றத்தில் நம்பிக்கை வாக்குக் கோரும்படி குடியரசுத் தலைவர் ஆணை பிறப்பித்திருந்தார். அந்த நம்பிக்கை வாக்கெடுப்பு ஏப்ரல் 11-ம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த வாக்கெடுப்புக்கு முன்பு 'குமுதம்' வார இதழ் சில பிரபலமான சோதிடர்கள் தெரிவித்திருந்த கணிப்புகளை வெளியிட்டிருந்தது. அதிலிருந்து சில பகுதிகளைப் பார்ப்போம்.

**மறைந்த யாகவா முனிவர் :**

அடுத்த பிரதமர் யார் என்ற கேள்விக்கு திரு. யாகவா முனிவர் அளித்த பதில் ''பி.ஜே.பி. வரும். மனோகர் ஜோஷி பிரதமராக இருப்பார். பின்பு காங்கிரஸ் ஆட்சிக்கு வரும். சரத்பவார் பிரதமராவார். இந்த இரு ஆட்சியிலும் மதக் கலவரங்களும், குழப்பங்களும் இருக்கும். இந்தக் குழப்பங்கள் 9-9-97ல் துவங்கும். பின்பு பிரியங்கா பிரதம மந்திரி ஆவார். நல்லாட்சி தருவார். நாடு சுபிட்சம் பெறும். ராகுல் ஜனாதிபதி ஆவார். 9-3-2001ல் கண்டிப்பாக பிரியங்காவும் ராகுலும் நாடாள்வார்கள்.

இந்த யாகவா முனிவரைத்தான் 'வார்த்தைச் சித்தர்' வலம்புரிஜான், 'எழுத்தாளர்' சிவசங்கரி போன்றோர் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடினார்கள். தேவாம்சம் பொருந்தியவர் என்று புகழ்ந்தார்கள். ஆனால் பரிதாபம்! தனது இறப்புப் பற்றி திரு. யாகவா முனிவர் சொன்ன கணிப்பே பொய்த்துப் போனதைத் தமிழகம் கண்டது.

**திரு. காழியூர் நாராயணன்:**

தேவேகௌடா அரசு நம்பிக்கை வாக்கில் தோற்றுப் போகும். வேற 'எந்தவிதமான கூட்டணிகளுக்கும் இடமில்லாமல் போய் மீண்டும் பொதுத்தேர்தல் வருவது நிச்சயம். அதில் பாரதிய ஜனதா இப்போது இருப்பதை விட அதிக இடங்களைப் பெறும். ஆனால் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காது. திருமதி சோனியா காங்கிரஸின் தலைவராவார். காங்கிரஸுடன் தமிழ்மாநிலக் காங்கிரஸ் இணைந்து விடும். சோனியா தலைமையிலான காங்கிரஸில் அர்ஜுன்சிங் கை ஓங்கியிருக்கும். இந்தக் காங்கிரஸ் அறுதிப்பான்மை இல்லாத பி.ஜே.பிக்கு ஆட்சி அமைக்க வெளியிலிருந்து ஆதரவு அளிக்கும். 1998 ஜுலையில் பா.ஜ.க.வுக்கு அளித்த ஆதரவை காங்கிரஸ் வாபஸ் பெறும். மறுபடியும் வரும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்று அர்ஜுன் சிங் பிரதமராவார். ராகுல் காந்தி வளர்ந்து அரசியலுக்குத் தயார் ஆகும் வரை 'அர்ஜுன்சிங்' பிரதமர் நாற்காலியில் தொடர்வார். பின்பு ராகுல் பிரதமராவார்.

**திரு. நம்புங்கள் நாராயணன் :**

பாராளுமன்றத்திற்கு மற்றொரு தேர்தல் அத்தியாவசியமாகி விட்டது. என்ன தான் புதிய ஏற்பாடுகள் செய்தாலும், அந்த அரசும் மூன்று மாதத்திலிருந்து ஆறு மாதத்திற்குள் கவிழ்ந்து விடும். மீண்டும் நடக்கவிருக்கும் பொதுத்தேர்தலில் பா.ஜ.க. ஆட்சி அமைக்கும். பாரதிய ஜனதா ஆட்சி குறைந்த பட்சம் ஐந்து ஆண்டுகள் நீடிக்கும். அதற்குப் பிறகு வரும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வரும். பொதுத்தேர்தலில் காங்கிரஸ் பிரியங்காவை முன் நிறுத்தும். அந்தத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்று பிரியங்கா பிரதமர் நாற்காலியில் உட்கார்வார்கள்.

**நடந்தது என்ன?**

11-4-1997 பாராளுமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பிற்குப் பின்னர் ஏற்பட்ட அரசியல் நிகழ்வுகள் இந்த மூன்று பிரபல சோதிடர்களின் கணிப்புகளையும் பொய்யாக்கி விட்டன. இவர்களில் யாருமே திரு. ஐ.கே.குஜ்ரால் பிரதமராவார் என்று கணித்துச் சொல்லவில்லை. ஆனால், அவர் தான் பிரதமராக வந்தார். காங்கிரஸ் ஆட்சிக்கு வரும். அர்ஜுன் சிங் பிரதமராவார். 9-3-2001ல் பிரியங்காவும், ராகுலும் நாடாள்வார்கள் என்ற இவர்களின் கணிப்புகள் அனைத்துமே பொய்யாகிப் போயுள்ளன.

சோதிடர்கள் சொல்லும் கணிப்புக்கள் அனைத்தும் பொய்த்துத்தான் போகின்றன. பத்து முதல் இருபது சதவிகிதம் வரை இந்தக் கணிப்புகள் சரியாக இருந்தாலும் கூட அது 'குருட்டாம் போக்கில்' அமைந்தவை தான். இந்நிலையில் சோதிடக் கணிப்புகளுக்கு விஞ்ஞான முலாம் பூசுவது கடைந்தெடுத்த மோசடியே அன்றி வேறில்லை. கிளி ஜோஸ்யர்கள், குறி சொல்பவர்கள், நாடி சோதிடர்கள், எண் சாஸ்திரம் பார்ப்பவர்கள், கைரேகை சோதிடர்கள் என உலகெங்கிலும் பல இலட்சக்கணக்கானவர்கள் இந்தத் தொழில் ஈடுபட்டு, தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். அதைத் தவிர வேறு எந்தவிதமான

www.padippakam.com



பிரயோசனமும் யாருக்கும் இதனல் இருப்பதாகத் தெரியவில்லை.

பிராமண குலத்தில் பிறந்து சாஸ்திர சம்பிரதாயங்களுடன் வாழ்ந்த மூதறிஞர் இராஜாஜி பல ஆண்டுகளுக்கு முன்பு கல்கி வார இதழில் சோதிடம் பற்றிக் குறிப்பிடுகையில் ''ஒரு மனிதனுக்கு நாளை என்ன நடக்கும் என்பதை ஆண்டவன் மட்டுமே அறிவான். அதனை சோதிடன் என்ற பெயரில் வேறொரு மனிதன் கணித்துச் சொல்வது ஆண்டவனின் பிரத்யேக அதிகார எல்லையில் தலையிடுவதற்கு ஒப்பாகும். இன்னும் சொல்லப் போனால், சோதிடம் சொல்லுவதும் அதனை நம்புவதும் ஆண்டவனை மறுப்பதற்கு ஒப்பாகும்'' என்று எழுதியிருந்தார். மூதறிஞரின் இந்தக் கூற்று சோதிடமும் ஒரு விஞ்ஞானம் தான் என்று சரடுவிடும் கருத்துக் குருடர்களின் கண்களைத் திறக்கட்டும்.

நன்றி: 'சிந்தனை', சூலை 2001

## மடல்கள்

அன்புடையீர் வணக்கம்.

நான் கடந்த 50 ஆண்டுகளாக நம் இனப் பற்றும் மொழிப் பற்றும் உடையவன். ஊசலாட்டம் இல்லாத பகுத்தறிவு வாதி.

தாங்கள் நடத்தும் சிந்தனையாளனைப் பற்றி என் உணர்வுகளைத் தங்கள் சிந்தனைக்காக எழுதுகிறேன்.

இன்று தமிழகத்தில் செயலலிதா அம்மையார் ஆட்சி நடக்கிறது. தங்களுக்குத் தேர்தலில் நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். நமக்கு வேறு வழியில்லாத நிலையில் நமது தேர்தலை ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. தேர்தலில் எந்த கட்சிக்கும் வாக்களிக்க வேண்டாம் என்று சிந்தனையாளனில் எழுதினீர்கள். அது யாருக்குப் பயன்பட்டது? இந்த அம்மையாருக்கு மறைமுகமாக உதவியது. (ஆஸ்திரேலியாவில் வாக்களிக்காமல் இருப்பது குற்றம்; தண்டனைக்கு உரியது)

ஆயிரம் கோடி கொள்ளை அடித்த அம்மையார் பலமான கூட்டணி அமைத்தது வெற்றியை அவருக்கு தேடித் தந்தது. விளைவு என்ன? ஊழலில் ஊறிய அம்மையார் ஆளுநரை கையடக்கம் செய்து கொண்டு முதலமைச்சர் பதவியில் அமர்ந்தார். சட்டத்தில் உள்ள ஓட்டையைப் பயன்படுத்திக் கொண்டு பதவியில் அமர்ந்தார். இதைப் பற்றி நீங்கள் சிந்தனையாளனில் விமர்சனம் செய்து ஒரு வரிகூட எழுதவில்லை. ஏன் எழுதவில்லை? இதைக் கண்டு மிகவும் மனம் வருந்தினேன்.

கலைஞரை நடு இரவில் கைது செய்ததைக் கண்டு உங்கள் உள்ளம் பதறவில்லையா? ஏன் சிந்தனையாளனில் இதைக் கண்டித்து எழுதவில்லை. இதுதான் இனப் பற்றா? தி.மு.க. ஊர்வலத்தில் கொலை வெறி தாண்டவமாடியது. நீங்கள் அதைக் கண்டுகொள்ளவேயில்லை. 'இந்து', 'தினமணி'யும் தலையங்கம் தீட்டினார்கள்.

கலைஞரையும் செயலலிதாவையும் ஒன்றாகப் பாவித்து சில சமயங்களில் விமர்சனம் செய்கிறீர்கள்.

இது சரியல்ல. கலைஞர் நம் இனத்தவர். தன்னளவில் இன்றும் பகுத்தறிவுவாதி. செயலலிதா மூடத்தனத்தின் மொத்த உருவம். பார்ப்பனர்கள் எல்லோரும் (திரு. சேஷன், சோ, வெங்கட்ராமன்) கட்டுப்பாடாக ஆதரிக்கின்றனர். சுப்ரமணியசாமி தன் சொந்தக் காரணங்களுக்காக ஆதரிக்கவில்லை. அது வேறு விஷயம்)

கலைஞர் முழு மனிதன் அல்லர். சில குறைகள் இருக்கலாம். எனக்கு நன்கு தெரியும். நான் அரசியலைக் கூர்ந்து கவனித்து வருபவன்.

''குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்''

- என்ற குறட்பாவில் நான் உடன்பாடுள்ளவன். ஆனாலும் கலைஞரையும், தி.மு.க.வையும் விமர்சனம் செய்வது தவறில்லை. செய்ய வேண்டும். ஆனால் செயலலிதாவை ஆயிரம் மடங்கு அதிக விமர்சனம் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். மிகவும் மென்மையாய் விமர்சனம் செய்கிறீர்கள். பாரதீய சனதாவைக் கண்டித்து எழுதுவது மிகவும் சரியானதே. முழு மனதுடன் வரவேற்கிறேன். வேத கால ஆட்சியை வாய்ப்பு கிடைத்தால் மீண்டும் கொண்டு வருவார்கள் என்பதில் அய்யமில்லை.

இந்த அம்மையாரின் தாக்குதலை எதிர்கொள்ள வேண்டி இருக்கக் கூடிய கட்டாய நிலையில் இருப்பதால் கலைஞர் பாரதிய சனதாவுடன் (அகில இந்திய கட்சி) தோழமை கொள்ள வேண்டியுள்ளது.

எனக்கும் பாரதிய சனதாவுடன் கூட்டணி பிடிக்கவில்லை தான், வேறு வழியில்லை.

நண்பர் திரு. தமிழேந்தி என்னைச் சந்தித்தார். நமது நண்பர்கள் திரு ஆ.மா. சகதீசன், திரு. சுந்தரேசன் போன்றவர்கள் மேற்சொன்ன கருத்துடன்தான் இருக்கிறார்கள்.

என் இந்தக் கடிதத்தை 'சிந்தனையாளனி'ல் வெளியிடுங்கள். தங்கள் கருத்தையும் பின் குறிப்பாக எழுதுங்கள்.

என்றும் உங்கள் அன்புள்ள,
**சே.ப.வெங்கடேசன்**, வேலூர்

(ஆசிரியர் குறிப்பு: தோழர் சே.ப.வெங்கடேசன், ஆகஸ்டு 'சிந்தனையாளன்', "PERIYAR ERA' ஏடுகளை உடனே படிப்பது நல்லது.)

---

சிந்தனையாளன் ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். கடந்த சிந்தனையாளன் இதழில் 'வெள்ளி விழா ஆண்டில் மா.பெ.பொ.கட்சி' எனும் ஆசிரியவுரைக் கட்டுரை எப்போதும் போல் சிறப்புடையதாகவே இருந்தது.

தமிழர்க்கான விடுதலைக்காக நாம் எந்த அளவு முன்னின்று பணி செய்ய வேண்டியிருக்கிறது என்று ஆனைமுத்து அவர்கள் தெளிவுபட குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அவ்வாறு குறிப்பிட்டு எழுதுகிற விளக்கத்தில் தமிழ்த் தேசியம் குறித்துப் பெரியாரின் சிந்தனையையும் செயலையும் குறிப்பிடவே செய்திருக்கிறார். அதாவது அக்கட்டுரையின் இறுதிப் பகுதியில்...

''இன்று பலராலும் நன்கு தூக்கிப் பிடிக்கப்படும் 'தமிழ்த் தேசம்', 'தமிழ்த் தேசத் தன்னுரிமை', 'தமிழ்த்தேசத் தன்னாட்சி', 'தமிழ்த் தேசியம்' என்பவை பெரியாரின் சிந்தனையில் 1938-இல் தோன்றி, 1956இல் தெளிவான வடிவத்தைப் பெற்றவையே'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பெரியார் தமிழ்த் தேசியத்திற்காகச் செயலாற்றியவர் என்பதும், அதை முன்னெடுத்துச் செயற்பட்டவர் என்பதும் வெளிப்படை யானதாக இருந்த போதிலும், பெரியார் பொதுவாகத் தேசத்தையே மறுத்தார் என்பதாகவும், அதன் வழி தமிழ்த் தேசத்தையும் மறுத்தவர் என்பதாகவும் அ.மார்க்சு 'பெரியார்?' எனும் நூலில் குறிப்பிட்டிருப்பதைப் பாராட்டித் திறனாய்வு வெளியிட்டிருக்கிறது சிந்தனையாளன்.

திரு. து. தில்லைவனம் அவர்கள் 'பெரியார்?' நூல் பற்றி எழுதிய நூல் அறிமுகத்தில் பெரியாரை ஆழமாகப் புரிந்து கொள்ள அந்த நூல் பேருதவி செய்வதாக எழுதப்பட்டுள்ளது. நூல் அறிமுகத்தில் எந்த அளவு உண்மை இருக்கிறது என்பதை ஐயா ஆனைமுத்து அவர்களே தெரிவிக்க வேண்டும்.

தவறான செய்திகளைக் கூட எழுத்து மயக்கத்தில் பாராட்டி மகிழ்வது என்பது சிந்தனையாளனின் நெறியாகிவிடக் கூடாது அல்லவா!

- **தமிழரசு**, சென்னை

படிப்பகம்

www.padippakam.com



# புஷ்ஷா - லேடா புத்தி பேதலிச்சா மருந்துக்கு வாடா!

—சங்கமித்ரா

பின்லேடன்

ஒசாமா பின்லேடன்

இன்று உலகம் முழுதும் உச்சரிக்கப்படும் பெயர்.

கையில் அகப்பட்டால் சக்கை சக்கையாக வெட்ட அமெரிக்கர்கள் துடிக்கிறார்கள்.

கூடவே அமெரிக்க ஜால்ராக்களான இங்கிலாந்து - அய்ரோப்பிய நாடுகளின் - துணைத் துடிப்பு.

அல்லாவே நேரில் வந்து விட்டார் - இஸ்லாமியர்களின் கதிமோட்சத்துக்கு-

நேரில் பார்த்தால் தோளில் தூக்கிக் கொண்டாடு வோம் - காலில் விழுந்து வணங்குவோம் - என்கிறார்கள் - இஸ்லாமியப் பெரும்பகுதி மக்கள். உலகம் முழுதும் இஸ்லாமியரிடையே பின்லேடன் மன்றம் - பின்லேடன் பனியன் - இத்யாதி.

**அவரா - இவர்?**

''நம்ப முடியவில்லையே! பள்ளிப் பருவத்தில் கூச்ச சுவாபமும் இரக்க குணமும் உள்ள நல்ல பையனாக இருந்தானே! எல்லாரும் விழுந்தடித்து தொழுகைக்கு ஓடும் போது சத்தமில்லா சிரிப்போடு மூலைப் பெஞ்சில் முடங்கிக் கிடப்பானே'' — என்கிறார் பின்லேடனின் ஆங்கில ஆசிரியர் - பிரையன் பைபீலீட் ஷாய்லர். 'வரலாற்றில் எந்த ஒரு தனி மனிதனும் செய்ததை விட அதிக எண்ணிக்கையில் அமெரிக்கர்களைக் கொன்றவர் - நொண்டி - முடமாக்கி ஊனப்படுத்தியவர் பின்லேடன் தான்' என்கிறார் அமெரிக்காவின் பயங்கரவாத எதிர்ப்பு ஆய்வறிஞர் - லாரி ஜான்சன்.

**ஒரு பணக்காரரும் கொஞ்சம் மக்கள் பற்றும்**

ஒப்புமை இல்லை. கதைக்கு கதையாகப் பார்ப்போம். ஒரு கோடீசுவரரும் - கொடுமைகள் மீது வெறுப்பும் - மக்கள் பற்றும் சேர்ந்த போது - திராவிடர் இயக்கம் வேர் கொண்டது. அவர் பெரியார். துளி கூட வன்முறைக்கு இடம் தராத வரலாற்றுப் பொன்னோவியம் - பெரியார் இயக்க வரலாறு. ஆனால் எல்லா இடத்திலும் - எல்லா காலத்திலும் வன்முறை தவிர்க்கப்படுவதில்லை. பிறப்புப் பாதையை கொஞ்சம் அறுத்து குழந்தையை வெளியில் எடுப்பது போல் புரட்சிப் பாதையில் வன்முறை நிகழ்த்தி புதிய சமுதாயம் படைக்கலாம் என்கிறார் - காரல் மார்க்ஸ். பின்லேடன் இஸ்லாமிய வெற்றி என்ற இலக்கை வைத்து போராடும் கோடீசுவரர். பணவசதியும் இஸ்லாமியப் பற்றும் ஒன்று சேர்ந்த 21ம் நூற்றாண்டு ''புனிதப் போர்'' - இவர் நிகழ்த்துவது என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

**கட்டுமானப் பணியில்**

லேடனின் அப்பா அவாத்பின் லேடன். சௌதியைச் சேர்ந்தவர். 10 மனைவிகள். 54 குழந்தைகள். இவருடைய பாலஸ்தீன மனைவிக்கு பிறந்த 24வது குழந்தை தான் பின்லேடன் (இது என்ன கணக்கோ? வயதை வைத்து சொல்வார்களாக இருக்கும்). அவாத் லேடனின் குடும்பச் சொத்து 500 பிலியன் டாலர் (ஒரு பிலியன் = நூறு கோடி. ஒரு டாலர் ரூ 45). ஆக ரூ 20 லட்சம் கோடிக்கு சொந்தக்காரர். பின்லேடனின் பங்கு மட்டும் 300 மிலியன் டாலர் (ரூ 1350 கோடி). தனியாக கட்டுமான வேலையிலும் கஞ்சா விவசாயத்திலும் பின்லேடன் இதைப் பெருக்கியிருக்கிறார் என்று சொல்லப் படுகிறது.

**இன்று வருமானம்**

இதெல்லாம் பழங்கதை. இன்று நிலவரம் அமெரிக்க கிறிஸ்தவர்களுக்கும் - அரேபிய இஸ்லாமியர்களுக்கும் நடக்கும் சண்டை மாதிரி - உலக நிகழ்ச்சிகளை பின்லேடன் ஆக்கிவிட்டார். இதில் உலகத்தின் 200 கோடி கிறிஸ்தவர்கள் ஒருபக்கம் - 120 கோடி முஸ்லிம்கள் இன்னொரு பக்கம். லேடனுக்கு உலகம் முழுதும் இருந்து பணம் வருகிறது - தனிநபர் - மசூதி வசூலாக; இஸ்லாமிய அரசுகள் கோடி கோடியாகக் கொட்டித் தருகின்றன. கஞ்சா உற்பத்தியில் லேடன் பணம் சம்பாதிக்கிறார் என்பது அமெரிக்கக் கதை என்றே வைப்போம் (1980 - 10,000 ஹெக்டேராக இருந்த ஆப்கன் கஞ்சா விவசாயம் இன்று 30,000 ஹெக்டேராம்!).

**குடும்பம் - குழந்தைகள்**

பின்லேடனுக்கு மூன்று மனைவிகள் (சிலர் 4 என்கிறார்கள்). ஆப்கன் தலைவர் - முல்லா ஓமர் மகளை 4வது மனைவியாக திருமணம் செய்தாராம். இவருடைய மகனுக்கும் இவர் இய்க்கத் தளபதியின் மகளுக்கும் சென்ற ஆண்டு திருமணம் நடந்தது. அப்போது தான் பலர் இவரைப் பார்த்திருக்கிறார்கள். மற்றபடி - இந்த 44 வயது இளைஞரின் வாழ்வு - பதுங்கு குழி - பாதாள அறை - நித்த நித்த மரணம் - நினைத்த போது இடமாற்றம் என்று இருக்கிறது.

**அமெரிக்கா வளர்த்த கடா**

இன்று ஆகாசத்துக்கும் பூமிக்குமாக குதிக்கும் அமெரிக்கர்கள்தான் - பின்லேடனை வளர்த்தவர்கள். 1970ல் - ஆப்கானிஸ்தானில் இருந்த ரஷ்ய ஆட்சியை ஒழிப்பதற்காக - அமெரிக்கா - புரட்சியாளர்களுக்கு கொரில்லாப் பயிற்சிக் கொடுக்க ஆப்கானிஸ்தானில் முகாம்களைத் தொடங்கிய போது - அதில் வி-அய்-பி-மாணவர் பின்லேடன். 1989ல் - ரஷ்யர்கள் - 13000 பேரை சாகக் கொடுத்த சோகத்துடன் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறக் காரண மானவர் பின்லேடன்தான். பிறகு மெல்ல மலர்ந்து - விரிந்து - வளர்ந்தது பின்லேடன் அமைப்பு.

**யாரை விடும் அதிகார ருசி?**

எனவே 1988ல் பின்லேடன் - அல் குவேதா - என்ற தனது சொந்த அமைப்பைத் தொடங்கினார். அடித்தளம் - என்பதுதான் இதன் அர்த்தம். பெரும் அளவு இவரைச் சார்ந்து - இவரால் வளர்ந்து இருப்பவர்கள்தான் - ஆப்கன் ஆட்சியாளர்களான தாலிபன். (கடவுளின் சீடர்கள்). சுமார் 10,000 பேருடன் தொடங்கப்பட்ட பின்லேடன் அமைப்புக்கு இன்று 50 நாடுகளில் - கிளைகள் - ஆதரவாளர்கள் - இணை அமைப்புகள் என்று இருக்கிறார்கள். 3000 பேர் - உயிரை விடத் தயாராக பின்லேடன் ஆணைக்குக் காத்திருக்கிறார்கள்.

**ஜென்ம எதிரிகள்**

பின்லேடனின் ஜென்ம எதிரிகள் - 1 அமெரிக்கா. சௌதியில் ராணுவ தளம் அமைத்ததற்காக - ஈராக்கை தாக்கியதற்காக - இஸ்லாமியர்களுக்கு எதிராக இருப்பதாக பின்லேடன் கருதுவதற்காக 2 இஸ்ரேல் - பாலஸ்தீனத்தைப் பிடித்ததற்காக - அமெரிக்காவுடன் குலாவுவதற்காக - சியானிசம் என்ற யூதர் (இதுதான் கிறிஸ்துவ மதத்துக்கும் அப்பன்) மதம் தான் உலகத்தின் சிறந்த மதம் என்று சொல்லி வருவதற்காக - 3 இந்தியா - காஷ்மீரை விடாததற்காக; பாகிஸ் தானை உடைத்து வங்காள தேசமாக ஆக்கியதற்காக வேடிக்கை - வங்காள தேச முஸ்லிம்கள் கூட பின்லேடன் பின்னால் அணிவகுப்பதுதான். தமக்குள் அடி - உதையில் இருக்கும் இஸ்லாமிய நாடுகள் - பின்லேடனை ஆதரிக்க வெளிப்படையாகவும், ரகசியமாகவும் வரிசையில் நிற்பது இன்னொரு வேடிக்கை.

படிப்பகம்

www.padippakam.com



### வேதனையான சாதனைகள்

பின்லேடன் சாதித்தது - சாதித்ததாகச் சொல்லப் படுவது (அமெரிக்கா சொல்லும் எல்லாமும் நம்பக்கூடியது அல்ல. பின்லேடனுக்கு ஆயுதம் சப்ளை செய்தவர்கள் என்று ஒரு மருந்து உற்பத்தி நிலையத்தை தாக்கி பிறகு வருத்தம் தெரிவித்தவர்கள் அமெரிக்கர்கள்) - 1993ல் அமெரிக்க உலக வணிக மையத்தில் குண்டு (இன்று அது அடியோடு போய்விட்டது) அன்று சாவு-6; 1994ல் பிலிப்பைன்ஸ் விமானத்தில் குண்டு - சாவு1; 1995ல் எகிப்து பிரசிடென்ட் ஹோஷ்னி முபாரக்கை கொலை செய்ய முயற்சி; 1996ல் சவுதியில் அமெரிக்கப் பட்டையினர் குடியிருப்பில் தாக்குதல் - சாவு 19 - அமெரிக்க போர் வீரர்கள்; 1998 - நைரோபி - கென்யாவில் அமெரிக்க தூதரகங்கள் தகர்ப்பு - 224 பேர் சாவு; 2000 - ஏமன் நாட்டில் அமெரிக்க ராணுவக்கப்பல் மீது தாக்குதல் - 17 அமெரிக்கப் போர் வீரர்கள் சாவு; 2000ல் - அமெரிக்க வெள்ளை மாளிகையும் - அய்ம்முக ராணுவத் தலைமையகமும் - பின்லேடன் தாக்குதல் கருதி காலி செய்யப்பட்டன. இப்போது செப்டம்பர் 11 உலக வணிக மையத் தாக்குதல் பின்லேடன் மறுத்திருக்கிறார் - நான் இல்லை என்று; அமெரிக்கா சொல்லுகிறது - எல்லா ஆதாரமும் பின்லேடனைக் காட்டுவதாக.

### செப்டம்பர் 11,2001 – இழப்புகள்

செப்டம்பர் 11, 2001ல் - உலக வணிக மையமும் - அய்ம்முகமும் (பெண்டகன்) தாக்கப்பட்டதில் 54 நாடுகளைச் சேர்ந்த 10,000 பேர் வரை அமெரிக்காவில் செத்திருக்கலாம்; இழந்த கட்டிடங்கள் - உலக வணிக மையம் - 1973ல் - 130 கோடி டாலர் - ரூ 5200 கோடி பெண்டகன் இழப்பு ரூ 100 கோடி இருக்கலாம். வணிக மையத்தின் 1200 வாடகை தாரர்களின் ஆள் இழப்பு சொத்து இழப்பு - அமெரிக்காவின் நேரடி இழப்புகள் 30 பிலியன் டாலர் (ரூ 1,42,500 கோடி) என்று தோராய மதிப்பு; அமெரிக்க பொருளாதார இழப்பு 90 மில்லியன் டாலர் (ரூ 4,27,500 கோடி).

### பின்லேடன் "பொன் மொழிகள்"

அமெரிக்காவின் 'டைம்' பத்திரிகைப் பேட்டியில் பின்லேடன் சொல்லுகிறார் "அமெரிக்காவுக்கு எதிரான பகை என்பது எமது மதக்கடமை; கடவுள் எங்களுக்கு உதவுவார்." இவரது இயக்கம் - இஸ்லாம் அல்லாத அரசுகளுக்கு எதிராக, தீவிரமாக, வன்முறையுடன் செயல்பட அர்ப்பணிக்கப்பட்டது என்கிறது இந்தியாடுடே (26.09.01). 'போரிடுவது எமது மதத்தின் ஒருபகுதி. மதக் கோட்பாட்டின் சிறு பகுதியை மறுத்தாலும் பெரும் பாவம் செய்தவர்களாவோம்' - பின்லேடன் (அவுட்லுக் - 24.09.01) 'இந்தியாவுக்குள் நுழைய காஷ்மீர்தான் வாயில் என்றும் ஒருமுறை சொல்லியிருக்கிறார் (அவுட்லுக்).

1998ல் - உலகின் பல நாடுகளிலிருந்து 100-க்கு மேற்பட்ட பேராளர்கள் பங்கேற்ற கூட்டத்தில் கந்த காரில் இவர் சொன்னார் "காஃபிர்களை - நீங்கள் குரானைக் காட்டி வெல்ல முடியாது. அதற்கு உங்கள் முஷ்டிதான் பயன்படும்" ஒரு கையில் குரானும் மறுகை முஷ்டியுமாக உயர்ந்த இவர் குரலை - ஏகமனதாக கூட்டத்தினர் வரவேற்றனர் (அவுட்லுக்). இதற்கு பிறகுதான் - ஆப்பிரிக்க நாடுகளில் அமெரிக்க தூதரகங்கள் தகர்க்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

### பிடிக்க முடியாத எதிரி

பிரம்மாண்டமான குண்டுவெடிப்பு - புகைப் படலப் பின்னணியில் புஷ் சொல்லுகிறார் - இந்த சுண்டெலிதான் இதற்குக் காரணம் - இது தினமணி கேலிச் சித்திரம். உலகம் முழுதும் ஆய்வாளர்களின் கருத்து - பின்லேடனைப் பிடிக்க முடியாது என்பதுதான். 'இதற்கு மேலும் இரத்தம் சிந்த வேண்டாம்' என்று அமெரிக்க போர் முயற்சிகளுக்கு அமெரிக்காவிலேயே எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது. ஒரு மரம் ஒரு கோடி தீக்குச்சிகளைத் தரும். ஆனால் ஒரு தீக்குச்சி ஒரு கோடி மரங்களை எரித்த பிறகும் கூட - தான் முற்றிலும் அழிந்து விடாமல் இருக்க முடியும். ஆக்க வேலைக்கு ஆயிரம் காலம் - ஆயிரம் கோடி பணம் தேவைப்படும். அழிவு வேலைக்கு? ஒரு விநாடி - ஒரு பைசா - போதுமே! ஒரு தீக்குச்சி ஒரு பைசா தானே! அழிவு ஒரு சாதனை அல்ல. அதில் பெருமைப்பட ஒன்றுமே இல்லை. அழிவை உலகத்தின் எந்த மதமும் ஏற்காது. வரலாற்றின் எந்த காலமும் ஏற்கவில்லை. ஆனால் அழிவிலிருந்து மனிதன் பாடம் கற்கவில்லையே!

### யார் அந்த எதிரி?

'குள்ளன்' என்கிற பிரஞ்சு நாவலில் - குள்ளன் என்று கேலி செய்யப்பட்டதற்காக - அரண்மனைக் குள்ளன் - ராஜாங்கத்தில் கலகம் - அந்தபுரத்தில் குழப்பம் - ராஜா சாவு - ராணி சிறையில் - என்று எண்ணற்ற அழிவுகள் ஏற்படுத்துகிறான். இது நோபல் பரிசு பெற்ற நாவல். இதில் நாம் என்ன கற்றோம்? 'குள்ளனைக் கேலி செய்யாதே - குள்ளர்களே அழிவுகளைச் செய்யாதீர்கள்' என்ற பாடத்தைக் கற்றோமா? அமெரிக்காவை கொளுத்திய எதிரி யார் - பின்லேடன் என்ற சுண்டெலியா, ஹிரோஷிமா - நாகசாகிக்கு பழிவாங்கிய ஜப்பானா, ஓசையில்லாமல் நெருப்பு வைத்து பழியை முஸ்லிம் நாடுகள் மீது போடும் - இஸ்ரேலா? அமெரிக்காவின் பொருளியல் அட்டூழியங்களைப் பொறுக்காத 185 நாடுகளின் ஏதோ ஒரு மனிதனா? துண்டாகச் சிதறி-இன்று அவமானத்தில் குமையும் ரஷ்யாவா? பஸ்மதி அரிசிக்கு உனக்கு ஏன்டா காப்புரிமை என்று சினக்கும் டேராடூன் - பஸ்மதி விவசாயிகளா? பணத்தையும் படோடோபத்தையும் பார்த்து இயல்பாக மனித மனத்தில் வரும் வெறுப்பா - எது காரணம்? அமெரிக்கா எரிவது பார்த்து - வேணும் இவனுக்கு என்று நினைக்கும் மக்கள் கணிசமாக இருக்கிறார்களே - ஏன்?

### லேடா – உன் அறிவு தெளியட்டும்!

சவுதி பல்கலைக் கழகத்தின் நிர்வாகவியல் பள்ளியின் பட்டதாரியான லேடன் அவர்களே! உங்கள் முகத்தில் - ஒரு கொலைகாரன் என்ற கொடூரமே தெரியவில்லையே - நீங்களா இந்த அழிவுகளைத் தேடித் திட்டமிட்டு நாடி நாசம் செய்கிறீர்கள்? மனித இனம் 10 கோடி ஆண்டு மூத்தது. இஸ்லாம் 1500 ஆண்டு குழந்தைதானே? மனித இனத்தின் சரி பாதி பெண் இனத்தை துணி மூட்டைகளாக பாவிப்பது - ஒரு மனிதனுக்கு 4 மனைவி சரி என்கிறவர்கள் - ஒரு பெண்ணுக்கு 4 கணவனும் சரிதான் - என்று மதக் கோட்பாட்டை மறுபார்வை செய்யாதது - ஆண் - பெண் சமத்துவம், சர்வ மக்கள் சமத்துவம் - எல்லாம் குர்ரானில் இல்லையா? இஸ்லாமிய நாடுகளுக்குள்ளேயே நடக்கும் இன - மொழிக் கொலை வெறிகள் - இஸ்லாம் முடிவுமல்ல; அது தீர்வுமல்ல என்பதைச் சொல்லவில்லையா?

### புஷ்ஷா – உனக்குப் புத்தி வரட்டும்

சோமாலிய மக்கள் - பட்டினியில் லட்சம் லட்சமாக செத்து மடிந்தபோது - லட்சம் லட்சம் டன்களாக உபரிக் கோதுமையைக் கடலில் கொட்டிய 'அற்புதக் கலாச்சாரத்தின்' இன்றைய பிரதிநிதி புஷ் - அவர்களே! அமைதியடையுங்கள். பணத்தினாலோ - அறிவினாலோ - எவனும் - எவனுக்கும் கொப்பனாக முடியாது என்ற - இந்த பஞ்ச பூதப் பூமியின் மிகப் பழைய பாடத்தைப் புரிந்து கொள்ளுங்கள். அழிவின் எதிர்வினை அழிவு என்றால் பேரழிவே விளைவு என்ற டால்ஸ்டாய் கதை தெரியாதா? பத்தாயிரம் அடி உயரம் பறந்து விட்டேன் என்றதாம் கழுகு. எனக்கு மேலேயா - என்றதாம் முதுகில் அமர்ந்திருந்த ஊர்க்குருவி. அடிக்கு அடி மிதிபட்ட ஆயிரம் கோடி எறும்புகளில் - ஒரு எறும்பு சொன்னது - யானையே, உனக்கு ஒரு காது இருக்கிறது; எனக்கும் ஒரு வழி இருக்கிறது. திமிர் பிடித்த யானை ஒருநாள் துடிதுடித்துச் செத்தது - இரண்டு எறும்புகள் - யானையின் காதுக்குள் உயிருக்குத் துணிந்து நுழைந்து கலகம் செய்த போது! புஷ்ஷா - லேடா உங்களுக்கு மருந்து எங்களிடம் இருக்கிறது; அதன் பெயர் திருக்குறள்:

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்!

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை!

படிப்பகம்

www.padippakam.com

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி அக்டோபர் - 2001

| பெயர் | ஊர் | ரூ.பை |
|---|---|---|
| டாக்டர் பெ. இளங்கோவன் | அரியலூர் | 200.00 |
| ச.நாத்திக நந்தனார் | வண்டலூர் | 100.00 |
| ஓர் அன்பர் | சென்னை | 50.00 |
| வ.அருவி, வ.அரிமா | சென்னை | 10.00 |
| சீ.இளமதி, சீ.அகிலா | சென்னை | 100.00 |
| முத்து அன்பழகன் | சீர்காழி | 10.00 |
| அழகு அன்பழகன் | சீர்காழி | 10.00 |
| அ. அறிவுக் கடல்- இராஜ்குமார் | சிதம்பரம் | 10.00 |
| க.முகிலன் | சோளிங்கபுரம் | 50.00 |
| கி.கலை | சோளிங்கபுரம் | 50.00 |
| க.குப்புசாமி | சோளிங்கபுரம் | 50.00 |
| ஜெ.அய் ஏ.காந்தி | எறும்பி | 10.00 |
| வள்ளி விசயன் | திருக்கோவிலூர் | 20.00 |
| பகுத்தறிவன் | அரக்கோணம் | 25.00 |
| ந.அப்துல்ரகுமான் | சென்னை | 300.00 |
| சி.பி.ச. அறிவொளி | இரும்புலிக்குறிச்சி | 50.00 |
| நா.இளங்கோ | அரக்கோணம் | 100.00 |
| ந. கருணாகரன் | திருச்சி | 25.00 |
| ப.ம.அதியமான் | திட்டக்குடி | 25.00 |
| ப.ம. மதிஒளி | திட்டக்குடி | 25.00 |
| இர.நடராசன் | வேலூர் | 300.00 |
| கி.மாஜினி | தாம்பரம் | 20.00 |
| அ.கமலராசு | வேலூர் | 100.00 |
| ப. மணிமொழி | சென்னை | 350.00 |
| மா. முத்துச்சாமி | சீர்காழி | 100.00 |
| அதியமான் | சென்னை | 100.00 |
| பொ.செல்வன் மற்றும் மனைவி, மகன் | மயிலாப்பூர் | 300.00 |
| வீ. இராசாப்பிள்ளை | சிதம்பரம் | 100.00 |

### மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி

| | | |
|---|---|---|
| ந. அப்துல் ரகுமான் | சென்னை | 300.00 |
| கி.விடுதலை | சோளிங்கபுரம் | 50.00 |
| சுகுணா - வடிவேலு | சென்னை | 10.00 |

### அங்கயற்கண்ணி - செழியன் வாழ்க்கை ஒப்பந்த விழா

பாவலரேறு பெருஞ்சித்திரனார் பேர்த்தியும் புலவர் இறைக்குருவனார் - பொற்கொடி ஆகியோர் மகளுமான அங்கயற்கண்ணிக்கும் மு. வைத்தி - அரியாள் ஆகியோர் மகன் செழியன் (எ) சிவலிங்கத்திற்கும் 2.8.2001 அன்று காலை, சென்னை - திருவான்மியூர் சிறீவித்தியா திருமண மண்டபத்தில் பழ. நெடுமாறன் தலைமையில் திருமணம் நடைபெற்றது. சொல்லாய்வு அறிஞர் அருளியார் வரவேற்புரையாற்றினார். தென்மொழி ப. துரையரசன், நா. அருணாசலம், புலவர் குமர. தன்னொளியன், பாலகிருட்டிணன், வீ. இறையழகன், சா. சந்திரேசன், வழக்குரைஞர்கள் இரா. கருப்பன், த. கலைமணி, சாம்பமூர்த்தி, சிவராசு, கண்ணன், நிலவழகி ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். மா. பூங்குன்றன் நன்றி நவின்றார்.

## வாழ்க்கை ஒப்பந்த விழாக்கள்

### இரா. சுந்தர் - து. சித்ரா

சீர்காழி வட்டம் கோணயாம்பட்டினம் கு. இராதா கிருஷ்ணன் நீலாவதி ஆகியோரின் மகன் இரா.சுந்தருக்கும், நாகை மாவட்டம், விஞ்சூர் வட்டம், குரும்பூர் சி. துரைசாமி - இந்திராணி ஆகியோரின் மகள் து. சித்ராவுக்கும், 14.9.2001 காலை சீர்காழி வசந்த மாளிகை திருமணக் கூடத்தில் வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெற்றது. மணமக் களின் சார்பில் சிந்தனையாளன் வளர்ச்சி நிதி ரூ.100 அளிக்கப் பட்டது.

### தமிழ். முகிலன் - வ.கங்கை

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் முதன்மைப் போராளி மா.செ. தமிழ்மணி - கோதையம்மை ஆகியோர் மகன் தமிழ். முகிலன், தருமபுரி மாவட்டம் நுணங்கனூர் வரதராசன் -சுலோச்சனா ஆகியோர் மகள் வ.கங்கை ஆகிய இருவர்க்குமான வாழ்க்கை ஒப்பந்த விழா 23.9.2001 அன்று தாமரை பெருஞ்சித்தனார் தலைமையில் காஞ்சிபுரம் வெங்கடேசுவரா திருமண அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. தேன்மொழி அருளி தமிழ் வாழ்த்துப்பாட, இறை. பொற்கொடி வரவேற்புரை நிகழ்த்தினார். மணமக்களை அறிமுகப்படுத்திப் புஞ்சை. கோதண்டன், கோ.வி. பாவேந்தன் ஆகியோர் பேசினர். முன்னதாக, 'தமிழர் உரிமையும் தமிழ்த் திருமணமும்' என்னும் தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கிற்குப் பழ. நெடுமாறன் தலைமை தாங்கினார். சுபவீ, தியாகு, இறைக்குருவனார், ப. அருளி, அரங்க குணசேகரன், முனைவர் ந. அரணமுறுவல், புலவர். கி.த.பச்சையப்பன், புலவர். கு. கலியபெருமாள், வாலாசா வல்லவன், க. கோதண்டன், நெல்லை அதியமான், கா.மு. இஸ்மாயில் ஆகிய தோழர்கள் பங்கேற்றனர். இறுதியில் த. தமிழினியன் நன்றி கூறலுடன் விழா சிறப்பாக நிறைவுற்றது. மருத்துவர் விமுனா மூர்த்தி நிகழ்ச்சிகளை நல்ல வண்ணம் ஒருங்கிணைத்தார்.

### த.கதிரவன் - ஞா. மஞ்சுளா

அரக்கோணம் எம். தனபால் - உமாபரமேசுவரி மகன் த. கதிரவன், சென்னை இராயபுரம் கே. ஞானப்பிரகாசம் - மல்லிகா மகள் ஞா. மஞ்சுளா ஆகியோர் தம் திருமணம் 10.9.2001 அன்று அரக்கோணத்தில் கவிஞர். தமிழேந்தி தலைமையில், சொல்லாய்வறிஞர் ப. அருளி அவர்களால் சிறப்பாக நடத்தி வைக்கப்பட்டது.

மருத்துவர் சு.நரேந்திரன் அவர்களின்
'அறிவியல் தமிழின் தேவை' தொடர் கட்டுரை
அடுத்த இதழில் இடம் பெறும்

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக வெளியிடுபவர், ஆசிரியர்: வே.ஆனைமுத்து, 19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை - 5. அச்சுக்கோப்பு: 'நம் பிராசஸ்', சென்னை-18. அச்சிட்டோர்: பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம், சென்னை-5. தொலைபேசி: 852 28 62

www.padippakam.com

Licenced to post without prepayment WPP No. 344
Registrar of Newspapers of India under licence No. 24452 / 74. 'Sinthanaiyalan' TN/ Chief PMG/618/2001

# கதை தேறாது



போரெழுதும் சீற்றத்தின் வேங்கை யாகப்
பொதுவாழ்வைத் தொடங்கியவர் பெரியார்; கொள்கை
ஏர் உழுதார்; சிலர்அவரை இடையே விட்டு
எதைஎதையோ அரசியலில் இழக்கப் போனார்
ஊர்முழுதும் சுருட்டியதைத் தவிர அந்தோ
உருப்படியாய் என்னசெய்தார்? அவர்கள் விட்ட
சீரழிவின் சின்னந்தான் நமக்கு வாய்த்த
செயலலிதா என்கின்ற பார்ப்ப னத்தி

உதட்டுக்கும் மனத்துக்கும் ஒட்டாப் பேச்சு
ஒவ்வொன்றாய்க் கொள்கைகளை விற்றும் ஆச்சு
எதிர்காலக் கனவுகளைச் சிதைத்து விட்டார்
எச்சில்இலைப் பதவிக்காய் மானம் விட்டார்
சதிகார பா.ஜ.க. வளர்ச்சி, மீண்டும்
சாதிகளின் புத்தெழுச்சி இவற்றை யெல்லாம்
அதிகார இருப்புக்காய் அணைத்துக் கொண்டார்
அம்மாவி டம்தோற்றார்; அலறு கின்றார்

குற்றேவல் செய்வதற்கு அமைச்சன் மார்கள்
குழைவுடனே வாலாட்டக் காவல் நாய்கள்
வெற்றுடலை விறகாக எரித்துச் சாகும்
வெட்டித் தமிழ்மடையர் தாயின்சேய்கள்
வெற்றிஇனித் தொடர்கதைதான் நீதிமன்ற
விளக்கெண்ணெய்த் தீர்ப்புகளைக் கரன்சி நோட்டுக்
கற்றைகளால் மாற்றுகின்ற கலைய றிந்த
கைகாரி முன்னாலே ஏன் ஒப் பாரி?

அன்றைக்கும் இராமனது செருப்புத் தானே
ஆண்டதிங்கு! அதுபோலப் பன்னீர் செல்வம்
இன்றைக்கு ஆளுகின்றார்; நாளைக் கிங்கே
எசமானி அம்மாளின் தோழி இன்னோர்
பன்றிக்கும் வாழ்வுதர ஆசைப் பட்டால்
பைந்தமிழர் வெடிப்புற்றா புரட்சி செய்வார்?
என்றைக்கும் நடக்காது; வாக்குச் சீட்டு

– 'தமிழேந்தி'

தமிழம்மா பதிப்பகம்
முற்போக்கு நூல்கள் விற்பனையகம்
எண். 59, விநாயகபுரம்
அரும்பாக்கம், சென்னை-106
நூறடி சாலை அருகில்
தொலைபேசி எண்: 4753373

19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை-600 005. தொ.பே.எண். 852 28 62

படிப்பகம்